# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 29 வியாழக்கிழமை (13.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 048


## கிழக்கில் 90வீதமான பகுதி வெள்ளத்தில்; வடக்கில் பொங்கல்விழா அவசியம்தானா?

கொழும்பு, ஜன. 13

நாட்டில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் 90 சதவீதமான பகுதிகள் நீரில் மூழ்கி மக்கள் வாழ்வாதாரத்துக்கே தவிக்கும் நிலையில், வடக்கில் அரசு பெரும் பொருள் செலவில் பொங்கல் விழா கொண்டாடுவதைத் தவிர்க்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் இப்படி - கிராண்பாஸ் ஸ்ரீ ஜயப்பன் சேவா பீடாதிபதியும், ஜனாதிபதியின் இந்துமத இணைப்பாளருமான தேசபந்து சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

நாட்டில் கடும் மழை, வெள்ளம் காரணமாக கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. அம்மக்கள் கடும் வாழ்வாதார அடிப்படை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலையில் உள்ளனர்.

உலர் உணவுக்காகவும், நிவாரண உதவிகளுக்காகவும் கையேந்தி பெரும் அவலத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர். இப்படியான சூழ்நிலையில் வடக்கில் யாழ்ப்பாணத்தில் அரச மட்டத்திலான பொங்கல் விழாக் கொண்டாட்டங்கள் பெரும் பொருள் செலவில் நடத்தப்படுவதைத் தவிர்த்து சூரிய

(28ஆம் பக்கம் பார்க்க)

# மோசமான காலநிலையால் ஜனாதிபதியின் மட்டக்களப்பு - அம்பாறை பயணம் ரத்து

## பொலன்நறுவையுடன் கொழும்பு திரும்பினார்

கொழும்பு, ஜனவரி13

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலநிலை சீரில்லாத காரணத்தால் பொலன்நறுவையுடன் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.**

ஜனாதிபதியுடன் முக்கிய அமைச்சர்கள் சிலரும் அதிகாரிகள் சிலரும் சென்றிருந்தனர். ஜனாதிபதி குழுவினர் பொலன்னறுவை கல்அருண பிரதேசத்துக்கும் கல்அருண வித்தியாலயத்தில் உள்ள நலன்புரி நிலையத்துக்கும் விஜயம் செய்தனர்.

''எமது சகோதரர்கள் அனர்த்தத்துக்குள்ளாகியுள்ள நிலையில் கட்சி, நிறம், இன, மத பேதம் பாராது சகலரும் ஒன்றிணைந்து மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.''

(28ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் இதுவரை 13 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

பட்டிப்பளையில் மூவர், போரளைப்பற்றில் மூவர், வாழைச்சேனையில் மூவர், வாகரையில் ஒருவர், செங்கலடியில் ஒருவர், மண்முனை வடக்கில் ஒருவர், களுவாஞ்சிக்குடியில் ஒருவர் என 13 பேர் உயிரிழந்துள்ளார்கள் என மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ஒ-சி)

## பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒன்பதரை லட்சமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜன.13

நாடு முழுவதும் தொடர்ந்து பெய்து வரும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை ஒன்பதரை லட்சத்தைத் தாண்டியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டமே அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும்.

இதுவரை அங்கு 5லட்சத்து 33 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய இடர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி கூறியவை வருமாறு:-

நாடு முழுவதும் பெய்துவரும் அடைமழையால் இதுவரை

(28ஆம் பக்கம் பார்க்க)

## பாழடைந்த கிணற்றினுள் இருந்து கோப்பாயில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

கோப்பாய் பகுதியில் கைவிடப்பட்ட கிணறு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அப்பகுதியில் வீசிய துர்நாற்றத்தை அடுத்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மேலதிக பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு முன்பாக உள்ள வயல்

(28ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களை 'வேட்டையாடும்' கட்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களை தேடும் நடவடிக்கைகளில் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதியும் அறிவிக்கப்பட்ட நிலையில் கட்சிகள் 'தேடுதல் வேட்டையில்' குதித்துள்ளன.

அனேகமான கட்சிகள் நேரடியாக (28ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....

சொல்பெக் EW 050



Hayleys

021 2221292


## வீதியில் குண்டு குழிகளைத் தவிர்க்க சாரதி முயற்சிக்க கவிழ்ந்தது வாகனம்

### ஒருவர் சாவு; மூவர் காயம்; புங்குடுதீவில் சம்பவம்

வலி.வடக்கு,ஜன.13

பொருள்களுடன் குறிகாட்டுவான் துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம் வீதியில் காணப்பட்ட குண்டு, குழிகளைத் தவிர்த்து ஓட முயன்றபோது கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. இதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான பாலசிங்கம் விஜயதீபன் (வயது 35) என்பவர் விபத்து நடந்த இடத்திலேயே மரணமானார்.

நயினாதீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து ஆண்டுத் திவசத்திற்கும் கடைக்கும் பொருள்களை வாங்கிக் கொண்டு வாடகை வாகனத்தில் சென்ற சமயமே விபத்து இடம்பெற்றது என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

ஆண்டுத் திவசத்திற்குப் பொருள்களை (28ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுத்தாக்கல் ஜன.20 முதல் 7 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம்,ஜன.13

இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மேற்கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் மார்ச் மாதம் நாடளாவிய (27ஆம் பக்கம் பார்க்க)


NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

**Certificate in Computer Science @ NIBM**

021 222 0360/61/62

National Institute Of Business Management
No 40 College Road (opposite to Jaffna hindu play ground)
jaffna.

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூட்டமைப்பை உடைக்க முயற்சி?

யாழ்ப்பாணம், ஜன. 13

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைத்துச் சபைகளிலும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை நிறுத்துவது என அக்கட்சியின் யாழ். மாவட்டக் கிளை தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களை விண்ணப்பிக்கும்படி விளம்பரம் செய்யப்பட்டிருந்த நிலையில் தமிழரசுக் கட்சியின் திடீர்த் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக் கூட்டம் இல. 30 மாட்டின் வீதியில் உள்ள கட்சிப் பணிமனையில் நேற்று நடைபெற்றதாக கட்சியின் நிர்வாகச் செயலாளர் கு.சே.குலநாயகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 'வீடு' சின்னத்தில் போட்டியிட முன்வருமாறும் அதற்கான விண்ணப்பங்களை கட்சியின் அந்தந்தத் தொகுதிக் கிளைகளூடாகத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும் கட்சி உறுப்பினர்களைக் கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கூட்டமைப்புத் தனியாகவும் தமிழரசுக் கட்சி தனியாகவும் வேட்பாளர் தெரிவுக்குக் களம் இறங்கி உள்ளன. இது ஆதரவாளர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது**

கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர் தெரிவுக்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி தனியான ஒரு வேட்பாளர் தெரிவுக்கு முயன்றிருப்பது கூட்டமைப்பு ஆதரவாளர்கள், அனுதாபிகள் மத்தியில் பெரும் குழப்பங்களையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தி உள்ளது.

வேட்பாளர் தெரிவுக்காகத் தமிழரசுக் கட்சி தெரிவுக் குழு ஒன்றையும் நேற்று நியமித்தது.

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கு முயற்சிக்கிறதா என்று கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசாவைக் கேட்டபோது "அப்படி எதுவும் இல்லை'' என்று அவர் மறுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே தேர்தலை எதிர்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

எனினும், கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு குறித்த விளம்பரம் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனவும் குறிப்பிட்டார். (உ)

## கடற்படைத் தளபதிக்கு அட்மிரல் பதவி



கொழும்பு, ஜன. 13

இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸார சமரசிங்க அட்மிரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. முப்படைகளின் பிரதம தளபதியான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான உத்தரவை வழங்கி உள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதியுடன் அட்மிரல் திஸார சமரசிங்கவின் பதவிக்காலம் முடிவடையவுள்ளது. இதன் பின்னர் அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாது என்று கூறப்படுகிறது.

ஓய்வுபெற்றுச் செல்வதற்கு ஒரு சில நாள்களே உள்ள நிலையில் இவரை அட்மிரலாக பதவி உயர்த்தியுள்ளார் ஜனாதிபதி.

ஓய்வுபெற்ற பின்னர் அட்மிரல் திஸார சமரசிங்க ஆஸ்ரேலியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கிடையே கடற்படையின் பிரதம படை அதிகாரியான ரியர் அட்மிரல் எஸ்.திஸாநாயக்க இம்மாதம் 15ஆம் திகதி முதல் கடற்படையின் புதிய தளபதியாக நியமனம் செய்யப்படுகிறார் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். (உ)

## இராணுவ முகாம்களும் வெள்ளத்தில்

மட்டக்களப்பு,ஜன 13

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடும் மழை காரணத்தினால் இராணுவ முகாம்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தந்திரிமலை, பொயகொட முகாம்கள் நீரில் மூழ்கியுள்ளன. இப் பிரதேசத்தில் 260 படையினர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடுமையான வெள்ளம் ஏற்பட்டுள்ளதனால் படையினரைத் தரை வழியாக சென்று மீட்க முடியாது எனவும், ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்பதற்கான முயற்சி எடுக்கப்படும் எனவும் அனுராதபுர அனர்த்த நிவாரணக் குழு தெரிவித்தது.

வெள்ளத்தில் சிக்கிய 20 படையினர் ஏற்கனவே மீட்கப்பட்டு தந்திரிமலை விகாரையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மல்வத்து ஓயா பெருக்கெடுத்து ஓடுவதனால் இங்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை, மழை வெள்ளம் காரணமாக நாடு முழுவதிலும் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (த)

## அப்புத்தளை ரயில் நிலையத்தில் சிசு

மட்டக்களப்பு,ஜன 13

பிறந்து மூன்று மாதங்களே ஆன சிசு ஒன்று அப்புத்தளை ரயில் நிலையத்தில் கைவிடப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டது. அந்தச் சிசு பொலிஸாரால் தியத்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

# நிவாரணப் பணிகள் பாதிப்பு

மட்டக்களப்பு, ஜன.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து மழைபெய்து வருவதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஹெலிகொப்டர்களில் இருந்துகூட நிவாரணப் பொருள்களை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று மாலை தெரிவித்தார்.

''படுவான்கரை, எருவில், மண்டூர் உட்பட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாவட்டத்தில் 90 சதவீதமான பிரதேசங்கள் வெள்ளக்காடாகியுள்ளன. வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை வழங்க முடியாத அளவுக்கு காலநிலை (நேற்று) மிக மோசமாக இருந்தது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென ஒவ்வொன்றும் நான்காயிரம் ரூபா பெறுமதியான ஐயாயிரம் நிவாரணப் பொதிகளும் உடனடியாக உட்கொள்ளக்கூடிய வகையில் பாண் மற்றும் சமைத்த உணவுகளும் விநியோகிப்பதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை மக்களுக்கு வழங்கமுடியாமல் போய்விட்டது'' என்று பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்தார்.



வீதிகள் அனைத்தும் வெள்ளக்காடாகிய பின் நடந்து செல்வதும் ஒரு போராட்டம்தான்.

இதேவேளை, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 4 கோடி 90 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் காமினி ராஜகருணா நேற்றுக் கூறினார்.

''வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 4 கோடி 90 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு நிவாரணப் பணிகள் துரிதமாக இடம்பெறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரண்டரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்துக்கு 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு 50 லட்சம் ரூபாவும், அநுராதபுரத்துக்கு 25 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேபோல் பொலன்னறுவைக்கு 35லட்சம் ரூபாவும் கண்டிக்கு 13 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன'' என்று அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறினார். (உ-சி)

## பொங்கலன்று 100 போராளிகள் விடுவிக்கப்படுவர்

கொழும்பு,ஜன.13

யாழ். நகரில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாடு செய்துள்ள பொங்கல் விழாவில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 100 முன்னாள் புலிப் போராளிகள் விடுவிக்கப்படுவர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இதுதொடர்பான வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சும், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சும் இணைந்து மேற்படி வைபவத்தை ஏற்பாடு செய்கின்றன. இந்த வைபவத்தில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, டியூ குணசேகர, சந்திரசிறி கஜதீர ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இதேவேளை, பொங்கல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 17ஆம் திகதி ஜனாதிபதி கலந்துகொள்ளும் மாபெரும் வைபவம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும். (சி)

## கூட்டமைப்பு மற்றும் அரங்கம் குழுக்கள் சந்திப்பு

கொழும்பு,ஜன.13

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைக் கொள்கையில் இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஆகியவற்றின் உப குழுக்களின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது.

இரு தரப்பினரும் ஏற்கனவே எடுத்த முடிவுகளின் அடிப்படையில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டமைப்பின் பம்பலப்பிட்டி அலுவலகத்தில் கூட்டம் நடந்தது. தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கூட்டமைப்பு - அரசு பேச்சுக் குறித்தும் நேற்று ஆராயப்பட்டது.

உப குழுவின் இரண்டாவது கூட்டத்தை அடுத்த மாதம் 9ஆம் திகதி நடத்துவது என்றும் நேற்றைய சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டது என்று எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஐ.நா. உதவி

கொழும்பு,ஜன 13

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முன் வந்துள்ளது. இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய நாடுகள செயலாளர் பேச்சாளரான மார்டின் நெசர்கி தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்ட ஆய்வின்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவு, உணவல்லாத பொருள்கள், நீர், போன்ற பொருள்கள் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கையில் உள்ள குழு இலங்கையில் உள்ள அனர்த்த முகாமைத்துவ குழுவுடன் இணைந்து [illegible] மத்திய மாகாணங்களில் [illegible] நடத்தியுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் சில தினங்களுக்கு தேவையான பொருள்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்படும் என நெசர்கி குறிப்பிட்டுள்ளார். உலக உணவு திட்டம், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம், உலக சுகாதார ஸ்தாபனம் என்பன தற்போது நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தநிலையில் மனிதாபிமான விவகாரத்திற்கான ஐக்கிய நாடுகள் அலுவலக தகவலின்படி பாதிக்கப்பட்ட சுமார் 4 லட்சம் மக்களுக்கான 735 மெற்றிக் தொன் உணவு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் நீர் தாங்கிகளையும் அதற்கான குழாய்களையும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வழங்கி வருகிறது. இந்த நிலையில் இயற்கை அனர்த்தம் காரணமாக கடந்த இரண்டு வாரப்பகுதியினுள் கிழக்கு, உட்பட்ட ஏனைய மாவட்டங்களில் 18 பேர் மரணமாகியுள்ளனர். சுமார் 8 லட்சத்து 63 ஆயிரத்து 773 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் இயற்கையின் சீற்றத்தில் சிக்கி அவதியுறும் எம் உறவுகளுக்கு

# மனிதாபிமான ரீதியில் உதவிட வாரீர்....!

உதவிகள் கிரமமாகக் கிடைக்காமல் எமது உடன் பிறப்புக்கள் பசி, பட்டினியால் வாடுகின்றனர். அவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வாரி வழங்கி துயர் துடைத்திடுவோம்.

## தாராள மனம் கொண்ட எம் மக்களே!

ஏதிலிகளாகித் தவிக்கும் எம்மவருக்கு அவசரமாகத் தேவைப்படும் உலர் உணவுகள், குடிதண்ணீர், உடுபுடைவைகள், மருந்து, பால்மா வகைகளை அள்ளி வழங்கி அவர்களின் இன்னலை, துயரைப் போக்கிடுவோம்.

**பணம் மற்றும் பொருள் உதவிகளை உதயன் அலுவலகங்களில் நேரில் கையளிக்கலாம்**

| கேற்வே | | கேற்வே |
|---|---|---|
| லக்ஷ்மி தியேட்டர் வீதி, | 361, கஸ்தூரியார் வீதி, | நவீன சந்தை, |
| நெல்லியடி. | யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |
| 021 226 2395 | 021 567 7602 | 021 227 0323 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B.Sc. (வெளிவாரி)
### காமராசர் பல்கலைக் கழகம்

* மேற்படி பல்கலைக் கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/Lஇல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமையாகச் சித்தியடைந்தவர்களும், அல்லது இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும், விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
* இவற்றிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
* இப் பட்ட நெறியானது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
* பரீட்சைகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு:-மார்கழி மாதம் பரீட்சை எடுத்தவர்களுக்கான B.Sc. 2nd Year Finalஆகிய வற்றின் விரிவுரைகள் ஆரம்பம் 29.01.2011

*இணைப்பாளர்,*
*காமராசர் பல்கலைக் கழகம்.*
*222 8148, 222 3208*

(சி-574546)

*புதிய உயர் கல்லூரி,*
*ஆரியகுளம் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*

## வருடாந்தக் கூட்டம்

சுழிபுரம், ஜன.13

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் தி. உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(204)

## ரி.விக்கு மின்னிணைப்பு; இளம் பெண் பாதிப்பு

தென்மராட்சி, ஜன.13

தொலைக்காட்சிக்கு மின் இணைப்பு வழங்கிய குடும்பப் பெண் மின்சாரம் தாக்கி காயமடைந்தார்.

நேற்று முன்தினம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன் சகிலா (வயது 28) என்பவர் மின்சாரத்தால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)



## மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வவுனியாக் கிளை
### பட்டப் படிப்புகளுக்கான பதிவுகள்

2011ஆம் ஆண்டுக்கான மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகள், பட்ட மேற்படிப்புகள் என்பவற்றுக்கான பதிவுகள் இப்போது இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோண மலை, அனுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பதிவுகள், பாட நூல்கள், பரீட்சைகள் என்பவற்றை இக்கிளையில் மேற்கொள்ள முடியும். மேலதிக கட்டணங்கள் அறவிடப்படுவதில்லை.

*தொடர்புகளுக்கு:*
*இல.27, 10ஆம் ஒழுங்கை,*
*வைரவப் புளியங்குளம், வவுனியா.*
T.P.: 024 324 3265. jasvavuniya@gmail.com.

077 2487774 (யாழ்.)
077 9674675 (முல்லைத்தீவு)
077 1301050 (அனைத்து இடங்கள்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 05.08.1935

மறைவு 15.12.2010

### திருமதி காந்தரூபி (அரியமலர்) சுப்பிரமணியம்

கடந்த 15.12.2010 அன்று திடீர் மரணமெய்திய எமது குடும்பத் தலைவியின் துயரச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலம் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவி செய்த வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

நாளை (14.01.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக் கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

*சித்தாவத்தை*
*உடுவில் வடக்கு, சுன்னாகம்.* - குடும்பத்தினர்.

ஓப் செட் மெசின் மைண்டர் தேவை
* ஒப்செட் இயக்குநர் (டேவிசன்)
* கணினிதட்டெழுத்தாளர்
* புத்தகங்கள் கட்டுபவர்.
ஆயிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும்.
சிவதயா
டிஜிட்டல் பிறின்டர்ஸ்
575 .K.K.S வீதி,
நாச்சிமார் கோயிலடி
யாழ்ப்பாணம்.
0773717353.

## ஆகுதி ஆகிய அப்பாவுக்கு



மலர்வு 15 • 06 • 1923

உதிர்வு 30 • 12 • 1995

### சீனியப்பா செல்லத்துரை

(திதி:- வளர்பிறை நவமி)

(1995.12.30 அன்று கொழும்பில் இறையடி சேர்ந்த தந்தையின் நினைவாக)

*தந்தை என்று நீங்கள் தடி எடுத்ததில்லை*
*நண்பன் என்பீர் தோள் தொட்டதில்லை*
*எட்ட நின்று நீர் அதட்டிப் பார்த்ததில்லை*
*விந்தையான மனதால் அனைத்தும் கண்டீர்!*
*வாழ்வின் சூட்சுமத்தை ஜாதகத்தால் அளந்தறிந்தீர்!*
*'வாழ்க்கையைப் படி' 'அனுபவம் பெறு' என்பீர்கள்*
*யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையில்*
*இத்தனை இடப்பெயர்வுகளும் இறப்புக்களும்*
*உங்கள் நினைவுகளை உணர்வுகளாக்கிட்ட...*

பிள்ளைகள்
செ.செல்வராஜா (நாதன்) - நந்தாவில், கொக்குவில்
செ.இளமுருகன் -சண்டிலிப்பாய், செ.ஸ்ரீநிவாசன்-வவுனியா
மற்றும் கனடா, பிரான்ஸ், அமெரிக்காவில் வாழும் பிள்ளைகள்.

(சி/574550)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் மயில்வாகனம் சுந்தரலிங்கம்

*(கிராம சேவையாளர் J/66, J/67)*



மண்ணில் 15.03.1953

மனங்களில் 14.12.2010

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பதாகைகள் வெளியிட்டோர்க்கும், இரங்கல் உரை ஆற்றியோருக்கும் இறுதிச்சடங்கில் பங்கு கொண்டோருக்கும், எமக்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் இன்னும் மற்றைய பல்வேறு உதவி புரிந்தோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (13.01.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்

*94, ஏச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மக்களின் அவலத்தைப் போக்குவதில் இப்படியும் அசட்டைத்தனமா?

மழையின் அனர்த்தம் கிழக்கில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பிந்திய தகவல்களின் பிரகாரம் பாதிப்புக்கு ஆளாகிய மக்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்தை எட்டும் அளவுக்கு உயர்ந்து சென்று கொண்டிருக்கிறது.

ஆனால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு உணவு, குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் போதியளவில் செய்யப்படவில்லை என்ற முறைப்பாடுகளும் வெள்ளத்தின் மட்டம் உயர்ந்து செல்வது போன்று அதிகரிக்கின்றன. குறிப்பாக வெள்ளம் காரணமாக ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட பிரதேச மக்கள் வாழ்வா சாவா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அச்சமூட்டும் தகவல்களும் வெளியாகி வருகின்றன.

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் மிகப் பலருக்கு ஒருவேளை உணவு கிடைப்பதும் அரிது என்ற நிலையும் ஏற்பட்டுள்ளதாம்.

இயற்கையின் சீற்றத்தினால் மக்கள் பாதிக்கப்படும் வேளைகளில் அவர்களுக்கு உடனுக்குடன் சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பது கஷ்டமானது என்று கூறுவது ஓரளவு ஏற்புடையது. ஆனால் கிழக்கை மழையும் வெள்ளமும் தாக்கி ஒரு வார காலமாகும் வேளையில், மிக அவசியமான உணவுத் தேவையை வழங்க முடியவில்லை என்பதனை எந்த வகையாலும் நியாயப்படுத்த முடியாது.

இடர் முகாமைத்துவத்துக்கெனத் தனியான அமைச்சு; அதற்குப் பொறுப்பாக ஓர் அமைச்சர்; அங்கு கொழுத்த சம்பளத்தில் பலப்பல உயர் அதிகாரிகள்; பணியாளர்கள்; நிவாரணப் பணிகளைச் செய்வதற்கென ஒப்பந்தகாரர்கள்; இவர்களுக்கெல்லாம் இயற்கை அனர்த்தங்கள் உண்டானால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது என்ற பணிக்கு மேலதிகமாக சம்பளத்தோடு கிம்பளங்களும் கூடவே உண்டு. அவ்வாறிருக்க, வெள்ளத்தால் சூழப்பட்டு அவதிப்படும் மக்களுக்கு ஒரு வேளைச் சாப்பாடும் வழங்கப்படவில்லை என்றால் அரச ஊழியர் களிடமும் அதிகாரிகளிடமும் மனிதாபிமானமும் மனித நேயமும் செத்துப்போய்விட்டது என்று கொள்வதை விட வேறு தர்க்கம் இருக்கமுடியாது.

வெள்ளத்தினால் மூழ்கிப்போன பிரதேசத்துக்கு தரைவழிப்போக்குவரத்துச் சாத்தியமில்லை; நாம் என்ன செய்யமுடியும் என்று கூறி (கேட்டு), மக்களின் உயிர்களைக் காக்கும் தமக்குரிய பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. ஹெலிகொப்ரர்கள் மூலம் வெள்ள அகதிகள் தங்கியுள்ள இடங்களுக்கு உணவுப் பொதிகளை இடக்கூடிய வாய்ப்புண்டு. சீரற்ற காலநிலை என்று தெரிவித்து உயிர்காக்கும் பணியை தட்டிக்கழிப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

கிழக்கின் வெள்ளப்பெருக்கினால் மக்கள் இலட்சக் கணக்கில் இடம்பெயர்ந்து, பலர் உயிரிழந்தும் நிலைமை மேலும்மேலும் மோசமடைந்து செல்லும் கட்டத்தில் -

பாதிக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் புதன்கிழமை தொடக்கம் உலர் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்திருக்கும் வேளையில் -

முழுச்சொத்துக்களையும் இழந்து நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 70 ரூபா மட்டுமே வழங்கப்படுவதாக எதிர்க்கட்சி தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்கு அரசின் அமைச்சுகளின் இணைந்த செயற்பாட்டுக்கோ, விசேட செயலணியை அமைக்கவோ அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐ.தேகட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வெள்ள நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரச அமைச்சுகள் இணைந்து செயற்படும் நிலையைப் புறக்கணித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பொறுப்பை மாகாண சபைகளிடம் விட்டு விட்டு இருப்பதாகவும்-

பெரும்பாலான மாகாண சபைகள் தமக்குரிய செலவினங்களுக்கே பணம் இல்லாமல் அல்லாடும் வேளையில்-

அவசரமும், அவசியமுமான மக்கள் உயிர் காக்கும், இடர் நீக்கும் பணியை அவற்றிடம் கைகழுவி விட்டிருப்பதாகவும் அத்தனாயக்க கண்டித்திருக்கிறார்.

எதிர்க்கட்சியின் செயலாளர் என்பதால் அவர் இவ்வாறு குற்றம் சாட்டுகிறார் என்று அரசாங்கத் தரப்புத் தனது பொறுப்பற்ற தன்மையை சரிப்படுத்த முயலக் கூடாது; தட்டிக்கழிக்கக் கூடாது.

இத்தகைய ஒரு பின்னணியில், கிழக்கு மாகாணத்தில் வாழ்பவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் அனேகர் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள், தமிழர்கள் என்பதால் அவர்களுக்கான அனர்த்த கால உதவிகளை எப்படியும் வழங்கலாம் என்ற அக்கறையின்மையே, அசட்டைத் தனமே காரணம் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர சம்பந்தப்பட்டவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

அத்தகைய வேற்றுமையோ, பாகுபாடோ தனக்கு இல்லை என்று அரசு கூறுமானால், அனர்த்த முகாமைத்துவப் பணிகளை கிழக்கு மாகாணத்தவரும் அரசின் ஆளுகைக் குட்பட்டவர்களே என்ற மனப்பக்குவத்துடன் செயலாற்ற உடன் முன்வர வேண்டும். மக்களின் கஷ்டங்களைக் களைவதில் அதுவும் அனர்த்த காலங்களில் மக்களுக்கு உதவும் பணியை மத்திய அரசு உடனடியாகத் தன்து பொறுப்பில் எடுத்து, எதிர்க்கட்சிகளையும் இணைத்து மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். உரிய திசையில் அரசு செயற்படுமா?

# அரசுக்கு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் கெட்ட காலம் தேர்தல்களை முன்கூட்டியே நடத்த இதுதான் காரணம்

## இப்படிக் கூறுகிறது ஐ.தே.க

கொழும்பு, ஜன.13

ஜோதிட அறிக்கைகளின் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் அரசுக்குக் கெட்ட காலமாம்.

எனவேதான் அரசு தேர்தல்களை முன்கூட்டியே நடத்துகின்றது என்று ஐக்கிய தேசிய கட்சி குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், எந்தவொரு உள்ளுராட்சி மன்ற தேர்தலையும் நடத்தாது அதிகார சபையாக்குவதற்கு அரசு நினைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்:

எதிர்வரும் 13ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடவுள்ளது. இதன்போது உள்ளுராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக பேச்சுக்கள் முன்னெடுக்கப் படும்.

குறிப்பாக வேட்பாளர் தெரிவுக் குழு பிரசார நடவடிக்கைகள் மற்றும் வேட்பு மனுத் தாக்கல் தொடர்பான விசேட குழுக்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு அறிவித்துள்ள வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட 303 உள்ளுராட்சி மன்றங்களிலும் ஐ.தே.க. யானை சின்னத்தில் போட்டியிடும். ஏனைய அரசியல் கட்சிகள் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிட விரும்பினால் புதிய கட்சி யாப்பின் பிரகாரம் ஐ.தே.க.வின் உறுப்புரிமையைப் பெற வேண்டும்.

கடந்த தேர்தல்களில் ஐ.தே.க.வில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் கட்சிக்கு எதிராகவே பலர் செயற்படத் தொடங்கினர்.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை கூட எடுக்க முடியாமல் போனது. இதனால்தான் கட்டாய உறுப்புரிமை பெற வேண்டும் என்று அறிவித்துள்ளோம்.

மேலும் புதிய முகங்களை அதிகமாக களத்தில் இறக்க ஐ.தே.க. தெரிவுக் குழு தீர்மானித்துள்ளது. -என்றார். (ம)

# வெள்ளத்தால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாது

## உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன.13

பெரும் வெள்ளத்தால் லட்சக் கணக்கான ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ள போதும் அரிசிக்கு எவ்வித் தட்டுப்பாடும் ஏற்படாது. அடுத்த போகம் வரை தாக்குப் பிடிக்கக் கூடிய அளவு நெல் கையிருப்பில் உள்ளது எனவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கையிருப்பில் உள்ள நெல் அடுத்த 2-3 மாதங்களுக்குப் போதுமானது எனவும் கூறிய அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அம்பாறை, பொலநறுவை உட்பட நெல் விளைச்சலில் முன்னணி வகித்த பல பிரதேசங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அடுத்த போகத்துக்கான சரியான தருணத்தில் எதிர்பாராத விதமாக இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இயற்கையின் செயற்பாட்டுக்கு எம்மால் தீர்வு கொடுக்க முடியாது.

எனினும் பாதிக்கப்படாத பிரதேசங்களில் வழக்கம் போல நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அந்த அறுவடை ஓரளவு கை கொடுக்கும்.

அதேசமயம், மரக்கறி விவசாயிகள் வெள்ளத்தின் காரணமாக தமது உற்பத்திகளை வர்த்தக சந்தைகளுக்கு கொண்டுசெல்ல முடியாமல் தடுமாறுகின்றனர்.

அவர்களுக்கு உதவும் வகையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு மொத்த வியாபார நிலையங்களின் (ச.தொ.ச) லொறிகள் மூலம் மரக்கறிகளைப் போக்குவரத்து செய்ய நேற்றுமுன்தினம் முதல் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. - என்று அவர் மேலும் கூறினார். (ம)

# சைக்கிள்களில் சமாந்தரமாகச் சென்ற 8 பேர் கைதாகி நீதிமன்றில் ஆஜர்

## ஒருவருக்கு 1,500 ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

சைக்கிளில் சமாந்தரமாகப் பயணம் செய்த பாடசாலை மாணவர்கள் 7 பேர் உட்பட 8 பேர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட யாழ். நிதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந்தராசா பாடசாலை மாணவர்களை எச்சரிக்கைசெய்து விடுவித்ததுடன் மற்றைய நபருக்கு 1500 ரூபா அபராதம் விதித்தார்.

கடந்த 30 ஆம் திகதி யாழ். நகரில் ஆரியகுளம் வீதி வழியாக சைக்கிள்களில் இவர்கள் சமாந்தரமாகச் சென்று கொண்டிருந்த வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ம-9)

# நகரில் பழுதான 'கேக்' வகைகள்; பாவனையாளர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ். நகரப் பகுதியிலுள்ள கடைகளில் பாவணைக்குதவாத பழுதான கேக் வகைகள் விற்பனையாவதால் அவற்றை வாங்கிச் செல்லும் பாவனையாளர்கள் ஏமாற்றம் அடைவதுடன் பணத்தையும் இழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமீப காலமாக யாழ். நகரி லுள்ள கடைகளில் பல்வேறு அளவு களில் பொதி செய்யப்பட்ட கேக் வகைகள் அதிகளவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் வெளித் தோற்றத்தில் மயங்கிய பலர் இவற்றை வாங்கிச் செல்கின்றனர். ஆனால் வீட்டில் வைத்துப் பொதியைப் பிரித்துப் பார்க்கும் போது அந்தக் கேக் வகைகள் பழுதான நிலையில் துர்நாற்றம் வீசுவதைக் காண முடிகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்.நகரில் அமைந்துள்ள நிறுவனமொன்றில் பணியாற்றும் ஒருவர் தமது பேர்த்திக்கென ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றில் பொதி செய்யப்பட்ட கேக்கை வாங்கிச் சென்றுள்ளார். வீட்டில் அந்தப் பொதியைப் பிரித்தபோது குருநாகலையில் கேக் தயாரித்தமைக்கான குறிப்புத்துண்டு ஒட்டப்பட்டிருந்தது. ஆனால் கேக்கோ பழுதடைந்த நிலையில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. சிறு குழந்தைகள் இதை உண்டால் அவர்களின் கதி என்னாவது?

ஆகவே கடைக்காரர்கள் வெளியிடங்களிலிருந்து எடுத்துவரப் படும் உணவுப் பொருள்களைக் கவனமாக ஆராய்ந்து பார்த்த பின்னரே அவற்றை விற்பனைக்கு வைக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். (க)

# இணைப்பு ஆசிரியரின் மார்கழி மாத வேதனம்

யாழ்ப்பாணம், ஜன.13

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் மார்கழி மாதக் கொடுப்பனவுப் பட்டியல் யாழ்.கல்வி வலய நிதிக்கிளைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 30 | | 14.01.2011 |
| | | வெள்ளிக்கிழமை |
| திதி: | : | தசமி முழுவதும் |
| நட்சத்திரம் | : | பரணி மு.இ.11.22 வரை |
| சுபநேரம் | : | 06.34 - 08.04 வரை |
| ராகுகாலம் | : | 11.04 - 12.34 வரை |

# தெய்வீக அன்பு

தெய்வீக அன்பு எல்லோரிடமும் உள்ளது. அது மாறாதது. குறையாதது. பலவந்தத்தினால் அடையப்படுவதல்ல. இதயத்தின் மூல ஊற்றிலிருந்து வெளிவருகிறது. தெய்வத்துவம் எல்லோரிடமும் உள்ளது. இவ்வாறிருத்தல் அநேகத்வம் அல்ல. ஏகத்வம் ஆகும்.

இத்தகைய ஒருமையுணர்வை இதயத்தில் கொண்டு பவித்ரமான செயல்களைச் செய்துகொண்டு வருவது மிகவும் உயர்ந்தது. கடமையை விடுதல் வேண்டாம். எந்த வேலையையும் விலக்க வேண்டாம். அனைத்து வேலைகளையும் அனைத்து கர்மங்களையும் புரிந்துகொண்டு செய்தல் வேண்டும். செயல்கள் அனைத்தும் இறைவனுக்கு அர்ப்பணமாகட்டும். அப்போது அனைத்தும் தெய்வீகமாக மாறிவிடும்.

நன்றி :
சாயி அருளமுதம்



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி
## செல்லையா வாலாம்பிகை



தோற்றம்: 12.10.1928

மறைவு: 25.12.2009

அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் இருப்பிடமாய்
பண்பின் பொக்கிஷமாய்
இடர் தீர்க்கும் மருந்தாய்
இதயத்தில் உறைந்த எம்தாயே!
துணையிருப்பாய் தொடர்ந்திருப்பாய்
என்றிருந்தோம் கவலையற்று
உன் செல்வங்களை விட்டுப்போக
என்ன குறை நாம் விட்டோம்
சொல் தாயே!
தீரவில்லை எம்சோகம்
ஆறவில்லை எம் மனங்கள்
ஆறுதலாய் யாருமில்லை
அரவணைக்க வா தாயே!
வழிந்தோடும் விழிநீரை
துடைத்திட வராது
எங்கு சென்றீர்!
எம் நினைவுகளை மறந்து
காத்திருப்போம் பல ஜென்மம்
மீண்டும் உம்
கருவறையில் வந்துதிக்க
அதுவரை பொறுத்திருப்போம்!
உம் இனிய நினைவுகளுடன்
ஆருயிர் தாயே உம் ஆத்மா
சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

ஆறாத்துயரில்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

66/4, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

(108787)

# நீங்கா நினைவுகளுடன்...

## 23ஆவது பிறந்தநாள் நினைவு



ஆழியின் பிடியில் மீளாத்துயில் கொள்ளும்
அன்பின் மகன்

## நிர்மலானந்தன் நிராஜ்

அன்னையின் மடியில்: 13.01.1988
ஆழியின் பிடியில்: 19.05.2010

ஆறாது ஆறாது
அழுதாலும் ஆறாது
தீராது தீராது
சிந்தையில் கொண்ட
உன் நினைவுகள்
மாறாது மாறாது
மறுபிறவியிலும் தொடரும்
உருக்குலைந்த உன்
உறவுகளைப் பாராயோ?

உன் நினைவில் வாடும்:
திரு திருமதி **நிர்மலானந்தன்**

மயிலியதனை, கெருடாவில்,
தொண்டமானாறு,
தொ.பே.: 021 3215261, 0772228660 (நிராஜ்)

(108783)

# நெஞ்சகலா நினைவலைகள்

முதலாம் ஆண்டு

14ஆம் ஆண்டு

தோற்றம்
25.04.1943

மறைவு
26.12.2009



திதி:
13
.
01
.
2011



தோற்றம்
28.01.1943

மறைவு
18.12.1996

## அமரர் Dr. கந்தையா செல்லையா சோமசுந்தரம்

## திருமதி நாகேஸ்வரி சோமசுந்தரம்

பால்ய வயதிலேயே பெற்றோரை இழந்தீர்- ஆயினும்
பெரும் கல்வியும் நல்வாழ்வும் உம் உழைப்பினால் அடைந்தீர்
ஏழை எளியவரையும் ஆதரவற்ற மழலைகளையும் அரவணைத்தீர்
காலன் அழைத்தபோதும் கடமையே கருத்தாய் இருந்தீர்- உங்கள்
மறைவின் பின்னும் உங்கள் பணி முடிவின்றித் தொடரும்.....

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும்- எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம்- உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமைபோல எமைக் காத்த அம்மா- உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்- சோ.ஜகத்ஜயன், சோ.சரத்ஜயன், சோ.நிரஞ்ஜயன்,**
**மருமகள்மார், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், பெறாமக்கள்.**

(சி/574542)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் நடந்த சிங்களக் குடியேற்றம் தமிழர் காணிகளின் அபகரிப்புக்கு ஒரு சான்று

## ஓய்வு பெற்ற காணி பிரதி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 13

நாவற்குழிப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டமை தமிழர் காணிகளை அபகரிப்புச் செய்தமைக்குச் சான்றாகும் என்று வடக்கு, கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற காணி பிரதி ஆணையாளரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.குருநாதன் தெரிவித்தார்.

தியாகி அறக்கொடை நிலையத்தில் சிந்த னைக் கூடத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவும் காணிப் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் தொடர்பாக கருத்தரங்கு இடம்பெற்றது.

மேற்படி கருத்தரங்கில் வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அதனை உரிமை கோர எந்தவித ஆவணங்களும் இல்லாமல் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

மக்களை மீள் குடியேற் றம் செய்யும் போது அவர்களது காணி உறுதி பெறுதல் தொடர்பில் பிரதேசசெயலர், கிராமசேவை யாளர் கவனம் செலுத்துதல் வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் பல பிரதேசங்களில் பொலிஸ் ஆயுதப் படையினரால் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இதனை கிராம சேவகருக்கு சம்பந்தப்பட்டவர் தெரியப்படுத்தி காணிக்கான வாடகையைப் பெற முடியும்.

இதேவேளை, வீட்டுக் காணியானால் ஒரு வருடத்தாலும், வயல் காணியானால் மூன்று வருடத்தாலும் 'ரண் பீம' திட்டத்தின் கீழ் அரசிடம் காணிகளைப் பதிவு செய்ய வேண்டும்.

அத்துமீறிக் குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் காணி உரிமையாளர்கள் தமது காணிப் பதிவு இலக்கம் போன்றவற்றை காணிப்பதிவாளர்கள் ஊடாக கிராம சேவையாளரிடம் ஒப்படைத்து தமது காணிகளை உரிமை கோர முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பல பிரதேசங்ளகளில் இருந்து கலந்து கொண்ட மக்கள் தமது காணிப் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளை பெற்றுக் கொண்டனர். (201-313)

# கிராமந்தோறும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி

வண்ணை, ஜன. 13

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம் கிராமங்கள் தோறும் சென்று பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். புகையிரத நிலைய வீதியில் நடைபெற்ற சமாசத்தின் நல்லூர் பிராந்திய பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சமாச மாகாண அமைப்பாளர் சி.செல்லத்துரை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதற்கு தலைமைப்பீடம் காரணம் இல்லை.

ஐந்து பிராந்தியங்களாக வகுத்துச் செயற்படும் நல்லூர், மானிப்பாய்,வலிகிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றின் நிர்வாகப் பிரிவுகளின் முடங்கல்களே அதற்குக் காரணமாகும். தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமூக நிலையைப் பயன்படுத்தி பிராந்திய கழகங்கள் சமூகத்துக்கு பணிபுரிய முன்வர வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் பிராந்தியத் தலைவர் உரையாற்றுகையில்:

கல்வி சார்ந்த முன்னேற்றங்கள் சமூக மட்டத்தில் மந்தமாக இருந்து வருகிறது. கிராமங்கள் தோறும் கல்விசார் அறிவூட்டல்களை வளர்க்க சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் பொது அறிவுப் போட்டிகளை நடத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்கி ஊக்குவிக்க முன்வந்துள்ளது. சமூகத்தின் மேம்பாடு கல்விக் கண்ணூடாகவே வளர முடியும்.

அதற்கு இளைய சமுதாயம் கல்வியில் ஊக்கத்துடன் ஈடுபட்டாலே குறிப்பிட்ட வளர்ச்சி எல்லையை எட்டமுடியும் என்றார். (204-160)

# உரிய நேரத்தில் சிகிச்சை வழங்காமையே டெங்கு மரணங்கள் ஏற்படக் காரணம்

## சுகாதார வட்டாரங்கள் தகவல்

சண்டிலிப்பாய், ஜன.13

குடாநாட்டில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துக் காணப்பட்ட ஆண்டில் இடம்பெற்ற மரணத்திலும் பார்க்க இந்த நோயின் தாக்கம் குறைவாகக் காணப்பட்ட கடந்த ஆண்டில் கூடுதலான மரணங்கள் ஏற்பட்டுள்ளது.

உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிக்கப்படாமையே மரணம் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டில் 2009 ஆம் ஆண்டு ஆள்கொல்லி நோயான டெங்கு நோயின் பாதிப்பால் சுமார் 700 பேர் வரை பாதிக்கப்பட்டிருந்தனர். எனினும் இக் காலத்தில் 25 மரணங்களே இடம்பெற்றன.

கடந்த ஆண்டு இந்த நோயின் தாக்கத்தால் 100 பேர்வரை பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் இக்காலப்பகுதியில் 28 பேர் மரணமாகியுள்ளனர்.

நோயின் தாக்கம் பல மடங்கு குறைவாகவுள்ள காலப் பகுதியில் கூடுதலான மரணம் ஏற்பட்டிருப்பது சுகாதார பகுதியினரைச் சிந்திக்க வைத்துள்ளது.

மேற்படி நோய்க்கு உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை செய்யாமல் தனியார் வைத்திய சாலைகளுக்குச் சென்று காலம் கடத்தி வருவதே இந்த மரணம் அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-115)

# பஸ் நண்பரிடம் 'பபிள்கம்' வாங்கிச் சாப்பிட்டவர் மயங்கிய நிலையில் உடைமைகளைப் பறிகொடுத்தார்

தென்மராட்சி, ஜன. 13

பக்கத்திலிருந்து பயணித்தவர் கொடுத்த 'பபிள்கத்தை'ச் சாப்பிட்டவர் உடைமைகளைப் பறிகொடுத்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்ஸில் பயணித்த சரசாலை வாசியான சி. ஆறுமுகம் (வயது 50) என்பவரே கையடக்கத் தொலைபேசி, தங்கமோதிரம், 10 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை பறிகொடுத் தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

அடையாள அட்டை எடுப்பதற்காக கொழும்பு சென்ற மேற்படி நபர் யாழ்ப்பாணம் வருவதற்காக பஸ்ஸில் அமர்ந்திருந்தார்.

இதன்போது அருகில் வந்திருந்த நபர், தான் யாழ்ப்பாணத்தில் புடைவை வியாபாரம் செய்வதாகத் தன்னை அறிமுகப்படுத்தி அமர்ந்திருந்திருந்தார்.

பின்னர் கடைக்குப் போய் மிக்ஸ்சர், பபிள்கம் ஆகியவற்றை வாங்கிவந்து குறித்த நபருக்கு வழங்கியுள்ளார்.

'பபிள்கம்' சாப்பிட்ட பின் நாகம வரை தான் விழித்திருந்தார் என்றும் பின்னர் நடந்தது எதுவும் தெரியாது என்றும் உடமைகளைப் பறிகொடுத்தவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு பஸ் வந்தடைந்ததும் அவரை பஸ் ஒட்டுனர் எழுப்பிவிட்டார். ஆனால் அவர் மயக்க நிலையில் இருந்ததால் அங்கிருந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவரைச் சேர்த்தனர். பின்னர் சிகிச்சை பெற்றதும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளார். (201-207)

# டெங்கு நோய் இனங்காணப்பட்ட இடங்களில் புகையூட்டல் நடவடிக்கை

சண்டிலிப்பாய், ஜன.13

குடாநாட்டில் டெங்கு நோயின் பரம்பலை முற்றாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் அதிகமான டெங்கு நோயாளிகள் இருப்பதாக இனம் காணப்பட்ட இடங்களில் தொடர்ந்து புகையூட்டல் நடவடிக்கைகளைமேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மக்கள் நெருக்கமாக வாழ்ந்துவரும் குருநகர் பிரதேசத்திலுள்ள தொடர்மாடிக் கட்டடம், அன்னை வேளாங்கன்னி தேவாலயம், சின்னக் கடை, திருநகர் ஆகிய பகுதிகளில் அதிகளவு டெங்கு நோயாளிகள் கடந்த ஆண்டு இனம் காணப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி நோய் மேலும் பரவாமல் கட்டுப்படுத்துவதற்காக இப் பகுதியில் தொடர்ந்து புகையூட்டும் நடவடிக்கைகளை சுகாதாரப்பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

சுகாதாரப் பகுதியினர் நான்கு குழுக்களாகப் பிரிந்து இந்தப் பகுதிகளில் தற்பொழுது புகையூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-115)

# பொலிஸ் - இராணுவ கூட்டுரோந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ். குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் பொலிஸ், இராணுவ கூட்டு ரோந்து நடவடிக்கைகள் நேற்று முன்தினம் இரவு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு மாதகாலமாக இடம்பெற்று வரும் கொலை, கொள்ளை, களவு, கடத்தல் சம்பங்களைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள 9 பொலிஸ் நிலையங்களிலும் இவ்வாறான ரோந்து நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. பொலிஸாருடன் இராணுவதினரும் இணைந்தே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இரவு 10 மணிக்கு பின்னர் வீதிகளில் வாகனங்களில் பயணம் செய்யும் மக்கள் பொலிஸாரால் மறிக்கப்பட்டு விசாரணைசெய்யப்படுகின்றனர்.

குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பொதுமக்கள், பொலிஸாருக்கு இடையே வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவின் பத்மதேவா - குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் பொருட்டு பொலிஸ் - இராணுவம் கூட்டு ரோந்துநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (201-15)

# குண்டும் குழியுமாக வீதி: ஒழந்தது பெண்ணின் நாரி

உழவு இயந்திரப் பெட்டியில் பயணித்த பெண்ணுக்கு நாரி என்பு முறிந்தது. வீதியில் ஏற்பட்டுள்ள குழிகளில் உழவு இயந்திரம் ஏறி இறங்கிச் சென்றபோதே பெட்டிக்குள் அமர்ந்திருந்த மேற்படி பெண்ணுக்கு இந்த சோகம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பளையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.சிவக்கொழுந்து(வயது 60) என்பவர் பளைப் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மேலதிக சிக்கிச்சைக் காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (201-207)

# வடக்கில் முஸ்லிம்கள் மீளக்குடியமராததால் பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாயம்

## முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகள் கருத்து

யாழ்ப்பாணம், ஜன.13

முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கான வசதி வாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இதனால் முஸ்லிம் மக்கள் உடனடியாக மீளக் குடியமர முடியாத நிலைமை உள்ளது.

இது வடபகுதியில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்வதாக உள்ளது என யாழ்ப்பாணம், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ். முஸ்லிம் பிரதேச விசேட நடமாடும் சேவை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பு ஒன்று கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த சந்திப்பின் போது மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

யாழில் முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இன்னமும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. மக்களுக்கு வீடு,காணி வசதிகள் ஏற்படுத்தித்தரல் வேண்டும்.

அந்த வசதிகள் ஏற்படுத்தித்தராத காரணத்தால் முஸ்லிம் மக்கள் உடனடியாக மீளக் குடியமர முடியாதுள்ளது.

இதனால் மக்கள் இந்த வருடத்துக்கான வாக்காளர் பதிவை தமது சொந்த மண்ணில் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தை வடபகு தியில் இழக்கச் செய்வதர்க உள்ளது.

எனவே, முஸ்லிம் மக்கள் மீளக்குடியமர்வதுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

முஸ்லிம் மக்கள் அனைவரும் மீளக்குடியமர்வதற்கு மிக ஆர்வமாக இருக் கின்றனர். எனவே வீடமைப் புத்திட்டம் எமக்கு வழங்கப்படவேண்டும். என சம்மேளனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.


மேற்படி பத்திரிகையாளர் சந்திப்பானது அமைப்பின் தலைவர் மௌலவி தாஹர் தலைமையில் இடம்பெற்றது. இதில் அமைப்பின் அங்கத்த வர்கள் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர். (201-14)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அன்னராசா தபீபன் (தைபன்)



காரைநகர் வீதி, நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னராசா தபீபன் (தைபன்) (11.01.2011) செவ்வாய்க்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் அன்னராசா- நாகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும் டொமினிக்கா, பிரதீபன், சர்மிளாதேவி, சதீபன், அஸ்வினி, மகிஸ்ரெலா, தினுஸ்ரெலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சதீஸ்வரன் (யாழ். மாநகர சபை), வடிவழகன், ரதீஸ்தரன் ஆகியோரின் மைத்துனரும் நிதர்சிகா, கிஷாந்தினி, அபிஷேக்கா, சுஷாந்தினி, லினுஜன் ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சின்னவி- முத்து, சின்னத்தம்பி- விசாலாட்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் முத்துராசா, அருள்ராசா, நாகம்மா, தவமணி, துரையம்மா ஆகியோரின் பெறாமகனும் ஏ.பி.நாகராசா, சிவசுப்பிரமணியம், பூலோகராசா, காலஞ்சென்ற தவமலர் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அன்னராசா** (கிளி-தந்தை)
(பண்ணை ஆட்டிறைச்சிக்கடை உரிமையாளர்)
**குடும்பத்தினர்.**

காரைநகர் வீதி, நாவாந்துறை,
(வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி),
யாழ்ப்பாணம்.

(சி/574545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மப்பும் மந்தாரமுமான காலநிலையால் நெற்பயிரை நோய் தாக்கும் அபாயம்

## முல்லை. பிரதி விவசாயப் பணிப்பாளர் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் மப்பும் மந்தாரமுமான காலநிலை காரணமாகக் காலபோகமாக மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக முல்லைத்தீவு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நெல் எரிவந்தம், மடல் வெளிறல் ஆகிய நோய்கள் மிக விரைவாகப் பரவும் ஆபத்துத் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனேகமாகப் புதிய திருந்திய இனத்தை விதைப்புச் செய்தவர்கள் இதனால் பாதிப்படையும் அபாயம் இல்லை. ஆனால் ஆட்டக்காரி போன்ற இனத்தை விதைப்புச் செய்தவர்கள் அதிக பாதிப்புக்களுக்கு ஆளாகலாம்.

எரிவந்தம் நோயினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களின் இலைகளில் கண் வடிவமான புள்ளிகள் காணப்படும். மேலும் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களிலிருந்து வெளிவரும் கதிர்களின் கழுத்துப் பகுதி தாக்கப்பட்டு முறிந்த நிலையில் காணப்படும். மடல் வெளிறல் நோயினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களின் மடல் பகுதியில் புடையன் பாம்பின் புள்ளியை ஒத்த கபில நிறப் பட்டைகள் போன்ற தோற்றம் காணப்படும்.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு வவஸ்ரின், பொலிகர், காபன்டசின் ஆகிய பீடை நாசினிகளில் ஒன்றைத் தெரிவு செய்து உரிய அளவில் காலநிலை தெளிவாக உள்ளபோது விசிறவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# கடும் மழை காரணமாக பேருந்து சேவைகள் குறைப்பு

பூநகரி,ஜன.13

பூநகரியில் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக அனேக பேருந்து சேவைகள் செயலிழந்து போயுள்ளன.

பேராவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு, பலாவி ஆகிய கிராமங்களுக்கிடையில் நடைபெற்று வந்த பேருந்து சேவைகள் அனைத்தும் பெருமழை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தற்போது இரண்டு சேவைகள் மட்டுமே நடைபெற்று வருகின்றன.

மக்கள் அன்றாடம் பெருமளவில் உபயோகிக்கும் பல்லவராயன் கட்டு - சம்புவெளியூடான வீதி, வேரவில் - கிராஞ்சியூடான வீதி என்பன பல ஆண்டுகளாக மோசமாகச் சேதமடைந்த நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன. இதில் பயணிப்போர் அன்றாடம் படும் வேதனைகள் ஏராளம். இந்த வீதிகள் சவர்ப்பு நிலத்தில் அமைந்துள்ளதால் வெறுமனே கிரவல் இடாது உரிய முறையில் கற்கள் பரவி தார் இடப்படுதல் அவசியமானதாகும்.

இதனை உரியவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்புக்களாகும். (க-496)

# கணேசபுரம் செல்ல கொங்கிறீற் வீதி

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக கணேசபுரம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் 20 மீற்றர் வரையான பகுதிக்குக் கொங்கிறீற் வீதி அமைக்கும் பணி இடம்பெற்று வருகின்றது. (க-405)

# வெள்ளத்தினால் கிளி. மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்குப் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன.13

தொடர்ந்து பெய்த மழையினால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கையும் நெற்செய்கையும் கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மேட்டு நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட தானியச் செய்கைகள் யாவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையும் மோசமாய் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரதிபுரம், மலையாளபுரம், கிஸ்ணபுரம், கனகபுரம், புதுமுறிப்பு, கோணாவில் போன்ற பகுதிகளிலும் இதனைவிட புன்னைநீராவி, பிரமன்தனாறு உழவனூர் ஆகிய பகுதிகளிலும் கூடுதலான விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளபட்டிருந்தன. இவை பெருமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளன. (க-6)




# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லாடும் ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பு மக்கள்

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் விநாயகர் குடியிருப்பில் தங்கியுள்ள சுமார் 90 குடும்பங்கள் தாம் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளன.

ஸ்கந்தபுரம் பிரதான சந்தியில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விநாயகர் குடியிருப்பில் தற்பொழுது 90 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வசித்துவருகின்றன. இங்குள்ள மக்கள் அனைவரும் நிரந்தர வீடுகள் எதுவுமின்றித் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகளிலும், மீள்குடியேற்றத்தின்போது வழங்கப்பட்ட 12 தகரத்தினால் அமைக்கப்பட்ட குடிசைகளிலுமே வசித்து வருகின்றனர்.

இதில் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு மட்டும் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்று கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட இக்குடியிருப்பில் உள்ள மக்கள் பிரதான சந்தைக்குச் செல்லவேண்டிய வீதி மற்றும் குடியிருப்பு வீதிகள் என்பன எதுவித புனரமைப்புக்களுமின்றி குண்டும் குழிகளுமாகவும், நீர்பாயும் வாய்க்கால்கள் போன்றும் காணப்படுகின்றன. அத்துடன் பற்றைக் காடுகளும் வளர்ந்துள்ளன.

அத்துடன் இப்பகுதியில் இயங்கிவரும் பைந்தமிழ் முன்பள்ளியில் சுமார் 35 சிறார்கள் கல்வி கற்று வருகிறார்கள். ஆனால் முன்பள்ளி சீரான கட்டட வசதிகளோ அல்லது தளபாட வசதிகளோ இன்றிக் காணப்படுகின்றது.

இவ்வாறு அடிப்படை வசதிகளின்றி இக்கிராமம் காணப்படுவதால் இங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். அத்துடன் இங்கு வசிக்கின்ற குடும்பங்கள் யாவும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வதனால் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-6)

# கிளிநொச்சி வலயத்தில் 5 பாடசாலைகளில் அதிபர் பதவிகள் நிரப்பப்படவில்லை

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட ஐந்து பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்காக கிளிநொச்சிக் கல்விவலயத்தைச் சேர்ந்த தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன்பிரகாரம் வகை 1 சி பாடசாலையான பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம், வகை 2 பாடசாலையான தட்டுவன்கொட்டி அ.த.க.பாடசாலை, வகை 3 பாடசாலைகளான உமையாள்புரம் அ.த.க.பாடசாலை, சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலை, முகாவில் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வகை 1சி பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் அதிபர் சேவை II அல்லது III ஐச் சேர்ந்தவராக இருப்பதுடன் பயிற்றப்பட்ட பட்டதாரி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைக் கொண்டவராகவும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

வகை 2, வகை 3 பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை அதிபர் சேவை II அல்லது III ஐச் சேர்ந்தவர்களாக அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது II ஐச் சேர்ந்தவராக இருப்பதுடன் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

தகைமையுடைய கிளிநொச்சிக் கல்விவலயத்தைச் சேர்ந்தவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னராக உரிய மாதிரிப் படிவத்திற்கமைவாக விண்ணப்பத்தினைத் தயாரித்து பதிவுத்தபால் மூலம் "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கோரியுள்ளார்.

இதற்கான அறிவித்தற் கடிதமும் மாதிரி விண்ணப்பப் படிவமும் கிளிநொச்சிக் கல்விவலயத்தால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-405)

## தானத்தில் உயர்ந்தது...



உயிர் காப்போர்: கிளிநொச்சி புனித திரேசம்மா தேவாலயத்தில் கிளிநொச்சி வைத்தியசாலை குருதி வங்கியின் நடமாடும் குருதிக் கொடைச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

# கிளி. பொதுச் சந்தைப் பகுதியில் வெள்ளம்

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் உள்ள வணிக நிலையங்களைச் சூழவும் போக்குவரத்துப் பாதைகளிலும் மழைநீர் தேங்கிக் காணப்படுவதனால் சந்தை வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் வடிகால்கள் அமைக்கப்படாமையால் மழைநீர் ஆங்காங்கே தேங்கிக் காணப்படுகின்றது. அத்துடன் தினமும் மக்கள் போக்குவரத்துச் செய்யும் பாதைகளும் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன. இதனால் சந்தைப்பகுதியில் உள்ள மீன் வியாபாரிகளும் மரக்கறி, பல்பொருள் வியாபாரிகளும், ஏனைய வியாபாரிகளும் தமது வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள். இதனைவிடப் பொருள்களைக் கொள்வனவு செய்யச் செல்லும் மக்கள் தாங்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பலசரக்கு வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (க-6)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி, ஜன. 13

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இந்தக் கூட்டம் ஆரம்பமாகும்.

இதில் முக்கியமான பல தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன. அத்துடன் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளது. (க-405)

# சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற கிளிநொச்சியில் எழுத்துப் பரீட்சை

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப்பரீட்சைகள் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த மாவட்டத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென மாவட்டச் செயலகத்தின் மூலமும் சாரதி பயிற்சிக் கல்லூரிகள் மூலமும் விண்ணப்பித்த சுமார் 1200 பேருக்கான எழுத்துப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளன.

கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5.00மணிவரை கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பரீட்சையில் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், மல்லாவி, மாங்குளம், கிளிநொச்சி, பூநகரி ஆகிய இடங்களைச் சேர்ந்த அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என 1200 இற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் கலந்து கொண்டனர். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கு பல்வேறு துறைசார்ந்தோரின் கருத்துக்கள் தேவை

## பேராசிரியர் சண்முகலிங்கன் உரை

யாழ்ப்பாணம், ஜன. 13

நல்லதொரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கு மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தாவரவியல், அறிவியல், சமூகவியல் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பதில் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன்.நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 'சித்த மருத்துவத்தின் முத்துக்கள் புத்துயிர் பெறுகின்றன' என்னும் தலைப்பில் ஆய்வுத்தொகுப்புக் கருத்தரங்கு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

சித்தமருத்துவம் வீழ்ச்சிஅடைந்து கொண்டு வரும் நிலையில் அதனைப் பேணிக்காப்பது அனைவரதும் கடமையாகும்.

செம்மையான பண்பாட்டின் கலாசார விழுமியங்களைக் கொண்ட யாழ். மண்ணின் சொந்தக்காரர்களாகச் சித்த மருத்துவர்கள் இருந்துள்ளனர். அவை தற்போது மறை பொருளாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

மக்கள் மத்தியில் சித்த மருத்துவம் பற்றிய விழிப்புணர்வையும் அதன் பயன்களையும் வெளிப்படுத்த வேண்டும். பரம்பரை வைத்தியமான சித்த மருத்துவத்தைப் புராதன காலத்தில் இருந்து நவீன காலத்துக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கவேண்டும் என்றார்.

இக் கருத்தரங்கில் கலந்துகொண்ட பாரம்பரிய மருத்துவத்துக்கான தேசிய நிறுவனத்தின் உதவி அத்தியட்சகர் கலாநிதி திருமதி வி. செல்வநாதன் உரையாற்றுகையில் ஆயுள் வேதம் 25 தத்துவங்களையும் சித்தமருத்துவம் 96 தத்துவங்களையும் கொண்டன. யோகாசனம் கூட சித்த மருத்துவத்துக்குள் அடங்குவதால் சித்த மருத்துவத்தின் பயன்பாட்டினை அறிந்துகொள்ளமுடிகின்றது.

சமூகத்தின் தேவையினை நிறைவேற்ற வேண்டியது கல்வி சார்ந்த பல்கலைக்கழகத்தின் அவசியமாகும். ஆயுள்வேதம் என்பது சகல துறையினரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அதற்காக ஆய்வுகள், நிதி ஒதுக்கீடுகள் செய்து இத் துறையினை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றார்.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை உதவி விரிவுரையாளர் வைத்திய கலாநிதி வெ. ஜெகதீஸ்வரன், சித்த மருத்துவத்துறைத் தலைவர் திருமதி தி.குமுதரஞ்சன், வடமாகாண சுதேச வைத்தியத் திணைக்கள முன்னாள் மாகாணப் பணிப்பாளர் பூ. உரோமகேஸ்வரன், பல்கலைக்கழக விஞ்ஞான பீடத் தாவரவியற்பிரிவுத் தலைவர் திருமதி நி. ரவிவர்மன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

(204-313)

## திருவாசக முற்றோதல்

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என ஆலய ஆதீன கர்த்தா ராஜ ராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (201-72)

## பாரதி ச.ச.நிலைய புதிய நிர்வாகிகள்

கைதடிமேற்கு பாரதி சனசமூக நிலையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக பெ. மதிகாந்தன், செயலாளராகச் செ. கேதீஸ்வரன், பொருளாளராக வே. சிவசுப்பிரமணியம், உப. தலைவராகக் க. குமாரசாமி, உப செயலாளராக வி. சிவபாலன் ஆகியோரும். நிர்வாக உறுப்பினர்களாகப் ப.குணபாலு, சி தவசீலன், ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ)


## நினைவலைகள்....

6ஆம் ஆண்டு நினைவு 23ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 30.04.1934





தோற்றம் 12.07.1959

மறைவு 20.12.2004

மறைவு 19.10.1987

அமரர் சொக்கலிங்கம் துரைஐயா அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

(உரிமையாளர்கள்- கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

திதி: 13.01.2011

ஈன்றோரைச் சான்றோராக்கி இல்லை என்ற சொல்லை நீக்கி
இமையாணன் பதிதனிலே இலக்கணமாய் வாழ்ந்து விட்டு
இமையளவும் எண்ணாது எங்கே மறைந்தாயோ? எங்கள் ஐயாவே!
சிறீமுருகன் அடிசேர சித்தம் கலங்கியே நித்தம் வணங்குகின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்:

கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(108776)

## ஆண்டுகள் ஆறுதல்லில் ஆறாத துயரத்தில்...



அமரர்

கிட்டிணன் தர்மலிங்கம்

(ஆசிரியர், யா/ஞானாசாரியர் கல்லூரி, கரவெட்டி)

மண்ணில்: 25.06.1955 விண்ணில்: 19.12.2004

காலடி மணலைக்
கடலலை அரிப்பதுபோல்
மனதை அரிக்கிறது- அப்பா
மறைந்த உங்கள் நினைவுகள்

தோட்ட மண்ணுக்குள் சூரியனா!
என்ற வியப்பு வினாவிற்கு விடையானீர்கள்
செருப்பற்ற காலோடு பாதை போட்டுப் போட்டு
பயணம் செய்த உங்கள் விளம்பரமில்லா வாழ்க்கை
நலிந்துபோன இதயங்களுக்கு நம்பிக்கையானது.

விந்தைதரும் செய்திகளை
விதந்துரைத்துப் படிப்பித்தீர்கள்
படித்தவற்றை எழுதுகையில்
படிப்பதற்கு நீங்களில்லையே அப்பா!

வந்தீர்கள் இருந்தீர்கள்- உங்களைக்
காலப் பணிக்கு ஒப்புக் கொடுத்தீர்கள்
பிறப்பு, இறப்பு இது இயற்கை
இடையில் வாழ்வதுதான் பெருமை
பெருமைக்குரியவராய் வாழ்ந்தீர்கள் சென்றுவிட்டீர்கள்
நெஞ்சு கல்லாய்க் கனக்குதப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்.

(108751)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மலர் 20 . 05 . 2001



விண்மலர் 25 . 12 . 2009

செல்வன் தர்மகுலசிங்கம் சுஜிந்தன்

(தரம்-3, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்)

ஓர் ஆண்டு ஓடியதே
ஒருயிராய் வந்தவனே
ஆருயிராய் வளர்ந்தவனே
ஓர் ஆண்டு வந்ததடா
நீ ஓடி மறைந்தது ஞாயமில்லை

மனிதன் நினைப்பதிங்கு நடப்பதில்லை
மானிட ஜென்மமே பாவமடா
உன் எழில்முகம் காணாது தவிக்கவிட்டு
ஏன் எமைமறந்து போனாய் அன்று?

பிரம்படி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(108780)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கதிரவேலு
மோகனராசா

(முன்னாள் ஊழியர்,
இலங்கை ருபாக்கோ கம்பனி)

ஜனனம் 11★11★1956 மரணம் 14★12★2010



புது வசந்தம் வந்ததென்று உன்
வரவுகண்டு
திளைத்திருந்தோம்! எம்கலிதீர்க்க
வந்தாய்!
எம் குலம் செழிக்க வந்தாய்!
எவர் வந்தாலும் ஓடோடி வந்து உதவி
செய்யும் பேரானவே!
தீராதநோய் வந்து உன்னை
மறுஜென்மம் எடுக்க வைத்ததே!
இதுதான் மானிட வாழ்வின் மகிமையோ?

ஓம் சாந்தி! சந்தி! சாந்தி!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். இன்று (13.01.2011) வியாழக்கிழமை நடைபெறும் அன்னாரது 31ஆம் நாள் நினைவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னாலை வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(108774)

## நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு 1ஆம் ஆண்டு



அமரர்
கந்தையா தம்பிராசா

தோற்றம்: 25.08.1923
மறைவு: 14.12.2008

திதி: அபரபக்க துதியை

திருமதி
தம்பிராசா பாக்கியம்

தோற்றம்: 30.11.1930
மறைவு: 25.12.2009

திதி: பூர்வபக்க அட்டமி

அன்பின் அணிகலனாக
பாசத்தின் உறைவிடமாக விளங்கி
எம்மையெல்லாம் வழிநடத்தி
அன்பையும் அரவணைப்பையும்
எம்மீது கொட்டி வளர்த்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வங்களை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

அளவெட்டி மேற்கு,
பெரியமதவடி.

குடும்பத்தினர்.
0217900922.

(108764)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களில் அரசிற்கு அக்கறையில்லை வடபகுதிச் சம்பவங்கள் அதற்கு எடுத்துக்காட்டு

## உதுல் பிரேமரட்ண குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 13

தமிழ் மக்கள் தொடர்பாகத் தற்போதைய அரசிற்கு அக்கறையில்லை. இதன் காரணமாகவேதான் வடக்கில் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல்கள் என்பன இடம்பெறுகின்றன என்று அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் உதுல் பிரேமரட்ண நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

வடக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் குறித்து அங்கிருக்கும் இராணுவத்தினருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தித் தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்க எதிர்பார்க்கிறது என அரசு அறிவித்து வருகிறது. அத்துடன் தமிழர்களின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன எனவும் அரசு சர்வதேச சமூகத்தினருக்குக் கூறுகின்றது.

எனினும் வடக்கில் இடம்பெறும் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல்கள் என்பனவற்றை ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரும் நடவடிக்கையை அரசு தடுக்க முயற்சிக்கின்ற அதேவேளை, குற்றங்களைத் தடுக்க எத்தனிப்பதில்லை.

இதுபோன்ற தொரு நிலைமை நாளை தெற்கிலும் ஏற்படலாம்.

யாழ். குடாநாட்டில் 5 லட்சத்து 59 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர் என 2007ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பாதுகாப்பிற்கென 55ஆயிரம் பாதுகாப்புப் படையினர் உள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள சனத்தொகையையும், இராணுவத்தினரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், 10 பேருக்கு ஒரு இராணுவச் சிப்பாய் என்ற ரீதியல் உள்ளனர். இந்த நிலையில் கடந்த வாரத்தில் மாத்திரம் 2 கொலைகள் 4 ஆள்கடத்தல்கள் என்பன பதிவாகியுள்ளன.

இதனால் தத்தமது பாதுகாப்பைத் தாங்களே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை வடக்கில் ஏற்பட்டுள்ள நிலையில் அங்கு பாதுகாப்பை வழங்காது, தெற்கில் இராணுவத்தினரை அழைத்து வந்து மரக்கறி விற்பனையில் அவர்களை ஈடுபடுத்துகிறது அரசு

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## கல்விக்கு ஊக்குவிப்பு....



உதவி: சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கள்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பாடசாலை மாணவி ஒருவருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குகின்றார். (204-7)

# ஊழல் நிர்வாகம் இருக்கும் வரை இயற்கைப் பேரழிவுகள் தொடரும்

## பொன்சேகா சாடல்

கொழும்பு, ஜன. 13

நாட்டில் ஊழல் நிர்வாகம் இருக்கும்வரை இயற்கைப் பேரழிவுகள் தொடரும் என்றும் மழை, வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படுகின்றன என்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மேல்நீதிமன்றில் நடைபெற்றது.

இவ்வழக்கில் ஆஜராகி விட்டு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்வதற்கு இடையில் மேல் நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே முன்னாள் இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். வெள்ளைக் கொடி விவகார வழக்கில் ஆஜர்படுத்துவதற்காக அழைத்துவரப்பட்ட போது அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொன்சேகாவிற்கு எதிரான வெள்ளைக் கொடி வழக்கு சம்பந்தப்பட்ட காவல் துறைச் சாட்சியங்களை விசாரிக்க மேல் நீதிமன்ற மூவர் அடங்கிய நீதியரசர் குழு நேற்று முன்தினம் தீர்மானித்தது. இதனடிப்படையில் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியளிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான விசாரணை களை நடத்திய ஐந்து அதிகாரிக ளையே நீதிமன்றத்தில் ஆஜரா குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (சி)

# புத்தளம் நகரசபையில் தேர்தல் களைகட்டுகிறது

புத்தளம், ஜன. 13

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப் படாத போதிலும் புத்தளம் நகரசபையில் தேர்தல் நடவடிக்கைகள் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் பல முக்கிய பிரமுகர்கள் இம்முறை புத்தளம் நகரசபைத் தேர்தலில் குதிக்கலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட புத்தளம் நகரசபையின் நகரபிதா என்.எம்.நஸ்மி மீண்டும் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. இவர் தனது பிரசார நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சரும், புத்தளம் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், முன்னாள் நகர பிதாவுமான கே.ஏ. பாயிஸின் பெயரும் தேர்தல் களத்தில் பலமாக அடிபடுகிறது. புத்தளத்தின் பிரபல தொழிலதிபர் ஒருவரும் களத்தில் குதிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதி நகரபிதா குயின்டஸ் ஜோசப், முன்னாள் நகரசபை உறுப்பினர் டி.எம்.இஸ்மாயில் ஆகியோர் களத்தில் குதிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## தடுப்பூசி வழங்கல்....



கருத்துரை: பாதுகாப்புப் படையினருக்கு ஏச்1 என்1 காய்ச்சலுக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வு அண்மையில் 312 ஆவது இராணுவப் பணியகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாதுகாப்புப் படையினருக்கு யாழ். மாநகர சபைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் ஏச்1 என்1 காய்ச்சல் தொடர்பாகக் கருத்துரை நிகழ்த்தப்படுகின்றது. (204)

# சீரற்ற காலநிலையால் மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கு இவ்வாரம் விடுமுறை

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக மத்திய மாகாணத் திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இவ்வாரம் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய மாகாணத்திலுள்ள நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அடைமழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் மக்க ளின் இயல்பு வாழ்க்கைப் பாதிப்படைந்துள்ளது.

சில பிரதேசங்களில் போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன.

இதனால் மத்திய மாகாணத் திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் இவ்வாரம் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. (சி)

# 'ஊன்றுகோல்' நூல் வெளிவந்துள்ளது

சமய - சமூக அறப்பணி செய்யும் நவாலி ஊன்றுகோல் அறப் பணியகத்தின் 'ஊன்றுகோல்' நூல் வெளியாகியுள்ளது. இதே வேளை உலக அன்னையர் தினத்தில் அன்னையர்களை நினைவு கூர்ந்து பல அறப்பணிகளைச் செய்யும் ஊன்று கோல் அறப்பணியகம் கடந்த வருடம் 200 அன்னையர்களைக் கௌரவித்துப் பரிசில் வழங்கியது.

இதன் ஆரம்ப ஸ்தாபகர்களான க.நாக லிங்கம், செ.மகேந்திரன் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையால் தொடர்ந்தும் ஊன்று கோல் பணியகம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (201-302)

# தமிழர் எதிர்கொள்ளும் ஆபத்துக்களைத் தடுக்க அரசில் இருக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 13

மக்களுக்குச் சேவையாற்றுவதற்கும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் ஆபத்துகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் அரசில் பங்காளிகளாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபடியே மக்களுக்குப் பணியாற்றலாம் - என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். கொழும்பு கிழக்கு கிருலப் பனையில் மேல் மாகாணசபை உறுப்பினரும் முன்னணியின் பொதுச் செயலாளருமான கலாநிதி ந.குமரகுருபரனின் முயற்சியால் கூட்டிணைக்கப்பட்டு மேல்மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பிலவினால் திறந்து வைக்கப்பட்ட குமரோதய தமிழ் வித்தியாலய நிகழ்வில் அதிதி யாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

எனது நண்பர் அமைச்சர் உதய கம்மன்பில மேல் மாகாணத்தை ஆளுகின்ற ஒரு அமைச்சராவார். மேலும் அவர் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ் தரும் ஆவார். எங்களது கட்சியின் பொதுச்செயலாளர் குமரகுருபரன் மாகாணசபையில் எதிரணியைச் சார்ந்த ஒரு உறுப் பினராவார். எங்களது கட்சி அரசில் அங்கம் வகிக்காத ஒரு உறுதியான எதிர்க்கட்சியாகும். அரசியல் ரீதியாக வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருந்தாலும் மக்கள் பணியாற்றுவதற்காக இன்று புரிந்துணர்வுடன்செயற்பட் டுள்ள கம்மன்பில, குமரகுருபரன்ஆகிய இருவரையும் நான் பாராட்டுகின்றேன்.

அரசிற்கு வந்தால்தான் ஒத்துழைப்பேன் என்று அமைச்சர் சொல்லவில்லை. தனித்துவத்தை விட்டு விட்டு குமரகுருபரனும் செயற்படவில்லை. பொதுத் தேவைக்காக இருவரும் இணைந்து செயற்பட்டுள்ளமை இந்தக் கொழும்பு மாவட்டத்திற்கே ஒரு முன்னுதாரணமாக அமைந்திருக்கின்றது.

தனித்தமிழ் பாடசாலை என்பது வேறு. பன்மொழிப் பாடசாலையின் தமிழ் மொழிப் பிரிவு என்பது வேறு. நாராஹென்பிட்டியவில் அமைந்திருந்த மஹாவத்தை தமிழ்ப் பாடசாலை தனியான ஒரு பாடசாலையாகும். இந்தத் தனித் தமிழ் மொழி மூலப் பாடசாலை இன்னொரு பாடசாலையின் தமிழ்ப் பிரிவாக மாற்றப்படவிருந்தது. இந்த அபாயத்தையே இன்று குமரகுருபரன் தடுத்து நிறுத்தியுள்ளார்.

இன்று இப்பாடசாலையின் தனித்துவம் பாதுகாக்கப்பட்டுத் தனியான ஒரு கட்டடத்திலே இந்தப் புதிய பாடசாலை கூட்டிணைக்கப்பட்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில் இந்தக் கட்டடத்தில் இயங்கிவந்த சிங்களப் பாடசாலை பராக்கிரம, சுஜாதா ஆகிய பாடசாலைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு புதிய பாடசாலையாக உருவாகின்றது. இது தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகள் மூலமும் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கும், கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் நடை முறைச் சாத்திய மான தீர்வாக அமைந்திருக்கின்றது -இப்படி அவர் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

## 30ஆம் ஆண்டு 11ஆம் ஆண்டு



**இராமலிங்கம் சிவசுந்தரம்** **சிவசுந்தரம் வனசாட்சி**

திதி: பூர்வபக்க (வளர்பிறை) நவமி

கண்கண்ட தெய்வங்களே! என்
கண்ணீரால் உங்கள் திருப்பாதங்களைக் கழுவுகின்றேன்
உயிர்தந்த தெய்வங்களே!- என்
உள்ளத்தால் உங்களை நினைக்கின்றேன்
கண்களில் நீர் ததும்பக் கரங்களில் பூவெடுத்து
உள்ளத்தால் நெகிழ்ந்துருகி
உங்கள் மலர்ப் பாதங்களில் மலர் தூவி
அழியாத கோலங்களாய் அடி மனதில் இருக்கும்
உங்களுக்கு நினைவோடு அஞ்சலியை
நிறைவாகச் செய்கின்றேன்.

V.M.றோட்,
பருத்தித்துறை. (சி/574541)

அன்பு மகள்
சிவபாலசுந்தரம் (பபி).

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜன.13

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2343ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "Z" என்ற ஆங்கில எழுத்தும் 3/6/9/4/3/5 என்ற இலக்கங்களும் அதிஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின. இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் Z/3/6/9/4/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சுப்பர் பரிசை ஒருவர் வென்றுள்ளார்.

முதலாம் பரிசு வெல்லப்படவில்லை.

6/9/4/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/4/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,220 பேருக்கு 4 ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

3/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,249 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

5 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,20,745 பேருக்கு 6 ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 3/6/9/4/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/6/9/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 125 பேருக்கு 8 ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

3/6/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,231 பேருக்கு 9 ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,062 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

Z என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 48,225 பேருக்குப் பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ஐ-10)



## வீடு வளவு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கில் உள்ள நான்கு அறைகள் குசினி, கோல், இரண்டு அற்றாச் பாத்றூம் சகலவசதிகளுடனும் அமைந்த 3½ பரப்புக் காணி வீடு வளவுடன் விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: 021 3007060


# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 25 . 09 . 1985



விண்ணில் 18 . 12 . 2007

**அமரர் பிரம்மஸ்ரீ சி.கணேசராஜ சர்மா**

திதி: நவமி

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து
ஆசை மொழியூட்டி பாசமுடன் இணைத்த
இனிய உங்கள்முகம், உள்ளத்தில் நல்லவனாய்
ஊர் போற்றும் உத்தமனாய் வாழும் காலத்தில்
எங்களோடு வாழாமல் தரணியிலே எம்மை
எல்லாம் தவிக்க விட்டு நீங்கள் சென்று
இன்றுடன் மூன்று ஆண்டுகள் ஆனாலும்
மாறாது எம் நெஞ்சில் உங்களோடு
நாம் வாழ்ந்த பசுமையான நினைவுகள்.

(108775)

'ஜெய துர்க்கா இல்லம்',
பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

நினைவுகளுடன்:
மனைவி- க.தனுஷி, மகன்- க.ஜெகதீஸ்வர சர்மா,
மகள்- க.துர்க்காஜினி.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## விஜயகுமார் சர்வேஸ்வரி

பிறப்பு 26.02.1969 இறப்பு 25.12.2009

எங்கு சென்றாலும் எம்மிடம்
சொல்லிவிட்டுப் போவீரே அம்மா!
ஆனால் இன்று நீங்கள் சென்று
ஆண்டொன்று ஆனபோதும்
நீங்கள் எங்கு சென்றீர்கள் என்று
சொல்லாது போனது ஏனோ அம்மா!
ஆறாத சோகத்தையும் காயத்தையும்
எமக்குத் தந்தது ஏனோ அம்மா!

கடந்த (25.12.2009) அன்று இறையடி சேர்ந்த எமது அன்புக் குலவிளக்கின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (13.01.2011) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்தநிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(108516)

# மரண அறிவித்தல்

## தம்பிராசா தங்கம்மா



காரைநகர், களபூமி, கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா தங்கம்மா (09.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாவகச்சேரி சண்முகம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா-அமுதம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் நேசரத்தினம், தனலட்சுமி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணகுமார் (இத்தாலி), சிவகுமார்(இத்தாலி), சாந்தகுமார்(லண்டன்), பத்மா(ஜேர்மனி) புனிதலோகேஸ்வரி (காரைநகர்), காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும் உருக்குமணிதேவி, நாகேஸ்வரி, நவரத்தினம், பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியும் மயூரன், கண்ணன், பிரதீபன் (இத்தாலி), சுதாகரன், செந்தூரன்(லண்டன்), ஜீவரத்தினம், கிருசாந்தினி, வினுஜா(ஜேர்மனி), நிரோசன் (இத்தாலி), காலஞ்சென்ற சசிதரன் மற்றும் கிருசாந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரப்பிட்டியந்தனை,
களபூமி, காரைநகர். (103899)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய படையணியின் திறன் வலுவூட்டல் பயிற்சிக்கு 5 மாவட்டங்கள் வடக்கு மாகாணத்தில் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம் ஜன.13

தேசிய இளைஞர் படையணியில் திறன் வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் உள்ள சேருவில பிரதேசம் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் இளைஞர் அலுவல்கள் மற்றும் வலுவூட்டல் அபிவிருத்தி அமைச்சில் மக்கள் (மாணவர்கள்) நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதுகுறித்து வடக்கு மாகாண யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாண பொது நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளரும், கிளிநொச்சி - முல்லைத்தீவுப் பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகத்தின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு வந்துள்ளனர்.

மேற்படி அமைப்புக்கள் வடக்குத் தமிழ் இளைஞர் பாதிப்பு தொடர்பாக தெரிவிக்கையில்:

''இளைஞர் அலுவல்கள் மற்றும் வலுவூட்டல் அபிவிருத்தி அமைச்சு என்பது பெரும்பான்மை இனத்தவர்களுக்குரிய அமைச்சு மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சு.

தேசிய இளைஞர் படையணிக்கு ஆள்சேர்ப்பு விண்ணப்பத்தில் இலங்கை ஆசியாவில் மட்டுமல்லாது உலகின் சிறந்த நாடுகள் வரிசையில் முன்னிலை வகிக்குமாயின் அது தேசிய ஒருமைப்பாடுடன் கூடிய சக்தி மிக்க நடவடிக்கைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இன்றைய இளைஞர் நாளை எதிர்நோக்க இருக்கும் பெரும் தொழிற் சவால்களைத் தகர்த்து உங்களின் எதிர்கால இலக்கைச் சிறந்த முறையில் வெற்றி கொள்ளத் தேவையான திறமை, தன்னம்பிக்கை, சக்தி வழங்கும் தேசிய இளைஞர் படையணி உங்களை அன்புடன் வரவேற்கிறது'' எனக்கோரி தென் பகுதி மக்களிடம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இது தமிழர் மத்தியில் தொழில் இல்லாத இளைஞர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி யுள்ளது.

இதேவேளை 105 நாள் பயிற்சியின் பின்னர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை பெற்றுக் கொடுக்கவும் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (201-302)

# அரச மற்றும் ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு இம்மாதம் முதல்

அச்சுவேலி, ஜன.13


வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவுள்ள அதிகரித்தக் கொடுப்பனவுகள் இந்த மாதத்திலிருந்து வழங்கும் வகையில் சுற்றறிக்கைகள் சகல திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜனவரி மாதத்தில் இருந்து அதிகரித்த கொடுப்பனவாகக் திரட்டிய சம்பளத்தின் 6 வீத சம்பள அதிகரிப்பும் (ஓய்வூதியம் கணிப்புக்கு உட்படாதது) வாழ்க்கைச் செலவுப்படியாக 600 ரூபாவும், ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைச்செலவு அதிகரிப்பாக 300 ரூபாவும் வழங்கப்படவுள்ளன. அதிகரித்த கொடுப்பனவுகள் அனைத்தும் இந்த மாதத்தில் இருந்து வழங்கும் வகையில் சுற்றறிக்கைகள் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 22,835 ரூபாவுக்கு மேற்பட்ட ஆரம்பத் திரட்டிய சம்பளத்தைக் கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக அதிகரிக்கப்பட்டுள்ள 600 ரூபா யூலைமாத்தில் இருந்து வழங்கப்படவுள்ளது.

ஜனவரிமாத்திலிருந்து வழங்கப்படவேண்டிய அதிகரித்த கொடுப்பனவு இந்த மாதச் சம்பளத்துடன் வழங்கப் படாத விடத்து அடுத்த மாதம் நிலுவையுடன் சேர்த்து வழங்கப்படும். அதிகரித்த கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் திணைக்களத் தலைவர்கள் மேற்கொண்டுள்ளனர். (201-11)

## தெரிந்து கொள்வோம்...



மூளைசாலிகளின் விளக்கம்: மூளை விழிப்புணர்வு நாளை ஒட்டிய கலந்துரையாடல் யாழ். பல்கலைக்கழகப் பௌதிகத்துறை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. ஜெனீவாப் பல்கலைக்கழக நரம்பியல் நிபுணர் பேராசிரியர் ஆன் கேற்றோ, கனடா மொன்றியல் மக்கில் பல்கலைக்கழக மருந்தாக்கவியற்றுறை முன்னாள் பேராசிரியர் காபர் கேற்றோ ஆகியோர் மூளையின் செயற்பாடு குறித்து விளக்கமளிக்கின்றனர்.

# இந்திய மீனவரை எதிர்த்து எழுவை தீவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் ஜன.13

இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லைக்குள் ஊடுருவிக் கடல் வளத்தைச் சூறையாடுவதை நிறுத்தக்கோரி எழுவைதீவில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி, ஹர்த்தால் என்பன இடம்பெற்றன.

தமது தொழில் நிலையங்களை மூடி போக்குவரத்துக்களை நிறுத்தித் தொழிலுக்குச் செல்வதை நிறுத்தி ஊர் மக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

''இந்திய மீனவர் எமது பகுதிக்குள் வருவதை நிறுத்து'' ''எமக்கு இழைக்கப்படும் அநீதியைத் தடுத்து நிறுத்து'' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு பெண்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் '' உடன் தீர்வு இன்றேல் போராட்டத்தைத் தொடர்வோம்'' என்றும் பெண்கள் ஆர்ப்பரித் தனர்.




மக்களின் போராட்டம் காரண மாக எழுவை தீவுக்கான போக்குவரத்துக்கள் யாவும் நிறுத்தப்பட்டன. (ஓ-ஜ)

# புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் இசுறு திட்டப் பணிகள் ஆரம்பம்

கோப்பாய், ஜன.13

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் ''இசுறு'' பாடசாலை திட் டத்தின் கீழ் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகி யுள்ளன.

இதன் அடிப்படையில் இரண்டு கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகித் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

ஒரு கட்டடத்தொகுதி ஒரு தளமும் ஒரு மாடியும் கொண்டதாகவும் மற்றையது ஒரு தளமும் 2 மாடிகள் கொண்டதாகவும் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கட்டடத் தொகுதிகள் அமைவதன் மூலம் பாடசாலையின் கற்றல் கற்பித்தலுக்கான பௌதிக வளங்கள் பூர்த்தி செய்யப்படும்.

இதேவேளை இசுறு திட்டத்தில் ஒவ்வொரு பிரதேசத்திலும் குறித்த ஒரு பாடசாலை தெரிவு செய்து அங்கு நகர்ப்புறப் பாடசாலைக்கு ஒத்ததாக பௌதிக வளங்கள் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளன.

இதன்மூலம் நகர்ப்புற பாடசாலைகளில் கிடைக்கும் அதே வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அங்கு நிலவும் போட்டித் தன்மையைக் குறைப்பதற்கு வழியமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-72)

# பசும்பால் வழங்கும் செயல் திட்டத்துக்கு ஒத்துழைக்காதோர் மீது நடவடிக்கை

## சிறுவர் செயலகப் பணிப்பாளர் தகவல்

அச்சுவேலி, ஜன.13

பாலர் பாடசாலைகளிலும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்களிலும் உள்ள பிள்ளைகளுக்குப் பசும்பால் வழங்கும் திட்டம் அரசின் செயற்றிட்டம் ஆகும். இதனை செயன்முறைப்படுத்துவதில் நிறுவனங்களின் ஆசிரியர்கள் - பொறுப்பாளர்களின் விருப்பு வெறுப்புக்கு இடமே இல்லை. அனைத்துத் தரப்பினரும் இதனை நடைமுறைப்படுத்துவதில் முழுமையாக ஈடுபடவேண்டும்.

இதேவேளை பசும்பால் வழங்கும் செயன்முறையை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்காத பாலர் முன்பள்ளி ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் சிறுவர் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சிறுவர் செயலக பணிப்பாளர் வலி.கிழக்குப் பாலர் முன்பள்ளிகளின் செயற்பாடுகளை நேரில் அவதானித்ததோடு வாதரவத்தை உட்பட பல இடங்களை பார்வையிட்டு நிலைமைகளை அவதானித்தார். அதனைத் தொடர்ந்து வலி. கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் தலைமை அலுவலகத்தில் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மேற்படி கலந்துரையாடலில் பசுப்பால் வழங்கும் செயற்றிட்டம் தொடர்பாகக் கருத்துரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:

சிறுவர்களின் கல்வி நலனில் முதல் நிலையில் உடல் நலமும் போசாக்கும் மிகமிக அவசியமாகும். இதனைக் கருத்திற் கொண்டே மகிந்த சிந்தனையின் பசுப்பால் வழங்கும் செயற்றிட்டம் வலியுறுத்தப் பட்டுள்ளது.

சிறுவர்களுக்கான பசுப்பால் வழங்கும் செயற்பாடுகளில் பாலர் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் பொறுப்பாளர் ஆகியோரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமே இல்லை. அரசின் வேலைத் திட் டத்தை ஆதரித்து முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பாக ஒத்துழைக்கவில்லை என முறைப்பாடு செய்யப்படும் இடத்து சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்களினால் சிறுவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது. சிறுவர்களின் நலன் பேணப்பட வேண்டும். எல்லாச் சிறுவர்களுக்கும் சமமான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

இதேவேளை சிறுவர்களுக்குப் பசுப்பால் வழங்கும் செயற்றிட்டம் யாழ்.மாவட்டத்தில் வெற்றி அளித்துள்ளது. இந்த வகையில் நான் பெருமைப்படுகின்றேன் என்றார் அவர்.

மேற்படி கலந்துரையாடலில் வலி.கிழக்குப் பிரதேச செயலக ஆரம்பப்பள்ளி அபிவிருத்தி அதிகாரி ப.பத்மகுமார், வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் திருமதி எஸ்.ஜெயந்தா, உதவிச் செயலாளர் எஸ். முரளிதரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (201-11)

# சுற்றுலாப் பயணிகள் 30 லட்சம் பேர் கடந்தாண்டில் குடாநாட்டுக்கு வருகை

யாழ்ப்பாணம், ஜன.13

குடாநாட்டில் நிலவியுள்ள சமாதான காலப்பகுதியை அடுத்து கடந்த ஆண்டு சுமார் 30 லட்சம் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் குடாநாட்டுக்கு வருகை தந்துள்ளனர்

இதேவேளை கடந்த பல வருடங்களாகத் தென்னிலங்கைப் பயணிகள் யுத்தம் காரணமாக வர முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டமை மற்றும் யுத்தம் இடம்பெற்ற பகுதிகளை பார்வையிடும் ஆவல், யாழ். நாகவிகாரை, நயினாதீவு, மாதகல் பகுதிகளில் உள்ள விகாரைகளைப் பார்வையிடல், வழிபடல் போன்ற பல்வேறு காரணிகளால் கடந்த ஆண்டு அதிக எண்ணிக்கையான தென்னிலங்கைப் பயணிகள் வருகைதந்துள்ளனர்.

இந்த வகையில் கடந்த டிசெம்பர் மாதம் மட்டும் சுமார் இரண்டு லட்சம் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்துள்ளமையை ஆனையிறவுத் தடைமுகாமில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ பதிவுகளின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இதேவேளை தென்னிந்தியப் பயணிகளின் அதிகரித்த வருகையால் குடாநாட்டில் பல நூற்றுக் கணக்கான வீடுகள் விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (201-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேஷம்:**
ஆர்வக் கோளாறால் சில விடயங்களில் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க பணத்தை தாராளமாகச் செலவு செய்வீர்கள். கடும் வேலையால் வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். உங்களுக்கு பிடித்த ஒன்று குடும்பத்தினருக்குப் பிடிக்காமல் போகலாம். தர்ம காரியம் செய்வீர்கள்.



**இடபம்:**
கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்கும் நாள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். வீண் பழிகள் விலகிப் பாராட்டுக்களைப் பெறலாம். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். ஆதாயம் பெறும் நாள்.



**மிதுனம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நாள். உறவுப்பெண்கள் வழியிற் சில தொல்லைகள் உருவாகலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். கடந்த காலத்தில் நீங்கள் உதவி செய்த ஒருவர் உங்களுக்கு பதில் உதவி செய்யலாம். உற்சாகம் கூடும்.



**கடகம்:**
வெளியிடங்களுக்குச் செல்லும் போது அங்கு உங்களுக்குத் தெரிந்த ஒருவரைச் சந்திக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமான முடிவுக்கு வரும். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள்.



**சிங்கம்:**
சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குறுதி கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் தவிக்க விடலாம். தொழில் ரீதியான விடயங்களில் மிகுந்த கவனமாகச் செயற்பட வேண்டும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்க்டிகளுக்கு ஆளாகலாம்



**கன்னி:**
எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் கிடைக்கும். ஆசைப்பட்ட பொருளொன்றை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். நண்பர்களுக்காகச் சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். வெளியூர்ப் பயணம் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். சில விடயங்கள் பாதகமாக நடப்பது போல தோன்றினாலும் இறுதியில் சாதகமாக முடியும்.



**துலாம்:**
தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்கள் சுட்டிக் காட்டலாம். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். தொழில் ரீதியாக வேலைப்பளு கூடும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.



**விருச்சிகம்:**
உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களால் அவதிப்படலாம். சக ஊழியர் ஒருவரை விமர்சித்து அவரின் அதிருப்திக்கு ஆளாகலாம். பெருமைக்காகச் சில காரியங்களைச் செய்வீர்கள். கடந்தகாலத் தவறு ஒன்றை நினைத்து வருந்துவீர்கள்.



**தனு**
தாய் வழி உறவுகள் வழியில் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். உங்களின் திறமைக்கு சவால் விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிலர் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் நடக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும். சிறிய பிரச்சினை ஒன்றைப் பற்றி பெரிய அளவில் கற்பனை செய்வீர்கள்.



**மகரம்:**
: பரிவு, கருணையுடன் சிலருக்கு உதவி செய்வீர்கள். மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். வியாபாரிகள் தந்திரமாகச் செய்றபடுவதன் மூலம் கணிசமான ஆதாயம் பெறலாம். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பணவரவு உண்டு.



**கும்பம்:**
திட்டமிட்டதற்கு மாறாக காலதாமதமாக சில வேலைகளைத் தொடங்கலாம். பல நாள்களாகச் செய்ய வேண்டிய வேலை ஒன்றை இன்றே சேர்த்துச் செய்யலாம். வேலையாள்களால் தொல்லையுண்டு. கணவன், மனைவி இடையே சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். சிலர் உங்களைப் புறக்கணிக்கலாம். தடை, தாமதம் நேரும்.



**மீனம்:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பீர்கள். பழைய அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். பிள்ளைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் சிலரிடம் ஏற்பட்ட மனக்கசப்புகள் தீரும். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். எதிர்பாராத தண்டச் செலவு நேரும்.

## வரவேற்பு...





கௌரவிப்பு: நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுகின்றனர். தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் மாணவர்களுக்குப் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கிறார்.

## வாயை மூடுங்கள்



ஒரு பாடசாலையில் ஒரு வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். மேசையின் மீது மூன்று குரங்குப் பொம்மைகள் இருந்தன.

''மாணவர்களே! இந்தப் பொம்மைகளைக் கவனியுங்கள். இவை என்ன பொம்மைகள் ''? என்று கேட்டார். ''குரங்கு பொம்மைகள்'' என்றனர் மாணவர்கள்.

''இந்தப் பொம்மைகள் என்ன செய்து கொண்டிக்கின்றன?'' என்றார்.

''ஒன்று கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது... இரண்டாவது காதை மூடிக்கொண்டு இருக்கிறது... மூன்றாவது வாயை மூடிக்கொண்டிருக்கிறது... ''என மாணவர்கள் பதிலளித்தனர்.

''கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள். எப்படி அவை கண்ணையும், காதையும், வாயையும் மூடிக் கொண்டிருக்கின்றன?'' என ஆசிரியர் கேட்டார்.

''ஒரு குரங்கு தன் இருகைகளாலும் இரு கண்களை மூடிக்கொண்டிருக்கிறது. இன்னொரு குரங்கு தன் இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும், இன்னொன்று அதே போல இரண்டு கைகளாலும் வாயை மூடிக் கொண்டிருக்கிறது!''

''சரி...இப்போது சொல்லுங்கள்... இதற்கு என்ன அர்த்தம்?...

''தீயவற்றைப் பார்க்காதே - தீயவற்றைக் கேட்காதே - தீயவற்றைப் பேசாதே!'' என்று விடையளித்தனர் மாணவர்கள்.

''சரி... இப்போது இன்னொரு முக்கியமான கேள்வி. இரண்டு கண்களையும் இரண்டு கைகளால் மூடுவது சரி, இரண்டு காதுகளையும் இரண்டு கைகளால் மூடுவதும் சரி... ஒரு வாயை எதற்காக இரண்டு கைகளால் மூட வேண்டும். ஒரு கையே போதுமே..?'' எனக் கேட்டார் ஆசிரியர்.

மாணவர்களிடமிருந்து இந்தக் கேள்விக்குப் பதில் ஏதும்வரவில்லை. ஆசிரியர் விளக்கினார். ''மாணவர்களே! கண்களுக்குப் பார்ப்பது மட்டுமே வேலை, காதுகளுக்குக் கேட்பது மட்டுமே வேலை; ஆனால் வாய்க்கு மட்டும் இரண்டு வேலைகள், சாப்பிடுகிறவேலை ஒன்று, பேசுகிறவேலை ஒன்று இவை இரண்டையும் அரைவாசியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே ஒருவாயை இரண்டு கைகளால் மூடியிருக்கிறது!'' என்றார். மாணவர்கள் முகத்தில் தெளிவு பிறந்தது. இப்போது ஆசிரியர் சொன்னார் -

''இன்னும் ஒரு கருத்தையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நாம் பேசுவதைப் பொறுத்தவரையில் இரண்டு விதமான தவறுகளைச் செய்து விடுகிறோம். பேச வேண்டியபோது பேசாமல் இருந்து விடுவது ஒரு தவறு பேசாமல் இருக்க வேண்டிய போது பேசி விடுவது ஒரு தவறு!''

மாணவர்கள் ஆர்வத்தோடு கவனித்தார்கள். ஆசிரியருக்கு உற்சாகம் பிறந்தது. உடனே ஒரு கதை சொல்ல ஆரம்பித்தார். சீன தேசத்து நாட்டுப்புறக் கதை இது!

ஒரு கிராமத்திலே ஒரு விவசாயி இருந்தார். வீட்டிலே எலித் தொல்லைகள் அதிகமாக இருந்தது. அதனாலே எலிகளை விரட்டுவதற்காக ஒரு பூனையை வளர்த்தார்.

திருடர்களை விரட்டுவதற்காக ஒ்ரு நாயையும் வளர்த்தார். அந்தப் பூனை எப்ப பார்த்தாலும் ''மியாவ், மியாவ்'' என்று கத்திக்கொண்டே வீட்டைச் சுற்றிவரும். பகலிலும் இரவிலும் கத்தும். அதனால் எலித் தொல்லைகள் இல்லை, எல்லாம் ஓடி ஒழிந்து விட்டன.

ஆனால் இன்னொரு தொல்லை, இந்தப் பூனை எப்பவும் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததனால் விவசாயியால் இரவில் சரியாகத் தூங்கமுடியவில்லை. ஒரு நாள் நடுராத்திரியில் இந்தப் பூனை சத்தம் போட்டுக் கத்தினதாலே அந்த ஆளுக்குத் தூக்கம் கலைந்து போய் விட்டது.

ஆத்திரமடைந்த அவர் ஒரு தடியை எடுத்துக் கொண்டு அந்த பூனையிடம் சென்றார். ''உன்னை யார் இப்படிக் கத்தச் சொன்னது'' என்று இரண்டு அடி கொடுத்தார்... இனிமேல் வாயைத் திறந்தால் கொன்றுவிடுவேன்'' என மிரட்டி விட்டுத் தூங்கப் போய்விட்டார்.

இந்தப் பூனை அடிவாங்குவதை அங்கேயிருந்த நாய் பார்த்துக்கொண்டே இருந்தது. அதுக்கு உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது.

''சத்தம் போட்டால் நாமும் இதுமாதிரித்தான் அடிவாங்க வேண்டும் போல இருக்கு. இனிமேல் வாயதைத் திறக்காமல் இருந்திட வேண்டியதுதான் உத்தமம்'' என்று நினைத்தது.

அன்று இரவே அந்த வீட்டுக்குத் திருடர்கள் வந்து விட்டார்கள். வீட்டிலே இருந்ததையெல்லாம் கொள்ளையடித்துப் போனார்கள். நாய் பார்த்துக் கொண்டுதான் இருந்தது. ஆனாலும் வாயைத் திறக்கவில்லை. விடிந்தது - விவசாயி எழுந்தார். அப்போதுதான் வீட்டிலே திருட்டுப் போன விவரம் அவருக்குத் தெரிந்தது.

பூனையை அடித்தாரே அதே தடியைக் கையில் எடுத்தார், நேராக நாயிடம் போனார்.

''இரவு முழுவதும் வாயைமூடிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தாயா? திருடனைப் பார்த்துக் குரைக்காத நீயும் ஒரு நாயா...?'' என்று சொல்லி அடி, அடி, என்று அடித்துவிட்டார். அடிவாங்கின நாய் கத்திக் கொண்டே கொல்லைப் பக்கம் ஓடிவந்தது. அதன்பின் அது மனதுக்குள் நினைத்ததாம் ''சே! என்ன மோசமான மனிதர்கள். வாயைத் திறந்து கத்தினாலும் அடிக்கிறார்கள். வாயை மூடிக் கொண்டு சும்மா இருந் தாலும் அடிக்கிறார்கள்''.

யார் வாயைத்திறக்க வேண்டும். யார் அமைதி காக்க வேண்டும் என்பது அந்த நாய்க்கு விளங்கவில்லை. அதுதான் இந்தக்கதை.

ஒரு பேச்சுவார்த்தை நடக்கும்போது யார் பேச வேண்டும் என்பது முக்கியம். யார் பேசாமல் இருக்கவேண்டும் என்பது அதை விட முக்கியம்.

அதேபோல் சும்மா இருக்கவேண்டிய நேரத்தில் பேசுவதும் தவறு, பேசவேண்டிய நேரத்தில் சும்மா இருப்பதும் தவறு. ஒருத்தன் திடீரென்று ஒருநாள் கண் கலங்கினான். நண்பர்கள் கேட்டார்கள் ஏனப்பா அழுகிறாய்? என்று. ''என் மனைவி பத்து வருடமாக என் கூடப் பேசவே மாட்டேன் என்று சபதம் போட்டு விட்டாள்'' என்றான். அதுக்காகவா அழுகிறாய்...? ''இல்லைத்''தான். பிறகு ஏன் அழுகிறாய்?'' ''அந்தப் பத்துவருடக்கெடு இன்றோடு முடிவடைகிறது அதற்காக...!'' என்றானாம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் வைத்தியசாலைகளை முறைப்படுத்துவதன் அவசியம்

பஞ்சவர்ணன்




"தனியார் மருத்துவ நிறுவனங்கள் காசுக்காக எதையும் செய்யும்; அவற்றின் ஒரே நோக்கம் காசு உழைப்பதே என்பதை தமிழ் சினிமாவில்தான் பார்த்திருக்கிறோம். ஆனால், இப்போது யாழ்ப்பாணத்திலும் அத்தகைய நிலைமை வந்துவிட்டதோ" என்று எண்ணத் தோன்றுகிறது என்கிறார் சந்திரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). நகரில் பணியாற்றும் அரச அலுவலர் அவர்.

அவரது மாமியாரை இங்குள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்துப் பராமரித்துச் சரிவராத நிலையில் இறுதியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தார். அங்கு நோய் என்ன என்பதைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கத் தொடங்கும் போது அவரது மாமியார் இறந்து விட்டார். இவ்வளவுக்கும் தனியார் வைத்தியசாலையில் பல நாள்கள் இருந்த அந்த அம்மையாருக்கு என்ன நோய் என்பதை அங்கிருந்தவர்களால் கண்டறிய முடியவில்லை.

கடைசியில் அவர்கள் கைவிரிக்க, தஞ்சமடைந்தது யாழ். போதனா வைத்தியசாலையைத்தான். ஆனால் காலம் கடந்திருந்தது. அங்கு உடனடியாக நோய் கண்டறியப்பட்டது. ஆனால், சிகிச்சை பயனளிக்காமல் அவர் இறந்து போனார்.

"கண்டறிய முடியாத அளவுக்கு அவருக்கு (மாமியார்) நோய் இருந்ததா? அல்லது நோயைக் கண்டறியும் திறன் அவர்களிடம் இல்லையா? என்பது புரியவில்லை. ஆனால் முன்னரே போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்திருந்தால் அவரைக் காப்பாற்றி இருக்க முடியுமோ என்று இப்போது மனது கிடந்து தவிக்கிறது" என்கிறார் சந்திரன்.

சந்திரனின் நிலை மட்டும் என்றில்லை. யாழ்ப்பாணத்தில் பலரின் புலம்பல் நிலை இதுதான். நோயாளர்களின் எண்ணிக்கை குறைவு, நினைத்த நேரத்தில் போய்க் காட்டிவரமுடிகிற வசதி, சுகாதாரத்தில் மேம்பட்ட நிலை என்பவற்றைக் கருத்தில் கொண்டுதான் பலரும் தனியார் வைத்தியசாலை களை, கிளினிக்குகளை நாடுகிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக கிளினிக்குகளும் தனியார் வைத்தியசாலைகளும் இருப்பதால் அவற்றை இலகுவில் மக்களால் எட்டிவிட முடிகின்றது என்பதும் அவர்கள் அவற்றை நாடுவதற்கான மற்றொரு காரணம்.

மருத்துவ தேவை ஓர் அத்தியாவசிய அடிப்படைத் தேவை என்பதற்கு அமைவாக தனியார் வைத்தியசாலைகளும் கிளினிக்குகளும் தமது நியமங்களை, தராதரங்களை சரிவரப் பேண வேண்டியது அவசியம். ஆனால், தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபை (PHSRC) அறிவிக்கப்பட்டுள்ள நியமங்களை கிளினிக்குகளும் தனியார் மருத்துவமனைகளும் எவ்வளவு தூரம் பின்பற்றுகின்றன என்ற கேள்வியை சிறிது காலத்திற்கு முன்னர் எழுதிய எனது கட்டுரையில் கேள்விக்கு உட்படுத்தி இருந்தேன்.

இங்குள்ள எல்லாத் தனியார் வைத்தியசாலைக்ளும் நோய் முற்றிய நோயாளிகளைக் கைவிட்ட பின்னர் அவர்கள் போதனா வைத்தியசாலையைத்தான் நாடுகிறார்கள். அப்படி இருக்கும் போதும் மக்கள் ஏன் தனியார் வைத்தியசாலைகளை நாடிச் செல்கிறார்கள் என்பது முக்கியமான கேள்விதான்.

"தனியார் வைத்தியசாலைகள் பலவற்றில் ஆளணிப் பற்றாக்குறையும் வளப் பற்றாக்குறைகளும் நிலவுகின்ற போதும், அரச வைத்தியசாலைகளில் நோயாளர்கள் முகங்கொடுக்கும் சில அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டும் தனியார் மருத்துவமனைகள் வழங்கும் சின்னச் சின்ன வசதிகளைக் கருத்தில் கொண்டுமே மக்கள் தனியார் வைத்தியசாலைகளை நாடுகிறார்கள்" - என்கிறார் நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்க செயலாளர் கந்தர் விசுவலிங்கம் கந்தவேள்.

"தனியார் மருத்துவ மனைகள் பலவற்றில் இரவு வேளைகளில் தன்னந்தனியே ஒரேயொரு அனுபவமற்ற மருத்துவரே பணியாற்றுகின்றார். அதனால், திடீரென வேறு தாக்கத்திற்கு உள்ளாகி வரும் நோயாளர்களை அவர்களால் கையாள முடிவதில்லை. அப்படியான நோயாளர்கள் உடனடியாக போதனா வைத்தியசாலைக்கே மாற்றப்படுகிறார்கள்" என்று மேலும் கூறுகிறார் கந்தவேள்.

மக்கள் தனியார் வைத்தியசாலைகளை நாடுவதைவிட அரச வைத்தியசாலைகளுக்கு நேரில் சென்று சிகிச்சை பெறுவதே சிறந்தது என்பது கந்தவேளின் கருத்து. "அரச மருத்துவமனைகளில் சிகிச்சைபெறும் நோயாளிகள் குணமாகும் விகிதாசாரத்துடன் தனியார் மருத்துவமனைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரச மருத்துவமனைகளே சாதனை படைக்கின்றன" என்கிறார் அவர்.

அரச மருத்துவமனைகளில் சில சமயங்களில் சில ஊழியர்கள் தவறாக நடந்து கொண்டார்கள் என்பதற்காக மக்கள் அதனைப் புறக்கணிக்கும் நிலைக்குச் செல்வதோ தனியார் மருத்துவ மனைகளை நாடுவதோ நல்லதல்ல என்பது அவரது கருத்து.

சரியான முறையில் நோயாளர் நலன்களைக் கவனத்தில் கொண்டு இங்குள்ள தனியார் வைத்திய நிலையங்கள் இயங்காத பட்சத்தில் இவை இல்லாது போய் விடக் கூடிய நிலைமை ஏற்படப் போகிறது என்கிறார்கள் துறைசார் வல்லுநர்கள். இங்குள்ள தனியார் வைத்திய சாலைகளின் தரம் இப்படி இருப்பது தென்பகுதியில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகள் இங்கு கால்பதிப்பதற்கு ஏதுவான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும். அதற்கான திட்டமிடல்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டன என்று கூறப்படுகிறது.

இங்குள்ள தனியார் வைத்தியசாலைகளின் இன்றைய நிலை தொடர்வது வரப் போகும் தெற்கு வைத்தியசாலைகளின் வெற்றிக்கு வழிவகுக்கக்கூடும். "யாழ்ப்பாணத்தை விட கொழும்புக்குப் போனால் சிறப்பான மருத்துவ சேவை கிடைக்கும்" என்ற பரவலான கதைகளை இப்போதே கேட்கமுடிகிறது. ஆனால் உண்மையில் சில மருத்துவ நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்காக தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வரும் நிலைமையே, குறிப்பாக முக்கிய பெரும் நோய்களுக்கு இன்று இருக்கிறது.

அப்படிப்பட்ட உயர்தர மருத்துவர்களைக் கொண்டிருக்கும் குடாநாடு அவர்களைப் பயன்படுத்தத்தக்க மருத்துவ வள வசதியையும் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது. அதற்கு இப்போதிருந்தே தயாராவது அவசியம். *

**"தனியார் மருத்துவமனைகள் பலவற்றில் இரவு வேளைகளில் தன்னந்தனியே ஒரேயொரு அனுபவமற்ற மருத்துவர் பணியாற்றுகின்றார். அதனால், திடீரென வேறு தாக்கத்துக்கு உள்ளாகிவரும் நோயாளர்களை அவர்களால் கையாள முடிவதில்லை. அப்படியான நோயாளர்கள் உடனடியாக போதனா வைத்தியசாலைக்கே மாற்றப்படுகிறார்கள்"**

## வரையறைகள்

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபை, மருத்துவ நிலையங்கள், நேர்சிங் ஹோம், தனியார் வைத்தியசாலைகள் எப்படி இயங்க வேண்டும் என்று வரையறுத்துள்ளது. இங்குள்ள யாழ்ப்பாணத்தில், பொதுவாக வடக்கு முழுவதுமே உள்ள வைத்திய நிலையங்கள் இதற்குப் பொருந்துவனவாகத் தெரியவில்லை.

அந்த நெறிமுறைகளின் படி ஒரு தனியார் வைத்தியசாலை வைத்திய ஆலோசனை அறையானது பரிசோதிக்கும் கட்டில், மேசை, கதிரை, கைகழுவும் சிங், நிறை அளவிடும் கருவி, எக்ஸ்ரே பார்க்கும் விளக்கு, குருதி அமுக்கம் அளவிடும் கருவி என்பவற்றுடன் போதியளவு காற்றோட்டமும் வெளிச்சமும் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது ஆகக் குறைந்தது அந்த அறை 70 சதுர அடிப் பரப்பையும் 8 அடி உயரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

இத்தனை விதிமுறைகளையும் பூர்த்தி செய்யும் தனியார் வைத்திய சாலைகளை குறிப்பாகக் கிளினிக்குகளை யாழ்ப்பாணத்திலோ வடபகுதியிலோ காண்பது அரிது. சில நிலையங்களில் ஒரேயொரு குருதி அமுக்க அளவிடு கருவி எல்லா ஆலோசனை அறைகளுக்கும் ஓடித் திரிவதைக் காணமுடிந்திருக்கிறது.

நோயாளர் காத்திருக்கும் பகுதி, ஆகக் குறைந்தது ஒரு வைத்திய ஆலோசனை அறைக்குப் 10 நோயாளர்கள் இருக்கக் கூடிய பிரதேசத்தை உரிய சுகாதார முறைப்படி காற்றோட்டம், வெளிச்சத்துடன் கூடியதாக அமைக்க வேண்டும். ஆனால், வடக்கில் உள்ள பெரும்பாலான தனியார் நிலையங்களில் இந்த வசதியைக் காணமுடிவதில்லை. 10 ஆலோசனைகள் இருக்கும் நிலையத்தில் குறைந்தது 50 கதிரைகள் கொண்ட இருப்பிடம் இருப்பதே அரிதாக இருக்கிறது.

இதைவிட குருதி மாதிரிகள் சேகரிக்கும் இடம், எக்ஸ்ரே அறை, வெளி நோயாளர் வசதிகள், சத்திரசிகிச்சைக் கூட வசதிகள், பிரசவ அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, உள்ளக மருந்தகம், மருந்துக் களஞ்சியம், சமையலறை, வைத்தியசாலைகள் கழிவகற்றல் பொறிமுறை, வாகனத் தரிப்பிடங்கள், அம்புலன்ஸ் வசதி என்பன ஒவ்வொரு தனியார் வைத்தியசாலையின் தரத்துக்கும் ஏற்ப தேவையான உபகரணங்களுடன் இருக்க வேண்டும்.

அவை என்ன, எவ்வாறான உபகரணங்கள் இருக்க வேண்டும், அவற்றை எப்படிப் பேண வேண்டும் என்பன போன்ற நெறிமுறைகள் அனைத்தும் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையினால் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றைப் போலவே இதிலும் அதனைப் பின்பற்றுவதற்குத்தான் ஆள்கள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது**

| தனியார் கல்வி நிறுவனங்கள் | | பாடசாலைகள் | |
|---|---|---|---|

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
..........................................
அடையாள அட்டை இல. ..........................................

உங்கள் தீர்ப்புக்களை 27.01.2011ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.




## குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு

### பாடசாலை

விளம்பரத்திலும் துண்டுப்பிரசுரங்களிலும் தமது நிலையப் பெயர்களைப் போட்டிக்குப் பறக்கவிட்டு இல்லாத புகழை உண்டெனப் பரப்பி சுளையாகப் பணத்தைப் பறித்து, பயனற்ற ஆசிரியர் மூலம் பாடம் புகட்டும் தனியார் கல்வி நிலையங்கள் வெறும் ஏமாற்று நிலையங்களே.

பெற்றோர்களையும் தங்களையும் ஏமாற்றிக் கொண்டு ரியூசன் என்ற பெயரில் திரையரங்குகளிலும் ஹோட்டல்களிலும் ரியூசன் பணத்தைச் செலவழிக்கும் மாணவருக்குப் பக்கபலமாய் நிற்கும் தனியார் கல்வி நிலையம் படிக்கும் மாணவர்களையும் மண்ணாக்கும் நிலையமே. இவ்வாறிருக்கையில் இது எப்படியய்யா பெறுபேற்றில் பங்கு வகிக்க முடியும். ஆனால் பாடசாலையானது சிறந்த பரீட்சைப் பெறுபேற்றிற்கும், தரமான வாழ்க்கைக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றது. தலைக்கு ஜெல் வைத்து, விரலில் வளையல் போட்டு, கையில் செல்போனுடன் பையில் ஒரு கொப்பி வைத்துப் படிக்கின்றேன் எனப் படம்காட்டி பஸ்ஸிற்குக் காத்து நின்று, சனநெரிசலுக்குள் குஷியாய் நின்று செல்லும் தனியார் கல்வி நிலையம் காலத்தை வீணடிப்பதிலேயே பெரும்பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் உறுதியாகக் கூறுகின்றேன். பரீட்சைப் பெறுபேற்றில் முக்கியபங்கு வகிப்பது பாடசாலையே.

செ.யயாதி, 2011(A\L),
வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி.

### தனியார் கல்வி நிலையம்

குடாநாட்டு மாணவர்களில் பெரும்பாலானோர் நம்பியிருப்பது தனியார் கல்வி நிறுவனங்களை மட்டுமே. ஏனெனில் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் மாணவர்களின் திறமைகளுக்குத் தீனி போடுவதாக அமைக்கப்படுவதில்லை. பாடசாலை ஆசிரியர்கள் தமக்களிக்கப்பட்ட பாடவிதானங்களைத் தங்களுக்கு வழங்கப்பட்ட பாடவேளைகளில் எப்படியாவது வழங்கினால் மட்டும் போதும் என நினைக்கிறார்கள். ஆசியர்கள் மாணவர்களது மேலதிகத் திறன்களை அதாவது பரீட்சைக்குரிய வினாக்களுக்கான விடையளித்தல் மட்டுமன்றி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற நேரத்தில் கேட்கப்படுகின்ற வினாக்களுக்கு எவ்வாறான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி விடையளித்தல் போன்ற விடயங்களில் பாடசாலை ஆசிரியர்கள் கவனம் செலுத்துவதில்லை.

பாடசாலை ஆசிரியர்களும் இதில் முற்று முழுதாகக் கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மாணவர்களின் மிகச்சிறந்த பெறுபேற்றிற்கு எவ்வாறு பாடசாலைகள் காரணமாக முடியும்? பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்களோ, இல்லையோ அவர்களுக்குரிய சம்பளம் மாதந்தோறும் அவர்களது கைகளுக்கு வந்துவிடும். ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கின்ற மாணவர்கள் சரியான முறையில் கற்பித்தல் அமையவில்லையெனின் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து விடுவார்கள். ஆகவே மாணவர்களில் பெரும்பாலானோர் ஏன் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்கின்றார்கள் என்பதற்கான விடை உங்களுக்குக் கிடைத்திருக்கும். தனியார் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்குக் கல்வியறிவூட்டுவதில் முக்கிய கவனம் எடுக்கிறது. தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மாணவர்களிடம் பணத்தினைப் பெற்றுக் கொள்வது மட்டுமன்றி மாணவர்களுக்கு ஏற்றவகையில் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கு கல்வியை புகட்டுகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வினாக்களைத் தொகுத்து செய்முறை, மீட்டல் வகுப்புக்களையும் வழங்கி வருகின்றது. இதுதான் இன்றைய குடாநாட்டு மாணவர்களின் உண்மைநிலைமை. பாடசாலைக் கற்பித்தல்- கற்றல் நடவடிக்கைகள் மட்டுமே குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால் யாழ்.குடா நாட்டில் ஏன் அனேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன? மாணவர்களில் பெரும்பாலானோர் ஏன் தமது பணத்தையும் நேரத்தையும் செலவழித்துத் தனியார் கல்வி நிறுவனங்களை நாடுகின்றனர்? என்ற கேள்விகள் எழுகின்றன. பாடசாலை என்பது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு அத்திபாரமாக அமைகின்றது என்றாலும் மாணவர்களின் சிறந்த பெறுபேற்றிற்குக் காரணம் தனியார் கல்வி நிறுவனங்கள் மட்டுமே. இதுவரை காலமும் நடைபெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களின் பெருமை எல்லாம் அவர்கள் கல்வி கற்கின்ற பாடசாலைகளையே சென்றடைகின்றன. எனினும் அப்பெருமைக்குக் காரணம் தனியார் கல்வி நிறுவனங்களின் கற்பித்தல் செயற்பாடு என்பது இலைமறைகாயாக இருக்கின்ற உண்மையாகும்.

சி.அனோஜா,
கோயில் வீதி, நல்லூர்.




## மண்ணுயிரைக் காக்க மன்னவனே வாராய்!

உன்னதனே உன் தேசத்தில்
உயிருடன் வாழ வழியில்லையா?
சுதந்திரமற்ற பூமியிலே -ஒரு
சூடுபட்ட பறவை போல் துடிக்கிறோமே
மன்னவனே எம்முயிரைக் காக்க வாராய்!

இனத்தாலும் மொழியாலும்
இடையிடை தொடருது சண்டை
உடலைக் கிழித்துப் பார்த்தால்
உதிரம் ஒன்று-என
உணரவைக்க மன்னவனே வாராய்!

பொன்னுக்கும் பொருளுக்கும்- ஆசைப்பட்டு
உடன் பிறப்புக்களைக் காட்டிக் கொடுத்து
பெற்ற தாயையும் வெறுத்து
தீய நாட்டம் வாழும் -எம்மைத்
திருத்த மன்னவனே வாராய்!

உயிரற்ற பாவங்கள் மலிந்த
உலகம் தனிலே
உயிர் கொடுத்து வாழவைக்கும்
உன்னதனின் மைந்தனே-வரவேண்டும்
மண்ணுயிரைக்காக்க மன்னவனே வாராய்!

அன்ரனி யேசுதாசன் மேரி அஜந்தா
4 ஆம் வட்டாரம், எழுவைதீவு.

## வீழ்வது நாமாகிலும்....

மனிதா உன்முயற்சி தோற்றுவிட்டதா?
அல்லது தோற்கடிக்கப்பட்டுவிட்டதா?
ஒருகணம் சிந்தித்துப்பார்; தோல்வியின்
வேதனை மறந்து வெற்றியின் பாதையை
நீ அறிந்து கொள்வாய்
நிலத்தில் வீழ்வது மழைக்குப் பெருமையாகட்டும்!
நிமிர்ந்து நடப்பதே உனக்குப் பெருமை.

K.நிருஜ்சேலா,
வலி.கிழக்கு.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**குடாநாட்டு மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் முக்கிய பங்கு வகிப்பது தனியார் கல்வி நிறுவனங்களா? பாடசாலைகளா?**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-..........................................
முகவரி :-..........................................
..........................................
.................. ..................
திகதி கையொப்பம்

## இறுக்கம் நீக்கும் புன்னகை.....

(சென்றவாரத்தொடர்ச்சி....)

நம்முடைய புன்னகை போலியாக இல்லாமல் இயல்பாக இருக்க வேண்டும். முதலில் ரிலாக்ஸ் செய்து கொள்ளுங்கள். பிறகு மனசாரப் புன்னகை செய்யுங்கள். இல்லாவிட்டால் அது மிகவும் செயற்கையாக இருக்கும்.

மௌனமாக நம்முடைய உணர்வுகளை வெளிக்காட்டுவதே புன்னகை என்பதை மறந்து வீடாதீர்கள். அப்படியென்றால் மனதிலும் இருதயீத்திலும் போலித்தனம் இல்லாத போது கள்ளமில்லா புன்னகைக்குப் பஞ்சமிருக்காது. நம் இருதயத்திலிருப்பது நம் சொல்லிலும் செயலிலும் மட்டுமல்ல, நம் முகபாவனையிலும் பளிச்சென்று தெரியவந்துவிடும். ஆகவே நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுவதற்கு நாம் எப்போதும் உழைக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி நாம் என்ன யோசிக்கிறோமோ அது பளிச் சென்று நம் முகத்தில் தெரிந்து விடும். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்று சும்மாவா சொன்னார்கள்... ஆகவே குடும்ப அங்கத்தவர்கள், அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், நண்பர்கள் ஆகியவர்களின் நல்ல குணங்களையே சிந்திப்போம். அப்போது அவர்களைப் பார்த்து மனசாரப் புன்னகைப்பது நமக்குச் சுலபம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்




**யாழ்.** பலாலி வீதியில் உரும்பிராய்ச் சந்தியில் இருந்து வடக்குத் திசையில் சுமார் 300 மீற்றர் தூரத்தில் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வீதியில் மேற்குப் புறமாக இந்தக் கல்விச்சாலை அமைந்துள்ளது. உரும்பிராய்ப் பிரதேசத்தின் தரம் மிக்க இடைநிலைக் கல்வியை வழங்கும் இப்பாடசாலையில் தரம் 01-11 வரையான வகுப்புக்களைக் கொண்ட வகை- II (Type II) பாடசாலை வகையைச் சேர்ந்ததாகும்.

இந்தப் பாடசாலை வரலாற்றை எடுத்து நோக்கின் யானையின் முகத்தைப் போலும் முகத்தையுடைய விநாயகப்பெருமானின் திருவருள் கிடைக்குமானால் கல்வி உள்ளிட்ட சகல செல்வங்களும் ஒருவருக்குத் தாமே வந்து பொருந்தும் என்கிறார் திருவருட்பயன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் . அதேபோல் கற்பக விநாயகர் பொற்பதங்களை அடியார்கள் மனத்தில் இருத்தி வழிபட்ட புண்ணியப் பேற்றினால் ஆரம்பமானதே இந்துப் பாடசாலையாகும்.

நாவலர் வழியில் சைவத் தமிழ்க் கலாசாரப் பண்பாட்டுடன் இயங்கி வந்த இந்தக்கல்லூரி அதிகாரசபையினால், உரும்பிராய் இந்துக்கல்லூரி வளவில் 1915 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அப்போதைய காலத்தில் அமுதலிங்கச் சட்டம்பியார்,சின்னப்பு உபாத்தியாயர் ஆகியோர் பிரதேச மக்களின் உதவியுடன் பண்டிதர் வேலுப்பிள்ளை தலைமையில் இந்தப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர்.

அப்போது பாலர் வகுப்பிலிருந்து 3 ஆம் வகுப்புவரை நான்கு வகுப்புக்களே இருந்தன. பின்னர் பண்டிதர் மயில்வாகனம் தலைமையில் நான்காம் வகுப்பு வரை ஆரம்பமாகியது.அதனைத்தொடர்ந்து ஆ.கந்தையா தலைமையில் ஐந்தாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அடுத்து பண்டிதர் பொன்னையா அவர்கள் 7ஆம்,8ஆம் வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

1945ஆம் ஆண்டு இலவசக்கல்வி காரணமாக 5ஆம் வகுப்புவரை குறைக்கப்பட்டது. அப்போது தலைமை ஆசிரியராக ஆ.கந்தையா பணிபுரிந்தார்.

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் விரிவாக்கம் செய்து வருகையில் இந்தப் பாடசாலை இயங்கிய உரும்பிராய் இந்துக்கல்லூரி வளாகத்தைவிட்டு இடமாற்றும் செயற்பாடு ஆசிரியர் சங்கத்தினர் நா.தம்பித்துரை தலைமையில் ம்முரமாக இடம்பெற்றது. அதன் பயனாக உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் ஆலயத்துக்குச் சொந்தமான 11 பரப்புக் காணியில் புதிய கட்டடம் தோன்ற வழிவகுத்தது.




இந்தக் கட்டடத்துக்கு அத்திவாரமிட்ட பெருமை இந்துக் கல்லூரி அதிகாரசபையின் முகாமையாளராக இருந்த த.முத்துச்சாமிப் பிள்ளை அவர்களுக்கே உரியது. தொடர்ந்தும் இந்துக் கல்லூரி அதிகாரசபையின் நிர்வாகத்தில் பங்கு கொண்டு உழைத்த இராசா, முதலியார் வை.பொன்னம்பலம், சமூகத்தொண்டர் சின்னப்பு செல்லப்பா, சு.நல்லநாதன் உடையார் ஆகியோர் பாடசாலைப் புனரமைப்பில் அதிக சிரத்தை காட்டினர். இதன் பயனாக 1949 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி புதிய கட்டடத்தில் பாடசாலை ஆரம்பமாயிற்று. 120அடி நீளம், 24அடி அகலம் கொண்ட புதிய கட்டடத்தில் பாடசாலை இயங்கத் தொடங்கியது.

உரும்பிராய் கற்பக விநாயகரின் ஆதனத்தில் கற்பகப்பிள்ளையார் வீதியில் இந்த வித்தியாசாலை அமைந்ததும் இதன் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். தமிழ்மொழி மூலப் பாடசாலையாக இயங்கி வந்த இந்தப் பாடசாலை சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது. பாடசாலையின் பெயருக்கு ஏற்றாற் போல் சைவம், தமிழ் இரண்டையும் இரு கண்கள் எனப் போற்றி வளர்க்கும் பேறுபெற்றது.

இந்தப் பிரதேசத்தின் மையத்தில் விளங்கும் பாடசாலையானது கூடுதலாக இந்தப் பிரதேச மாணவர்களையே கொண்டுள்ளது. வசதிபடைத்தோர் நகரப் பாடசாலைக்குச் சென்றுவிட ஏனைய மாணவர்களுக்குச் சகல வசதிகளையும் கொடுத்து அம் மாணவர்களைக் கல்வித்துறையில் கைதூக்கிவிடும் பெரும் பொறுப்பினை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஏற்று அத்துறையில் வியத்தகு பணியாற்றி வருகிறது.

இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற பல மாணவர்கள் தரம்5 புலமை பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரணதரப்பரீட்சை ஆகியவற்றில் சிறப்புச் சித்திகளைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பெற்றுவருகின்றனர்.



இவர்களிற் பலர் மருத்துவர்களாக, பொறியியலாளராக, பட்டதாரிகளாக சிறந்த சமூக சேவகர்களாக மற்றும் நற்குணமுள்ள பொதுமக்களாக ஈழத்திலும், பிறநாடுகளிலும் விளங்கி வருகின்றனர். தற்போது இந்தப் பாடசாலையில் 1000 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளில் இங்கு அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாடசாலை மாணவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பாடசாலையின் பெயரை நிலைநிறுத்தும் அளவுக்குப் பங்குபற்றிப் புகழ் சேர்த்து வருகின்றார்கள். கோட்ட மட்ட, வலய மட்ட,மாவட்ட மட்டம் என ஒவ்வொரு பிரிவு ரீதியாக விளையாட்டுகள்,கலை நிகழ்வுகள் என்பவற்றில் பங்கேற்றுத் தெரிவாகின்றனர். பாடசாலையில் மாணவர்களின் செயற்திறனை ஊக்குவிக்கு முகமாக மாணவர் சங்கம் தொழிற்படுகிறது.

(தொடரும்..)

# நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சி.க.வ.கூ.சங்கம்

ஞான ஆதவன்




(சென்றவாரத்தொடர்ச்சி....)

**மா**தர் கூட்டுறவு அமைப்புக்களின் முன்னோடியாக விளங்கும் நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம் 1958.12.22 ஆம் திகதி ஜே/1456 ஆம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொன்விழாவைக் கொண்டாடி 53 ஆவது ஆண்டில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நல்வாழ்வுக்கு உறுதுணை யாக அமைந்துள்ளன.

நீர்வேலி சமுதாய முன்னேற்றக்கழகம் 1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சமுதாய வளர்ச்சிக்குப் பெண்களின் பங்களிப்பு அவசியம் தேவை என்ற கருத்து வலுப்பெற்றதையடுத்து அந்தக்காலப்பகுதியில் சமூக முன்னோடிகளாக விளங்கிய சமூக சேவையாளர்கள் ஈ.கே.சண்முகநாதன், வி.எஸ்.அப்புத்துரை, எஸ்.கே.முத்துவேற்பிள்ளை ஆகியோர் எஸ்.கே. கந்தையா, திருமதி வேதவல்லி கந்தையா தம்பதிகளின் அனுசரணையுடன் பாலர் பகல் விடுதி அமைத்துச் செயற்பட வைத்தனர். திருமதி வேதவல்லி கந்தையாவின் அயராத முயற்சியினால் 1956 ஆம் ஆண்டு நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் மகளிருக்கான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்ட வகையில் சமுதாய வளர்ச்சியில் கூடுதலான பங்கு கொண்டவர்களாகப் பெண்கள் உருவாக்கப்பட்டனர்.

மாதர் பலம் மேலும் வலுவடையும் வகையில் 1958 [illegible] கத்தவர்களுடன் நீர்வேலி 'ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்க[illegible] ''பெண்கள் சமூகப்பணியில் ஈடுபடுவது மிக அரிதாக இருந்த காலப்பகுதியிலேயே மாதர்களைச் சமூகப்பணியில் ஆர்வத்தோடு ஈடுபடச் செய்ததோடு குடும்ப வளர்ச்சியும் கிராமநலனும் ஒன்றித்த நிலையில் வளர்ந்து செல்வதற்கு வழிவகுத்த அமரர் திருமதி வேதவல்லி கந்தையாவின் பணிகள் இன்னும் பசுமையோடு நினைவுகூரப்படுகின்றன.

நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இடையறாத தொடர் வளர்ச்சி, அதன் பங்கு; பணியின் சிறப்பு, இடர் உதவி, முகாமைத்துவம் என்பன ஆரம்பத்தில் இருந்தே தொடர் நிலையாகப் பேணப்பட்டு வந்தன. இது சங்கத்தின் ஆரம்பகாலத் தலைமையினாலும் 1982 ஆம் ஆண்டு தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட கூட்டுறவுப் பரிசோதகர் திருமதி ருக்குமணி ஆனந்தவேல் அவர்களினாலும் வழங்கப்பட்ட பயிற்சியின் உயர்ச்சியாக விளங்குகின்றது.

சங்கத்தின் [illegible]போதைய தலைவராக திருமதி புவனேஸ்வரன் சித்திராவும், [illegible] திருமதி யோகானந்தா உமா தேவியும் பொருளாளராக திருமதி வி.இராசேஸ்வரியும் கடமை புரிகின்றனர்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி செந்தூர்வாசன் லதா



யாழ்ப்பாணம் அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செந்தூர்வாசன் லதா (10.01.2011) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜா மற்றும் ருக்குமணி தம்பதிகளின் இளையமகளும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தவமணி தம்பதிகளின் மருமகளும் செந்தூர்வாசனின் அன்பு மனைவியும் பபிஷன், ஹ்ரிசா, நிருசா, அபிசா ஆகியோரின் தாயாரும் ரஞ்சனி (கனடா), சிவா (ஜேர்மன்), சுதன் (கனடா), நளினி (இலங்கை), ஜெயா (கனடா), ஜெனி (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீனிவாசன் (இலங்கை), ஸ்ரீசங்கர் (கனடா), பாலசங்கர் (லண்டன்), பாலஸ்ரீ (கனடா), சிவாஜினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ரொரண்டோ, ஸ்காபுரோவில் அமைந்துள்ள Ogben funeral home இல் 15.01.2011, 16.01.2011 (சனி, ஞாயிறு) கிழமைகளில் கனடா நேரப்படி மாலை 5 மணி முதல் 9 மணிவரை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 17.01.2011 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:- செந்தூர்வாசன்
0019054586816,
0016477016816 (கனடா)

தகவல்:
பா.ஸ்ரீனிவாசன் (வேந்தன்)
கோகுல வீதி, கோண்டாவில்.
0776153725.

(108788)

## கிராம அலுவலர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி,ஜன.13

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர்களுக்கான செயலமர்வு கடந்த பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சட்டத்தரணி திருமதி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில், யாழ். மேல் நீதி மன்ற நீதிப்தி சு.பரமராசா காணிகள் தொடர்பாகவும், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அ.ஆனந்தராசா நீதிமன்றுக்கும் கிராம அலுவலர்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும், மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஜே.கஜசிறீபாலன் பொதுமக்களிடையே வன்முறைகள் ஏற்படாது தடுப்பது பற்றியும் சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம் தேச வழமைச் சட்டங்கள் பற்றியும் கருத்துரை வழங்கினர்.

இந்தக் கருத்தரங்கில் பிரதேச செயலர் உட்பட அனைத்துக் கிராம அலுவலர்களும் கலந்து கொண்டனர். (204-207)

## தைப்பொங்கல் விசேடபூசை

மந்திகை, ஜன.13

புலோலி வில்லிபாரதி முருகன் ஆலயத்தில் தைப்பொங்கல் தினமான எதிர் வரும் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளது. அத்துடன் தைமாத கார்த்திகைத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (201-237)

## கௌரவம் பெறும் கலைஞர்களுக்கு வாழ்த்து

கலாபூஷணம் அரச விருது பெற்ற
இளங்கலைஞர் மன்றத்தின்
உபதலைவர், நாதஸ்வரக் கலைஞர்
வி.கே.பஞ்சமூர்த்தி
பொருளாளர், கவிஞர்
சோ.பத்மநாதன்

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்:
சங்கீத ரத்தினம் எஸ்.மகேந்திரன்
இசைஞான திலகம் உ.ராதாகிருஷ்ணன்

ஆகியோரை மன்றம் பாராட்டி வாழ்த்துகிறது.

(1087771)


# ஒரு விதை விடாது அள்ளிச் செல்லுங்கள்




LOVOL DC 200

- சேற்றில் உழைப்பதற்காகவே தயாரிக்கப்பட்ட அகலத்தில் தடித்ததும், அளவில் பருமனானதுமான இறபர் ட்ராக்
- அதிகூடிய அசுர பலம் 65 கொண்டது
- பிரவுன்ஸின் 06 மாத உத்தரவாதத்துடன், விற்பனைக்குப் பிந்திய விஷேட சேவை
- ஒரு நாளுக்கு 06 ஏக்கருக்கு அதிகமான அளவில் அறுக்கக்கூடிய தன்மை
- இலகுவாகப் பெறக்கூடிய உதிரிப்பாகங்கள்
- உலகப் பிரசித்திபெற்ற "லோவல்" நிறுவனத்தின் சிறப்புமிகு தொழில்நுட்பம்




TAFE CRUZER 7504

- சேற்று நிலங்களில் செலுத்தக்கூடிய 4 வீல் டிரைவ் அமைப்பு
- அதிகூடிய அசுர பலம் 75 கொண்டது
- பிரவுன்ஸின் 06 மாத உத்தரவாதத்துடன், விற்பனைக்குப் பிந்திய விஷேட சேவை
- இலகுவாகப் பெறக்கூடிய உதிரிப்பாகங்கள்
- உலகப் பிரசித்திபெற்ற "டெ:.பே" நிறுவனத்தின் சிறப்புமிகு தொழில்நுட்பம்

135 வருட காலமாக உலகெங்கும் வாழும் விவசாயப் பெருமக்களின் நம்பிக்கையை வென்ற பிரவுன்ஸ் நிறுவனம், இலங்கையில் வாழும் விவசாயப் பெருமக்களுக்கு, கல், மண், தூசுகள் சேராத அதி சுத்தமான அறுவடையை உடனேயே பெற்றுத் தரும் உலகின் சிறப்பிடம்பெற்ற டெ:.பே மற்றும் "லோவல்" தொழில்நுட்பத்தில் உருவான கம்பைன் ஹாவெஸ்டர்களை அறிமுகப்படுத்துவதுடன், அவற்றை வியத்தகு விலைகளில் வழங்குகிறது.

Browns Agriculture

மேலதிக விபரங்களுக்கு

நிஷ்ஷங்க - வடக்கு/வடமத்திய : 077 3457986
உத்திப - கிழக்கு பிரதேசம் : 077 3457987
இந்திக - வடமேல்/மத்திய : 077 3457988
சந்துன் - தெற்கு/ஊவா : 077 3457982

BROWNS GROUP BG ESTD 1875
Browns
பிரவுன்ஸ் குரூப் பிஎல்சீ, 481, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: (011) 2697111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் களத்தை ஆராய மலையக மக்கள் முன்னணிக்கு விசேட குழு

## இன்று ஹற்றனில் கூடுகின்றது

நுவரெலியா, ஜன. 13

மக்களின் மனமறிந்து அவர்களது நலன்களுக்குப் பலம் சேர்க்கும் வகையில் பிரதேச, நகர சபைத் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது - என முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி விசேட குழுவினரும் மத்திய கமிட்டி உறுப்பினர்களும் இன்று முற்பகல் 10 மணிக்கு ஹற்றன் கிருஷ்ண பவன் வரவேற்பு மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டமொன்றையும் நடத்தவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியப் பிரதேசசபையைக் கடந்த தேர்தலில் கைப்பற்றியிருந்த மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் தேர்தலிலும் இச்சபையைத் தக்கவைத்துக் கொள்ளவும், ஹற்றன் நகர சபை, அம்பக முவ பிரதேச சபை, பதுளை மாவட்ட பிரதேச சபைகள், இரத்தினபுரி, களுத்துறை, வத்தளை, உடப்பு, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி ஆகிய பிரதேசசபைகள், தொடர்பாகவும் ஆராயபடவுள்ளது.

இதைத்தொடர்ந்து இன்று வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் ஆதரவாளர்கள், அமைப்பாளர்கள், தோட்டக் கமிட்டித் தலைவர்கள், ஆசிரியர்கள், முன்னணியின் உத்தியோகத்தர்கள், இளைஞர் மற்றும் மாதர் அணி உறுப்பினர்களுக்கான கூட்டமும் நடைபெற உள்ளது.

இவ்விசேட குழுவில் மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன், அரசியல் பிரிவுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன், தேசிய அமைப்பாளர் பெ. இராதாகிருஷ்ணன், ஊவா மாகாணசபை உறுப்பினர் அ. அரவிந்தகுமார், செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ், நிதிச் செயலாளர் சரத் அத்துக்கோரளை, உபசெயலாளர் எஸ்.விஜயசந்திரன், உபதலைவர் கிருஷ்ணன் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர் - என அவர் மேலும் தெரிவித்தார். (204-5)

# தெஹியோவிட்ட கல்வி வலயத்தில் பரீட்சைப் பெறுபேறுகளில் வீழ்ச்சி

தெஹியோவிட்ட கல்வி வலயப் பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கையில் 2009ஆம் ஆண்டிலும் பார்க்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தெஹியோவிட்ட கல்வி வலயப் பிரிவில் தெரணியகல, லருவான், வெள்ள, கித்துல்கல, எட்டியாந்தோட்டைப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே இது கண்டறியப்பட்டுள்ளது.

வலயத்திலிருந்து தோற்றிய 3,937 மாணவர்களில் 305 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.




எட்டியாந்தோட்டை பாடசாலைகளில் அதிக பிள்ளைகள் சித்தியடைந்துள்ளனர்.

கித்துல்கல பிரிவில் ஆகக் குறைந்த சித்திமட்டம் எட்டப்பட்டுள்ளது.

ருவான்வெலையில் தோற்றிய 935 மாணவர்களில் 84 பேரும், தெஹியோவிட்டவில் தோற்றிய 939 பேரில் 60 பேரும், தெரணியகலயில் தோற்றிய 603 பேரில் 46 பேரும், எட்டியாந்தோட்டையில் தோற்றிய 1,062 பேரில் 101 பேரும், கித்துல்கலையில் தோற்றிய 398 பேரில் 14 பேருமே சித்தியடைந்துள்ளனர் - எனத் தெஹியோவிட்ட வலயக்கல்விப் பணிமனை மேற்கொண்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. (ளி)

# நுவரெலியா - வெலிமடை பாதை மூடப்பட்டது

நுவரெலியா, ஜன.13

நுவரெலியா - வெலிமடை பிரதான வீதியில் பெலும்கல எனும் இடத்தில் 191 ஆவது மைல் கல்லுக்கருகில் பாதை வெள்ளத்தால் அரிக்கப்பட்டதால் இவ்வீதியூடான சகல போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டுள்ளன.

அவசியமான திருத்தவேலைகள் முடிவடையும்வரை இப்பாதை மூடப்பட்டுள்ளது என வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பண்டாரவளைப் பிராந்திய நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாதையில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை பற்றி பதுளை மாவட்டப் பொறியியலாளர் மற்றும் வெலிமடைப் பிரதேச செயலாளர் ஆகியோருடன் நடத்திய பேச்சுகளின் பின்னரே பாதை மூடப்பட்டது என்றும் அவர் கூறினார்.

வெலிமடை - உடபுசல்லாவைப் பாதையை மாற்று வழியாகப் பயன் படுத்துமாறு வாகனச்சாரதிகள் கேட்கப்பட்டுள்ளனர். (ளி)

# உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்க நுவரெலியாவில் 467,103 பேர் தகுதி

நுவரெலியா, ஜன.13

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய 4, 67,103 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

2008 வாக்காளர் பட்டியலுக்கமைய நுவரெலியாவில் 4, 57,137 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இந்த எண்ணிக்கை 2009 இல் 9,966 வாக்காளர்களால் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் 2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக் கேற்ப மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 2,53,103 பேரும், கொத்மலைத் தொகுதியில் 71,585 பேரும், ஹங்குராங்கெத்த தொகுதியில் 67,076 பேரும், வலப்பனை தொகுதியில் 75, 339 பேரும் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை 2008 ஆம் வருட வாக்காளர் பட்டியலை விட 2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் மஸ்கெலியாவில் 6,034 பேரும், கொத்மலையில் 855 பேரும் ஹங்கு ராங்கெத்தவில் 1,107 பேரும், வலப்பனையில் 1,970 பேரும் மேலதிகமாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் அட்டன் டிக்கோயா நகரசபைக்கு 8 உறுப்பினர்களும், தலவாக்கலை -லிந்துலை நகரசபைக்கு 9 உறுப்பினர்களும், அம்பகமுவ, நுவரெலியா, கொத்மலை, வலப் பனை பிரதேசசபைகளுக்கு முறையே 23,23,22, 22 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# நலன்புரி நிலையங்களில் பல குடும்பங்கள் தஞ்சம்

## துறைநீலாவணை மக்கள் அவதி



மட்டக்களப்பு, ஜன.13

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த துறைநீலாவணைப் பிரதேசத்தில் பல குடியிருப்புப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதையடுத்து 65 குடும்பங்களைச் சேர்ந்த 226 பொதுமக்கள் தமது வசிப்பிடங்களை விட்டு வெளியேறி இரண்டு நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்எருவில்பற்று - களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணையில் சுமார் 1,800 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பிரதேசம் 4 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்எருவில்ப் பற்று, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 2,957 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 53 பொதுமக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதேச செயலாளர் எஸ். அருள்ராஜா தெரிவித்தார். இவர்கள் அனைவரும் தற்போது 23 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் துறைநீலாவணை, ஓந்தாச்சிமடம், கோட்டக் கல்லாறு, மகிழூர்முனை, மாங்காடு, குருமண் வெளி, களுவாஞ்சிக்குடி, செட்டிப்பாளையம், தேத்தாதீவு, எருவில் உள்ளிட்ட 13 பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன எனப் பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராஜா மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்எருவில்ப் பற்று - களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 45 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. ( 204-30)




# நிவாரணம் வழங்க அரசிடம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜன.13

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென அரசிடம் தாம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என உள்நாட்டு வர்த்தக கூட்டுறவுப் பிரதியமைச்சர் பசீர்சேகுதாவூத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல நாள்களாகக் கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடைமழையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பலரின் வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

இந்நிலையைக் கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க வேண்டுமென அரசிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன். வீடுகள் சேதமடைந்துள்ளமைக்கும் தொழிற் பாதிப்புக்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும் கேட்டுள்ளேன் என்றார். (204-21)

# திருமலையில் 11 பிரதேசங்களுக்கு வெள்ளத்தால் பெரும் பாதிப்பு

திருகோணமலை, ஜன.13

அடைமழை காரணமாகத் திருகோணமலை மாவட்டத்தின் 11, பிரதேசங்களிலுமுள்ள தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெருகல் பிரதேசத்தில் 200 குடும்பங்களும், குச்சவெளிப் பிரதேசத்தில் 15 குடும்பங்களும், திருகோணமலை பட்டனமும் சூழலில் 540 குடும்பங்களும், சேருவிலப் பிரதேசத்தில் 53 குடும்பங்களும், மொறவெவப் பிரதேசத்தில் 64 குடும்பங்களும், கிண்ணியாப் பிரதேசத்தில் 1,106 குடும்பங்களும் பாதிப்படைந்துள்ளன.

தம்பலகாமம் பிரதேசத்தில் 197 குடும்பங்களும், மூதூர்ப் பிரதேசத்தில் 3,104 குடும்பங்களும், பதவிசிறிபுர பிரதேசத்தில் ஒரு குடும்பமும், கந்தளாய்ப் பிரதேசத்தில் 300 குடும்பங்களும், கோமரங்கடவலப் பிரதேசத்தில் 14 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் முஹாஜர் தெரிவித்துள்ளார்.

பாதிப்புத்தொகை அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசிப்பவர்களுக்கான சமைத்த உணவுகளை அவ்வப் பிரதேச செயலகங்கள் வழங்கி வருகின்றன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் வெள்ளம் நிரம்பியுள்ளது. அதனால் மாகாணக் கல்விச் செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கமைவாகத் திருமலை வலயத்திலுள்ள ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ( ளி)

# காணாமற்போன மீனவர் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஜன.13

ஆரையம்பதி பிரதேச வாவியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தோணி கவிழ்ந்து காணமற்போன இரண்டு மீனவர்களில் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளார். மற்றைய மீனவர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையென பிரதேசத்திலுள்ள மீனவர்கள் தெரிவித்தனர்.

ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள வாவியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மீன்பிடிக்கச் சென்ற ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த ஆனந்தன் (வயது -50), சாம்புநாதன் நாகராசா (வயது - 43) ஆகிய இரண்டு மீனவர்களின் தோணி கவிழ்ந்ததில் இரண்டு மீனவர்களும் காணாமற்போயுள்ளனர்.

இதையடுத்து கடற்படையினரின் உதவியுடன் மீனவர்கள், பொதுமக்கள் இணைந்து தேடிய போது ஆரையம்பதி வாவியில் வைத்து சாம்புநாதன் நாகராசா எனும் மீனவர் கண்டுபிடிக்கப்பட்டு ஆரையம்பதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மற்றைய மீனவரான ஆனந்தன்என்பவர் கடந்ததிங்கட்கிழமை மாலைவரை கண்டுபிடிக்கப்படவில்லையென பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணக் கோலங்கள்....




ஆனந்தம்: யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.அட்வென்ரிஸ்ட் சர்வதேச பாலர் பாடசாலையின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்ட சிறார்களின் நிகழ்ச்சிகளைக் காணலாம்.

## தகவல்கள்

இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்
இலங்கையின் தேசிய மிருகம் - மரஅணில்
இலங்கையின் தேசிய பிதா - டி.எஸ்.சேனநாயக்க.

- சோபியா -

## விடுகதைகள்

*இருந்த இடத்தில் இருந்த படியே ஆட்டம். அதில் சிலருக்குக் கொண்டாட்டம், சிலருக்குத் திண்டாட்டம் அது என்ன?

*மழைக்கும் அசையாது எருமையல்ல, வெயிலுக்கும் வாடாது மாடுமல்ல அது என்ன?

*சின்னக்கதவுகள் எத்தனை தடவைகள் திறந்து மூடினாலும் ஓசை தராது அது என்ன?

*இவன் இருக்கும் இடத்தில் யாரும் இருக்க முடியாது. அது என்ன?

*ஒத்தக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை?

விடைகள்
★சீட்டாட்டம்
★வீட்டுக்கூரை
★கண்ணிமை
★ஓட்டை
★மிளகாய்

செ.தக்ஷாயினி,
தரம்-6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## அறிவியலின் தந்தை

கணக்கியலின் தந்தை
லூக்கா பெசியோலி

கணினிகளின் தந்தை
சாள்ஸ் பபேங்

மின்சாரத்தின் தந்தை
மைக்கல் ஃபரடே

அரசியலின் தந்தை
அரிஸ்ரோட்டில்

சமூகவியலின் தந்தை
மக்ஸ் வெபர் ஹொம்ரே

உளவியலின் தந்தை
சிக்மன் பிறைட்

-கு.நிலா-

## சிந்தனைத் துளிகள்

*எதைக் கண்டு ஒரு மனிதனுக்குச் சிரிப்பு வருகிறதென்று கவனி. அவன் எப்படிப்பட்டவனென்று மிக நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

*அன்பு என்பது கண்ணுக்குத் தெரியாத நீரூற்று. அது எப்போது எப்படித் தோன்றுகிறது என்பதை நாம் அறிய முடியாது.

*உலகத்திற்கு வேண்டுமானால் நீங்கள் ஒரு ஆளாக இருக்கலாம். ஆனால் யாராவது ஒருவருக்கு நீங்களே உலகமாக இருக்கலாம்.

*மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவில் இருந்துதான் பிறக்கின்றன.

*தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப்பெரிய பலவீனம்.

*நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.

*எவர் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ அவரால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது.

*மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.

*உண்மையான செல்வாக்கை நாம் தேடிக்கொள்ளக் கூடாது; அது நம்மைத் தொடர்ந்து வரவேண்டும்.

*மனிதன் முன்னேற ஏழு பாதைகள்: பகுத்தறிவு, கல்வி, சிந்தனையில் உண்மை, அன்புடமை, நன்னடத்தை, கட்டுப்பாடு உள்ள குடும்பம், நல்லாட்சி.

மிதுலா,
யாழ்ப்பாணம்.

## புத்தடி ராமன்கள்




(நேற்றையதொடர்ச்சி)

முதலில் மட மன்னனுக்குக் கொஞ்சம் சந்தேகம் எற்பட்டது. "இது யானை என்றால், தும்பிக்கையைக் காணோமே?" என்று கேட்டான். "மன்னா! எல்லாம் முதலில் தும்பிக்கையுடன் இருந்த யானைகள்தான். பட்டினி கிடந்ததால் உடலும் மெலிந்து விட்டது, தும்பிக்கையும் சுருங்கி விட்டது" என்று விளக்கினார் பரமார்த்தர்.

"இவை மறுபடியும் பழைய உருவம் அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான் மடமன்னன்.

"மன்னா! இன்னொரு விடயம். அதையும் கோளுங்கள், பிறகு வைத்தியம் சொல்கிறேன்" என்றார் குரு. "நமது நாட்டுக் குதிரைப் படைகளும் இதேபோல் இளைத்து விட்டன. எல்லாம் ஆட்டுக் குட்டிகள் மாதிரி ஆகிவிட்டன!" என்றான் மூடன். "அப்படியா? வியப்பாக இருக்கிறதே! என்ன செய்யலாம் சொல்லுங்கள்" என்றான் மன்னன்.

"மன்னா! நாங்கள் அருமையான திட்டம் ஒன்று வைத்துள்ளோம். அதன்படி ஆயிரம் பொற்காசுகள் செலவாகும். அந்த ஆயிரம் பொற்காசுகளையும் எங்களிடமே கொடுத்து விடுங்கள். நாங்கள் எல்லாவற்றையும் பழையபடி குண்டாக்கி விடுகிறோம்" என்றனர், முட்டாளும், மூடனும்.

மடமன்னன் பெரிய கஞ்சன். அவனால் ஆயிரம் பொற்காசு செலவழிக்க மனம் வரவில்லை.

"வேறு ஏதாவது யோசனை இருந்தால் சொல்லுங்கள்!" என்று கட்டளையிட்டான்.

"சே! நம் திட்டம் எல்லாம் பாழாகி விட்டதே!" என்று வருந்தினார் பரமார்த்தர். சீடர்களுக்கும் ஆத்திரமாக இருந்தது.

"அரசே! எல்லா யானைகளையும் குதிரைகளையும் நம் நாட்டில் உள்ள வயல்களில் மேயவிடுவோம்! கொஞ்ச நாளில் சரியாகிவிடும்!" என்றான் மண்டு.

"இதை வேண்டுமானால் செய்யலாம்!" என்றான் மடமன்னன். பரமார்த்தரின் ஆணையின்படி மடநாட்டிலுள்ள பன்றிகள், ஆடுகள் அனைத்தும் அவிழ்த்து விடப்பட்டன. எல்லாம் சேர்ந்து குடிமக்களின் வயல்களில் சென்று மேயத்தொடங்கின. இரண்டே நாளில் எல்லா வகையான தானியங்களும் பாழாகி விட்டன.

அடுத்த மாதமே நாடு முழுவதும் பஞ்சம் ஏற்பட்டது. பலபேர் சோற்றுக்கே வழியில்லாமல் இறந்தனர்.

பரமார்த்தரும் சீடர்களும் ஒரு பயனும் இன்றித் தண்டச் சோற்றுத் தடிராமன்களாக இருப்பதைக் கண்ட மன்னன் எல்லோரையும் விரட்டி அடித்தான்.

அடடா! எப்படியாவது ஆயிரம் பொற்காசுகளைச் சம்பாதித்து விடலாம் என்று நினைத்தோம். கடைசியில் இப்படிப் பாழாகி விட்டதே! என்று புலம்பியபடி தமது மடத்துக்கே திரும்பினார்கள் பரமார்த்தரும் சீடர்களும்.

(முற்றும்)

## இராணுவப் பதவி ஒழுங்கு

ஜெனரல்
லெப்ரினன்ட் ஜெனரல்
மேஜர் ஜெனரல்
பிரிகேடியர்
கேணல்
லெப்ரினன்ட் கேணல்
மேஜர்
கப்டன்
லெப்ரினன்ட்
செக்கன்ட் லெப்ரினன்ட்

செல்வி.



## பொது அறிவு

*தாய்லாந்தின் தலைநகரம் எது?
பாங்கொங்

*ஞாபசக்தி கூடிய விலங்கு?
யானை

*வாழைப் பூவை நாடிவரும் பிராணி?
அணில்

*ஏரிகள் இல்லாத நாடு எது?
புரூணை

*ஆறுகள் இல்லாத நாடு எது?
சவூதி அரேபியா

*உலகின் சர்க்கரைக் கிண்ணம் எனப்படும் நாடு?
கியூபா


*பொற்கோபுர நாடு எது?
மியன்மார்

*புனித நாடு எனப்படும் நாடு எது?
பலஸ்தீனம்

செ.பாலுஷா
தரம்-08
யா/சோமஸ்கந்தாக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா தயாரித்த உளவு விமானம் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலா?



பீஜிங்,ஜன 13

முதன் முதலாக சீனா தனது உளவு விமானம் ஒன்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது. இது குறித்து தங்களுக்கு கவலையில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இந்நிலையில், ''அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுக்கும், கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகளை வடகொரியா தயாரிக்கக் கூடும்' என்று ஆரூடம் தெரிவித்துள்ளார் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபேட் கேட்ஸ். வடகொரியாவின் இந்தப் போக்கு அமெரிக்கா - சீனா ராணுவ உறவுகளை மேம்படுத்தக் கூடும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா - சீனா இடையேயான இராணுவ உறவுகள், பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் றொபேட் கேட்ஸ், கடந்த 9ஆம் திகதி சீனத் தலைநகர் பீஜிங்குக்கு வந்தார். சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங் க்லீயுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது, "இருதரப்பு இராணுவ உறவுகள் மேம்படும் விதத்தில் ஆண்டுதோறும் கூடி பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், இருதரப்பிலும் நிலவி வரும் தவறான புரிதல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் களையப்பட வேண்டும்' என்று உறுதி செய்யப்பட்டது. எனினும் எதிர்காலத்தில் அமெரிக்கா, தாய்வானுக்கு ஆயுதங்கள் வழங்கும் பட்சத்தில் இருதரப்பு இராணுவ உறவுகள் தொடர்வதற்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று க்லீ தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சீன அதிபர் ஹூ ஜிண்டாவோவை ராபர்ட் கேட்ஸ் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிற்கு சிறிது நேரத்துக்கு முன்பாக சீனா முதன் முதலாக நடத்திய உளவு விமானம் ஒன்றின் வெற்றிகரமான பரிசோதனை குறித்த பத்திரிகை செய்திகள் குறித்து ஜிண்டாவோவிடம் அவர் கேட்டறிந்தார்-இவ்வாறு றொபேட் கேட்ஸ் தெரிவித்தார்.

சீனாவின் உளவு விமானம் குறித்து பேசிய அமெரிக்க இராணுவ மையமான "பென்டகன்' செய்தித் தொடர்பாளர் டேவிட் லபான், ''இந்தப் பரிசோதனை ஒன்றும் புதியதல்ல; எதிர்பார்க்காததுமல்ல. அதனால், அமெரிக்காவுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. சீனா தற்போது வைத்துள்ள நான்காவது தலைமுறை போர் விமானங்களில் பல பிரச்சினைகள் உள்ளன''- என்றார். (த)



முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ஐக்கிய நாட்டு சிறப்புப் பிரதிநிதியாக ஹெய்ட்டிக்குச் சென்று இடிந்த கட்டட கற்கூளங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தயார் செய்யும் முறை குறித்து ஆலோசனை கூறினார். (த)

# ஆஸ்திரேலியாவில் 20,000 வீடுகள் சேதம்

குயின்ஸ்லாந்து,ஜன. 13

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக பிரிஸ்பனில் 20 ஆயிரம் வீடுகள் வரை சேதமடைந்துள்ளதாகக் குயின்ஸ்லண்ட் பிராந்திய முதல்வர் தெரிவித்துள்ளார்.

பாரிய வெள்ளப் பெருக்கு தொடர்ந்தும் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை, மத்திய பிரிஸ்பனில் மின்சார விநியோகத் தடை காரணமாகக் கடந்த சில நாள்களாக இருள் சூழ்ந்து காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் இடர்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர்.

பெரும்பாலான மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லாது தங்குமிடங்களிலேயே இருப்பதால் நகரச் செயற்பாடுகள் பெருமளவில் ஸ்தம்பித்துள்ளன.

இதேவேளை, மேற்கு பிரிஸ்பனில் தற்போது நிலவும் காலநிலை தொடருமானால் எதிர்வரும் சில மணித்தியாலங்களில் வெள்ள நீர் மட்டம் 22 மீற்றர்களை கடக்கும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மீட்புப் பணியாளர் கடும் சிரமத்தின் மத்தியில் காணாமல் போனவர்களை தேடும் பணிகளை முன்னெடுத்துவருகின்றனர்.

குயிஸ்லன்ட் பிராந்தியத்தில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 90 என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ஒபாமா குடியுரிமை மீதான வழக்கு உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி

வாஷிங்டன், ஜன. 13

ஒபாமாவின் அமெரிக்க ஜனாதிபதி குடியுரிமை, பிறப்பு சான்றிதழ் ஆகியவை குறித்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குடியுரிமை, பிறப்பு சான்றிதழ் ஆகியவை குறித்து ஓர்லிடையாடிஸ் என்ற கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

ஒபாமா, உண்மையில் அமெரிக்காவின் தென்கிழக்கு மாகாணமாக ஜோர்ஜியாவில் ஹவாய் நகரில் கடந்த 1961ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி பிறந்தார் என்றும் அரசமைப்புச் சட்டத்தின்படி அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும் ஆபிரிக்க, அமெரிக்க வம்சத்திலிருந்து வந்தவர் என 36 சதவீத குடியரசு கட்சி எம்.பிக்கள் கருத்து கூறி வருகின்றனர். எனினும், ஒபாமாவின் பிறந்த இடம் குறித்து சரியான தகவல் இல்லை. இந்நிலையில் வழக்கை விசாரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம் எந்தவிதக் கருத்தும் தெரிவிக்காமல் தள்ளுபடி செய்தது.

இது குறித்து ஓர்லிடையாடிஸ் கூறுகையில், நீதித்துறையில் ஊழல் புகுந்துவிட்டது. இப்படி அபாயகரமான முடிவை நீதிமன்றம் எடுத்திருப்பது நீதித்துறையை அது தன் கையிலேயே எடுத்துக்கொண்டுள்ளது என்பதையே காட்டுகிறது. இது பின்விளைவுகளை ஏற்படுத்தும், மறுபரிசீலனை செய்யும்வரை போராடுவேன்'' என்றார். (த)

உலக அரங்கில்

# ஹெய்ட்டி ஜனாதிபதித் தேர்தலில் மோசடி

லண்டன்,ஜன.13

ஹெய்ட்டி நாட்டில் நடைபெற்ற அரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் ஆளுங்கட்சி வேட்பாளரை அடுத்த கட்ட வாக்கு எண்ணிக்கையிலிருந்து விலக்கி வைக்குமாறு ஓ.ஏ.எஸ். எனப்படும் அமெரிக்க அமைப்பொன்று பரிந்துரை செய்துள்ளது.

இதுவரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின் பிரகாரம் ஆளுங் கட்சி வேட்பாளராக ஜூட் செலஸ்ரின், முன்னாள் முதற் பெண்மணியான மேர்லான்டி, மனிக்கற்றுக்கு அடுத்ததாக இரண்டாமிடத்திலுள்ளார்.

ஆனால் ஓ.ஏ.எஸ். அமைப்பின் தேர்தல் பார்வையாளர்கள் எதிர்க்கட்சி வேட்பாளரான மைக்கல் மார்ட் டெல்லி அதிக வாக்குகளால் வெற்றிபெற்றதனை அறிந்து கொண்டது. மேலும் வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து தேர்தல் முடிவுகளை மீளாய்வு செய்யுமாறும் இந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கிடையில் தமது வெற்றி தவறான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி வேட்பாளரான மார்ட் டெல்லி அறிவித்ததையடுத்து அவரது ஆதரவாளர்கள் நாட்டின் பல்வேறு நகரங்களிலும் மோதலில் ஈடுபட்டனர். இதில் ஆகக் குறைந்தது ஐந்து பேராவது கொல்லப்பட்டனர்.

கடந்த நவம்பர் 28இல் நடைபெற்ற அதிபர் பதவிக்கான தேர்தல் பரவலாக விமர்சனத்துக்குள்ளாகியது. இதில் வாக்குப் பெட்டிகள் சூறையாடியமை, வன்முறை மற்றும் வாக்களிப்பு நிலையங்களில் மோசடிகள் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது (க)

# மியான்மரில் நாடாளுமன்றம் ஜனவரி 31 இல் கூடுகின்றது

யங்கூன், ஜன. 13

மியான்மரில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் (இம்மாதம்) ஜனவரி 31ஆம் திகதி கூடுகிறது. இந்தத் தகவலை அரசு தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இராணுவ ஆட்சி நடைபெற்று வந்த மியான்மரில் சர்வதேச நாடுகளின் நெருக்குதல்களை அடுத்து கடந்த நவம்பர் 7ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. அண்மையில் விடுவிக்கப்பட்ட ஜனநாயகப் போராளி ஆன் சாங் சூகியின் கட்சி இந்தத் தேர்தலை புறக்கணித்தது.

தேர்தலில் 80 சதவீத இடங்களில் இராணுவ ஆதரவுபெற்ற கட்சி வெற்றி பெற்றது என இராணுவ அரசு தனக்குத் தானே அறிவித்துக்கொண்டது. தேர்தலும் அதைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கையும் முறையாக நடக்கவில்லை என்றும் அவற்றில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்றும் ஜனநாயக ஆர்வலர்கள் பரவலாக குற்றஞ்சாட்டினார்கள்.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் தேர்தல் நடைபெற்ற விதம் குறித்து அதிருப்தி வெளியிட்டன. இந்நிலையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம், ஜனவரி 31ஆம் திகதி கூடும் என்று இராணுவத்தின் மூத்த அதிகாரி தான்ஷ்வே தெரிவித்துள்ளார் என அரசு தொலைக்காட்சி அறிவித்துள்ளது. (த)

# பிரிட்டனில் தஞ்சம் கோரியவர்களில் 61 ஆயிரம் பேரைக் காணவில்லை

## விசாரணைகள் தாமதமாவதே காரணமாம்

லண்டன்,ஜன.13

பிரிட்டனில் தஞ்சம்கோரி விண்ணப்பித்தவர்களுள் சுமார் 61 ஆயிரம் பேரைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாத நிலையிலுள்ளதாக கொமன்ஸ் சபையின் உள்நாட்டு விவகாரக் குழு தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் குடிவரவு முறைமை இவற்றைச் சீர் செய்வதில் தொடர்ந்து தவறி வருவதாகக் குறிப்பிடும் இந்தக் குழுவினர் எதிர்காலத்தில் பிரிட்டன் எல்லை முகவர் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்க இருப்பவருக்குக் குறைவான வேதனத்தை வழங்க வேண்டுமெனவும் சிபார்சு செய்துள்ளது.

அதேவேளை, குடிவரவு அமைச்சர் டேமியன் கிறீன் இது பற்றிக் கூறுகையில் - குடிவரவு முறைமை [illegible] குறிப்பிட்டார்.

தேங்கிக் கிடக்கும் சுமார் 4லட்சம் விண்ணப்பங்களையும் சீர் செய்வதற்கு பிரிட்டனின் எல்லை முகவர் அமைப்பு இதன் நடவடிக்கைகளை முறையான வகையில் முன்னெடுக்கவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. முன்னாள் உள் விவகாரச் செயலாளர் ஒருவரால் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இது பொருத்தமானதொன்றல்லவெனக் கருத்து வெளியிடப்பட்டதன் பின்னணியில் இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தஞ்சம் கோருவோரின் விண்ணப்பங்கள் தொடர்பாக ஒரு முடிவை எடுப்பதில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தவறியுள்ளனர். மேலும் ஏழு விண்ணப்பங்களுக்கு ஒன்று என்ற வீதத்தின் பிரகாரம் சுமார் 61 ஆயிரம் விண்ணப்பங்களைமூடி விட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இந்த விண்ணப்பதாரர்களை நீண்ட காலமாகத் தேடிக்கண்டுபிடிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

அத்துடன் தொடர்ந்து தற்போதும் பிரிட்டனில் வசிக்கும் தஞ்சம் கோருவோரும் அவர்களது குடும்பத்தினரும் சட்டபூர்வமாகத் தஞ்சம் பெறலாம் அல்லது வெளியேற்றப்படலாம் என்னும் பயத்துடனான சிந்தனையில் உள்ளனர். அத்துடன் புதிய விண்ணப்பங்களும் குவிவதால் உத்தியோகத்தர்கள் அவ்வற்றைக் கையாள்வதிலும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் சிறையிலிருந்த 1013 வெளிநாட்டுக் கைதிகளில் 70 பேர் 2005க்கு முன்னர் எந்த விதமான வெளியேற்ற நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படாமலே விடுவிக்கப்பட்டுள்ளார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய லொத்தர் சபையின் சேவை வடக்கில் விஸ்தரிப்பு

1963ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை 'ஆஸ்பத்திரி லொத்தர்' என்ற லொத்தர் சீட்டிழுப்பை முத லில் அறிமுகப்படுத்தியது.

இன்று பல சீட்டிழுப்புகளை நடத்தி அரசாங்கத்தின் திறைசேரிக்கு பல வழிகளில் பண உதவி செய்துவருகிறது. பொருளாதாரக் கஷ்டத்தில் உள்ளவர்களில் பலர் பணம் பெறவும் வழி செய்கிறது. லொத்தர் சபையைப் பொறுத்தவரையில் 2010ஆம் ஆண்டை மிகவும் சிறப்பான வருமானமுள்ள ஆண்டாகக் கருதுகிறோம்.

மேற்கண்டவாறு தேசிய லொத்தர் சபைப் பொது முகாமையாளர் எம்.எஸ்.கருணாரத்தின தெரிவித்தார். தேசிய லொத்தர் சபையின் தலைமையகத்தில் உதயனுக்கு வழங்கிய நேர்காணலின் போதேசபைத்தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எங்களின் கட்டமைப்பு மிகவும் திறமையாக உள்ளது. 70 மாவட்டங்களில் எமது முகவர்கள் செயற்படுகிறார்கள்.

எல்லா கிராமசேவகர் பிரிவுகளிலும் முக வர்களை நியமிக்கத் தீர்மானித் திருக்கிறோம். தற்போது நாட்டின் 7 சத வீத மக்களே லொத்தர் சீட்டுகளை வாங்குகிறார்கள். இதை 15 சத வீதமாக அதிகரிப்பதை நாம் இந்த 2011 ஆம் ஆண்டின் இலக் காகக் கொண்டுள்ளோம்.

2010ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபை மூலம் 15 பேர் கோடீஸ்வரர்களாகி இருக்கிறார்கள். 300 பேர் இலட்சாதிபதிகளாகி இருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் வட மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனை முகவர்களை நிய மித்து வருகிறோம். அவர்கள் அனை வரும் வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

அவர் களுக்குப் போதுமான 'சுவீப் டிக்கெற்றுக்கள்' வழங்கப்படும். கொழும்புக்கு வரவேண்டிய தேவையே இருக்காது. யாழ்ப்பாணத்திற்கு 100, கிளிநொச்சிக்கு 34, மன்னா ருக்கு 95, வவுனியாவுக்கு 95 என்ற அடிப்படையில் முகவர்கள் தேவைப்படுகிறார்கள்.

முகவர்களுக்குப் பலவிதமான சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஒரு டிக்கெற்றுக்கு ரூபா 3.50 கமிஷன் வழங்கப்படும். அவர்களின் பிள்ளைகளுக்கு 5 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக் கழகப் படிப்புவரையும் புலமைப் பரிசில் வழங்கப்படும். இது மாப்பொல புலமைப் பரிசிலுக்கு ஒத்ததாக இருக்கும்.



மேலும், அவர்களின் பிள்ளைகள் நோய் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டால் முழுச் செலவையும் லொத்தர் சபை ஏற்றுக்கொள்ளும். லொத்தர் சபையின் லொத்தர் சீட்டிழுப்பில் 'சுரண்டும்' ரிக்கெற்றுகளும், விமானப் பயணிகளுக்காக நடத் தப்படும் 'எயர் போட் சுப்பர் டிரோ' சீட்டிழுப்பும் மிகவும் பிரபல்யமானவை. விமானச் சீட்டிழுப்புக்கு முதற் பரிசாக BMW கார் வழங்கப்படுகிறது.




எமது சேவைகளை வடக்கில் மேலும் விஸ்தரிக்கும் முகமாக இம்மாதம் 15ஆம் திகதி வட மாகாண நகரான மல்லாவி யில் 'அக்னி' இசைக் குழுவின் மாபெரும் இசை நிகழ்ச்சி இடம் பெறும். இதில் பிரபல ஈழத்துப் பாடகர்களான சிவகுமார், நிலுக்ஷி வீரசிங்கம், சிரஞ்சீவி, முத்தழகு முதலானோர் பங்கு பற்றுவார்கள். இந்நிகழ்ச்சி முற்றிலும் தமிழில் நடைபெறும் என்று இப்படி தேசிய லொத்தர் சபை பொது முகாமையாளர் எம்.எஸ்.கருணாரத்ன கூறினார்.

மூன்று வாரங்களுக்கு முன் நடைபெற்ற ஜாதிக சம்பத சீட்டிழுப்பில் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் முதற் பரிசாக 2 கோடி 40 லட்ச (24 மில்லியன்) ரூபாவைப் பெற்றுக் கொண்டதையும், அவர் நினைவுப்படுத்தினார். இந்த ஆண்டில் லொத்தர் சபை கிழக்கு மாகாணத்திலும் சேவைகளை விஸ்தரிக்க உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(சி)

# செலான் வங்கிக் கணக்கில் ரூ.20,000 இருந்தால் வெகுமதிகள் கிடைக்கும்

செலான் SURE இன் அறிமுகத்துடன், இலங்கை முழுவதுமுள்ள அதன் ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வெகுமதிகளை செலான் வங்கி விஸ்தரித்துள்ளது.

அதன் பெயர் குறிப்பிடுவது போன்று 'SURE' தமது கணக்குகளில் ரூ. 20, 000/- ஐ ஆகக் குறைந்த வைப்பாகக் கொண் டுள்ள சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகளை (இணைந்த மற்றும் தனிநபர்) கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு பரிசுகளையும் பணப்பரிசுகளையும் வழங்கும் ஒரு திட்ட மாகும். திருமணம், குழந்தை பிறப்பு, சிரேஷ்ட பிரஜைகளின் பிறந்த நாள் மற்றும் சத்திர சிகிச்சை ஆகிய ஒருவரின் நான்கு பிரதான பிரிவுகளை SURE நோக்குகின்றது.


குறிப்பிட்ட சகல கணக்கு வைத்திருப்போருக்கும் திரு மணம் மற்றும் குழந்தைப் பிறப் பின் போது விசேட பணிப்பரிசுகள் வழங்கப்படும்.

தனியார் அல்லது அரச வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்கு உட்படும்போது (கண் சிகிச்சை (கற்றாக்) உள்ளடங்கலாக) பணம் வழங்கப்படும். கணக்கு வைத்திருப்பவர்களின் வாரிசுகளுக்கும் இது வழங்கப்படும்.

அத்துடன், சகல சிரேஷ்ட கணக்கு வைப்பாளர்களுக்கும் அவர்களின் 60 ஆவது பிறந்த நாள் அல்லது அதற்குப் பிந்திய பிறந்த நாளுக்கு பரிசுகள் வழங்கப்படும். அதற்கு ஒரு படி மேலே சென்று ஒவ்வொரு ஆறு மாதத்திலும் 50 அதிஷ்டசாலி வாடிக்கையாளர்களுக்கு பாங்கொக்குக்கான மூன்று பகல், இரண்டு இரவு சுற்றுலாவும் வழங்கப்படும்.

ரூ. 20,000/- தொடக்கம் ரூ. 30, 000/- ரூ. 30,000/- தொடக்கம் ரூ. 60,000/-, ரூ. 60,000/- தொடக்கம் ரூ. 90,000/-, ரூ. 90, 000/- தொடக்கம் ரூ. 150, 000/- மற்றும் ரூ. 150, 000/- இற்கு அதிகமாக தமது கணக்குகளில் தொடர்ச்சியாக வைத்திருப்போர் இதற்கு தகுதி உடையவர்களாவர். கணக்கில் மிகுதியாகவுள்ள ஒவ்வொரு ரூ. 20,000/- உம் ஒரு வாய்ப்பை வழங்குவதுடன், ரூ. 20,000/-இன்மடங்குகள் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும்.

## புதுவருட ஆரம்பம்...




யாழ்ப்பாணத்தில்: லிஸ்யின் இன்வெஸ்ட் மன்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் யாழ். பிராந்தியக் கிளையினர் தமது புது வருடத்துக்கான சேவைகளை கடந்த 3ஆம் திகதி திங்கள்கிழமை ஆரம்பித்தனர். கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட லிஸ்யின் இன்லெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட் குத்தகை, வாடகைக் கொள்வனவு, கடன் வழங்கல், அடகு சேவை என்பவற்றை வழங்கி வருகின்றது. (த-15)

# எல்.ஐ.ஓ.சியின் பசுமையாக்கல் திட்டத்தில் இணைந்துள்ள முல்லைத்தீவு சிறுவர்கள்

லங்கா IOCயின் பசுமையாக்கல் திட்டத்தில் அண்மையில் முல்லைத்தீவைச் சேர்ந்த வறிய குடும்பங்களின் 300 சிறுவர்கள் இணைந்து கொண்டனர். இந்த ஆக்கபூர்வமான சுற்றாடல் சார்பு திட்டத்தில் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவற்றை அவர்கள் நட்டு வளர்த்து பராமரிப்பர்.

லங்கா IOC முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் பிரதேசங்களைச் சேர்ந்த 29 பாடசாலைகளில் 290 சிறுவர்களை இந்தச் சேவையில் இணைத்துக் கொண்டதனால் பசுமையாக்கல் திட்டத்தினால் நேரடியாக நன்மையடையும் மாணவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.



லங்கா IOC அதிகாரிகள் கலந்து கொண்ட ஒரு வைபவத்தில் இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்ட மாணவர் களுக்கு மக்கள் வங்கியின் கணக் குப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேசத்தின் கால நிலை மற்றும் மண்வளம் என்பனவற்றின் அடிப்படையில் வனத்திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்படும் மரக்கன்றுகளைப் பராமரிக்கும் பொறுப்பு இந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் 100 ரூபா வீதம் 3 ஆண்டு காலத்திற்கு இதற்கான கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படும். ஒவ் வொரு மரத்தையும் பாதுகாக்கும் வகையில் பிளாஸ்டிக் வயரினால் செய்யப்பட்ட பாதுகாப்புக் கூடொன்றும் வழங்கப்படுகிறது.

''மரநடுகைத் திட்டம் ஒன்றின் வெற்றி அதன் நீடித்து நிலைக்கும் பண்பை அது சார்ந்த சமூகம் உறுதி செய்வதிலேயே தங்கியிருக்கின்றது'' என்று லங்கா IOCயின் முகாமைத்துவப் பணிப்பாளர் கே.டி. ஆர். சுரேஸ்குமார் கூறினார்.

''இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் நாடு முழுவதையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் காட்டிவரும் ஆர்வமும் ஈடுபாடும் இந்தப் பசுமையாக்கல் திட்டமானது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதற்கு ஒரு சான்றாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசை விமர்சிக்கக் கூடாதா? குமுறுகிறார் செங்கடல் பட இயக்குநர்

## படத்துக்குத் தடை; ஜனநாயகப் படுகொலை எனச் சாடல்




கொழும்பு,ஜன.13

இலங்கை அரசை விமர்சிக்கக் கூடாது என்று நிபந்தனையே விதிக்கும் அளவுக்கு மோசமான நிலைமைக்குள் படைப்பாளிகளைச் சிறைப்படுத்தப் பார்க்கிறது இந்திய அரசு.

- இவ்வாறு 'செங்கடல்' படத்தின் இயக்குநர் லீனா மணிமேகலை குமுறுகிறார்.

துயரத்தில் தவிக்கும் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழ் மீனவர்கள் பிரச்சினையில் இலங்கை - இந்திய - தமிழக அரசுகளின் நிலைப்பாட்டை விமர்சிப்பதால் 'செங்கடல்' படத்துக்கு சென்னை தணிக்கைக் குழு தடை விதித்துள்ளது. இப்போது படத்தை மறு தணிக்கைக்கு அனுப்பும் முடிவில் உள்ளார் இயக்குநர் லீனா.

இந்தத் தடை குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு -

தணிக்கைக் குழு என்ற ஒன்றே தேவையா என்ற கேள்வி பல காலம் இருந்துவருகிறது. அந்தக் கேள்வியில் உள்ள நியாயத்தைப் புரிய வைத்துள்ளது 'செங்கடலு'க்கு தணிக்கைக் குழு விதித்துள்ள தடை.

1885 இல் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு எப்படி 2011 இலிருக்கும் படைப்பெல்லையைக் கட்டுப்படுத்த அல்லது தணிக்கை செய்ய முடியும் என்று தெரியவில்லை.

வெளிநாடுகளில் தணிக்கைக் குழு என்ற ஒன்றே இல்லை. இங்கே படங்களுக்கு தணிக்கை என்கிறார்கள்.

இங்கு பட விழாக்களில் பங்கேற்கும் வெளிநாட்டுப் படங்களுக்கு தணிக்கை இல்லை. ஆனால் இந்தியப் படம் என்றால் தணிக்கை உண்டு. எதற்கு இந்த இரட்டை நிலைப்பாடு?

இந்த நாட்டில் அரசை விமர்சிக்காமலா இருக்கிறார்கள்? அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் எல்லாரும்தானே விமர்சிக்கிறார்கள். அந்த விமர்சனத்தை ஒரு படைப்பாளி முன் வைத்தால் தவறா? படைப்பாளிக்கு அந்தச் சுதந்திரம் கிடையாதா?

நான் பொதுவாக ஆதாரமின்றி விமர்சிக்கவில்லை. ஈழ யுத்தத்தின் இறுதி தருணங்கள், அந்தக் கரையில் இலங்கை யுத்தம் நடக்கிறது. இந்தக் கரையில் 'அரசியல்' நடக்கிறது. இரண்டுக்கும் நடுவில் மாட்டிக் கொண்டு சிக்கிச் சீரழிந்த தமிழரின் வாழ்க்கையைப் படமாக்கியிருக்கிறோம். அதில் எள்ளளவும் கற்பனை இல்லை.

நடந்த உண்மைகளை மட்டுமே எந்தச் சினிமா பூச்சுமின்றி திரைப்படமாக்கியுள்ளேன். இதை அனுமதிக்க மறுப்பது உண்மையிலேயே ஜனநாயகப் படுகொலைதான்.

அரசை விமர்சிக்கும் உரிமை அதன் மக்களுக்கு இருக்கிறது. அதுதானே ஜனநாயகம். அதுவும் இந்தப் படம் மக்களுக்கானது - மக்கள் பிரச்சினையைப் பேசுவது. அதில் அரசுகள் செய்த தவறை ஆதாரத்துடன் சுட்டிக் காட்டியுள்ளோம். இதிலிருந்து நான் பின்வாங்க முடியாது.

தணிக்கைக் குழுவினர் இலங்கை அரசை விமர்சிக்கவே கூடாது என்கிறார்கள். இலங்கைத் தமிழரும், இந்திய தமிழ் மீனவர்களும் இன்று படும் துன்பங்களுக்கு யார் காரணம்?, இலங்கை அரசை விட்டுவிட்டு யாரைக் காரணம் என்று காட்ட முடியும்? இந்தக் கொடுமைகளுக்குத் துணை நின்றவர்களைக் கொண்டாட வேண்டுமா?

இந்தப் படம், யுத்தம் நடந்த அந்த காலகட்டத்தில் மக்கள் பட்ட வேதனைகள், அதன் பாதிப்புகளைச் சொல்லும் படம். அன்றைக்கு என்னென்ன நிகழ்வுகள் அரங்கேறியதோ அவற்றை அப்படியே பதிவு செய்துள்ளோம். 100 சதவீதம் நடந்தவற்றை மட்டுமே பதிவு செய்திருக்கிறேன். படம் பார்க்கும் முன்பே, இது புலிகளுக்கு ஆதரவான படம் என்ற தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். இன வழிப்புக்கு துணை நின்றவர்களை விமர்சித்துள்ளோம். மக்கள் படும் துன்பங்ளை படம் பிடித்துள்ளோம். அவ்வளவுதான்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# ஈழத்தமிழர்களின் நிலை தற்போதும் சொல்ல முடியாத பெருந் துயரத்தில்

## ரவிசங்கர் சுவாமி வருத்தம்; மீண்டும் அவர்களைச் சந்தித்து சுயநம்பிக்கையை ஏற்படுத்தவுள்ளேன் என்றும் தெரிவிப்பு



கும்பகோணம்,ஜன.13

இலங்கையில் போர் நிறுத்தத்துக்குப் பின்னர் நான் சென்று அங்குள்ள தமிழர்களைப் பார்த்தபோது அவர்கள் சொல்ல முடியாத துயரத்தில் இருந்தனர். இப்போதும் அதே நிலைமைதான் உள்ளது - என்று ஸ்ரீ ரவிசங்கர் சுவாமி வருத்தம் தெரிவித்தார்.

பெங்களூரிலிருந்து தனி ஹெலிகொப்டர் மூலம், கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மைதானத்திற்கு கடந்த திங்களன்று காலை 9.30 மணிக்கு வந்த அவர், கார் மூலம் சுவாமிமலை கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

அங்கிருந்து தன்னுடைய சொந்த ஊரான பாபநாசத்துக்குச் சென்று 108 சிவாலயத்தில் நடந்து வரும் மகா ருத்ர யாகத்தில் பங்கேற்றார். பிற்பகல் 3.45 மணிக்கு கார் மூலம், கும்பகோணம் வந்த மேலும் கூறியவை வருமாறு -

வாழும் கலை அமைப்புத் தொடங்கி அதன் 30 ஆவது ஆண்டு தற்போது நடந்து வருகிறது. இதை முன்னிட்டு, பாபநாசம் 108 சிவாலயத்தில் சிறப்புப் பூஜை செய்யப்பட்டது. தொடர்ந்து மும்பையில் ஐந்து நாட்கள் நிகழ்ச்சிகள் சில அமைப்பின் மூலம் நடத்தப்படவுள்ளன.

வரும் 22, 23 ஆம் திகதிகளில் இலங்கையில் 21 ஆயிரம் பேர் தேவாரம் பாடி, பௌத்த மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் நிகழ்ச்சியும், சென்னையில் 5,500 பேர் ஒரே மேடையில் பங்கேற்கும் நாத வைபவ நிகழ்ச்சியும் நடக்கின்றன.

ஜெர்மனி நாடாளுமன்றில் உள்ள ஹிட்லரின் அரங்கில், அந்நாட்டு அரசின் ஒத்துழைப்போடு நடத்தப்படும் 75 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று, உலகம் அமைதியாக வாழ சொற்பொழிவு நடத்தப்படும்.

இலங்கையில் போர் நிறுத்தத்துக்கு பிறகு, நான் சென்று அங்குள்ள தமிழர்களை பார்த்தபோது அவர்கள் சொல்ல முடியாத துயரத்தில் இருந்தனர். இப்போதும் அதே நிலைமைதான் உள்ளது.

அவர்களை நான் மீண்டும் சந்தித்து ஆறுதல் படுத்தி, புத்துணர்ச்சி அளித்து, சுய நம்பிக்கையை ஏற்படுத்த உள்ளேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் குழுமியிருந்த மாணவர்கள் மத்தியில் ரவிசங்கர் குருஜி பேசுகையில்,

மாணவர்களாகிய நீங்கள் எல்லாரும் நன்றாகப் படிக்க வேண்டும்; விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க வேண்டும் - என்று கூறினார். பின்னர் மாலை 4 மணிக்கு ஹெலிகொப்டர் மூலம் பெங்களூர் சென்றார்.

# தீவிரவாதம் தொடர்பாக பாகிஸ்தான் அக்கறையுடன் செயற்படவேண்டும்

## இந்திய அரசு வலியுறுத்து



டில்லி,ஜன.13

இந்தியாவுக்குக் கவலையளிக்கும் மையப் பிரச்சினை பயங்கரவாதம். இதுகுறித்து பாகிஸ்தான் அக்கறையோடு செயற்பட வேண்டும் - என்று வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியுள்ளார்.

இந்தியாவின் முக்கிய பிரச்சினையான பயங்கரவாதம் குறித்து பாகிஸ்தான் மேலும் அக்கறையோடும் ஆழ்ந்த உணர்வோடும் அணுகவேண்டும். பாகிஸ்தான் அவ்வாறு செய்தால்தான் இரு நாடுகளிடையே உள்ள உறவு இயல்பு நிலைக்குத் திரும்ப இயலும்.

பயங்கரவாத எதிர்ப்பைக் கிடப்பில் போட்டுவிட முடியாது - என்றும் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

பாகிஸ்தானுடன் நமக்கு நட்புத் தேவை. ஆனால் பயங்கரவாதச் செயல்களுக்காக அந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தளங்களை அகற்ற பாகிஸ்தான் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதிகளின் பயிற்சி குறித்தும், பயிற்சி பெறும் இடங்கள் குறித்தும் இந்தியா விரிவான தகவல்கள் அளித்திருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பெப்ரவரி 6, 7 ஆம் திகதிகளில் சார்க் மாநாடு பூடான் தலைநகர் திம்புவில் நடைபெறுகிறது. அப்போது இந்திய - பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர்கள் தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

அவசியமானால் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா முகம்மது குரேஷியை சந்திக்கவும் தயாராக உள்ளேன்.

- இப்படி அவர் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# ஜெகனுடன் 20 எம்.எல்.ஏக்கள் இணைவு? ஆந்திரக் காங்கிரஸ் அரசு கவிழும் அபாயம்

## காப்பாற்றுமா சிரஞ்சீவியின் பிரஜா ராஜ்யம்?

ஹைதராபாத், ஜன.13

ஜெகன் மோகன் ரெட்டியுடன் 20 காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் இணைந்துள்ளதால், ஆந்திரக் காங்கிரஸ் அரசு கவிழும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. சிரஞ்சீவி கட்சி கைகொடுத்தால், அரசு தப்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸில் இருந்து விலகிய ஆந்திர மாநில முன்னாள் முதல்வர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி, விரைவில் தனிக்கட்சி தொடங்குகிறார். அவருக்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளும் ஆதரவு இருக்கிறது.

கிருஷ்ணா நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக, ஜெகன் மோகன் ரெட்டி நேற்றுமுன்தினம் டில்லியில் உண்ணாவிரதமிருந்தார். அதில், ஆந்திர காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 20 பேர் கலந்து கொண்டனர். இது காங்கிரஸ் கட்சியை அதிர்ச்சிக்கு உள்ளாக்குள்ளது.

294 உறுப்பினர்களைக் கொண்ட ஆந்திர சட்டசபையில், ஜெகன் மோகன் ரெட்டியின் தாயார் விஜயலட்சுமி இராஜினாமாவால், ஓரிடம் வெற்றிடமாகவுள்ளது. காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 155 பேர் உள்ளனர்.

குறைந்தபட்ச பெரும்பான்மைக்கு 147 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

ஜெகனுடன் கைகோத்த 20 எம்.எல்.ஏக்களும் கட்சியை விட்டு நீக்கப்பட்டால், காங்கிரஸின் பலம் 135 ஆக குறைந்து விடும். அப்போது, பெரும்பான்மை இழந்து காங்கிரஸ் அரசு கவிழும் சூழ்நிலை ஏற்படும்.

ஆனால், சிரஞ்சீவியின் பிரஜாராஜ்யம் கட்சி கைகொடுத்தால், ஆட்சி தப்பித்து விடும் என்று தெரிகிறது.

பிரஜா ராஜ்யம் கட்சிக்கு 18 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். இவர்களில் 2 பேர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஆதரவாகவும், 2 பேர் தெலுங்கானா தனி மாநில ஆதரவாளர்களாகவும் மாறி விட்டனர். ஏனையோர், சிரஞ்சீவிக்கு ஆதரவாக 14 எம்.எல்.ஏக்களே உள்ளனர். 14 பேரின் ஆதரவு இருந்தால்கூட கிரண்குமார் ரெட்டி அரசு கவிழாமல் தப்பிவிடும். ஆனால், அரசுக்கு ஆதரவு அளிக்க சிரஞ்சீவி சில நிபந்தனைகள் விதிப்பார் என்று தெரிகிறது.

மேலும், 7 எம்.எல்.ஏக்களை கொண்ட மஜ்லிஸ் -இ- இதேகாதுல் முஸ்லிமின் என்ற கட்சியிடமும் காங்கிரஸ் ஆதரவு கேட்க வாய்ப்புள்ளது. ஆனால், தெலுங்கானாவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட மஜ்லிஸ் கட்சி, தெலுங்கானாப் பிரச்சினையில் காங்கிரஸின் நிலைப்பாட்டை பார்த்துத்தான் ஆதரவளிப்பது பற்றித் தீர்மானிப்போம் என்று கூறுகிறது.



ஜெகன் மோகன் ரெட்டி தலைமையில் ஆந்திர காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 20 பேர் டில்லியில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதமிருந்தபோது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலர் பிரிவுகளுக்கு 10 புதிய விளையாட்டு அலுவலர்கள்

வலி.வடக்கு, ஜன.13

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குப் பத்துப் புதிய விளையாட்டு அலுவலர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

புதிய விளையாட்டு அலுவலர்கள் நியமனம் பெற்றுள்ள இடங்கள் வருமாறு:

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு- மயூரன், ஊர்காவற்றுறை அரசாங்க அதிபர் பிரிவு- சதீஸ்கண்ணா, வேலணை பிரதேச செயலர் பிரிவு- ஜசிதரன், நல்லூர் பிரதேச செயலர் பிரிவு- பிரசன்னா, தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு- வல்லவக்குமரன், உடுவில் பிரதேச செயலர் பிரிவு- கோசிகன், சங்கானை பிரதேச செயலர் பிரிவு- நிசாந்தன், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு- செல்வி அகல்யா, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு- எஸ்.நாகராசா, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு- சுதாகரன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு- லக்ஸ்மன்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றிய விளையாட்டு அலுவலர்களான வேலணை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் நித்திலநாயகம் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றிய அனுராகாந்தன் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கும், சங்கானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய துரைசிங்கம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொடர்ந்தும் வசந்தன் கடமையாற்றி வருகிறார். (த-86)

# கிளி. மாவட்ட உதைபந்தாட்ட லீக் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்துக்கான உதைபந்தாட்ட லீக்கின் செயற்குழுத் தெரிவு கடந்த வாரம் கிளிநொச்சி கனகபுரம் மைதானத்தின் ஒன்றுகூடல் மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

லீக் தலைவராக ஆசரியர் ப.ஜோயல் பியசீலன், செயலாளராக ஆசிரியர் மு.நிமலதாஸ், பொருளாளராக விளையாட்டுத்துறை அலுவலர் அ.பிரபாகரன் உட்பட 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-23)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.13

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் இவ்வாண்டுக்கான உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் ஆர்வமுள்ளவர்களை 0776737535 என்னும் தொலை பேசி இலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-23)

# மூன்று ஆண்டுகள் மாத்திரம் ஐ.பி.எல். விளையாடுவேன்



**- முரளிதரன்**

ஐ.பி.எல் கிரிக்கட் போட்டியில் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் மாத்திரமே விளையாடுவேன் என இலங்கை அணியின் சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இனி கொச்சி அணிக்காக விளையாட உள்ளார். அவரை கொச்சி அணி ரூ.5.6 கோடிக்கு வாங்கியுள்ளது.

இது தொடர்பாக முரளிதரன் அளித்த பேட்டியில்:-

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 3 ஆண்டுகள் விளையாடி உள்ளேன். அந்த அணியினருடன் சில மகிழ்ச்சிகரமான தருணத்தை அனுபவித்து இருக்கிறேன். எனது மனைவியின் ஊர் சென்னைதான். நான் அணி மாறுவது அவருக்கு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. ஆனால் இதுதான் ஐ.பி.எல். கிரிக்கெட். சென்னையையும், எனது அணி வீரர்களையும், அற்புதமான அணி தலைவர் டோனியையும் தவற விடுவது வருத்தம் அளிக்கிறது. சென்னை அணிக்காக மகிழ்ச்சியுடன் ரசித்து விளையாடினேன். கடந்த ஆண்டு ஐ.பி.எல். மற்றும் சம்பியன்ஸ் லீக்கில் சம்பியன் பட்டம் வென்றது மறக்க முடியாது. நானும் நிறைய விக்கெட்டுகளை கைப்பற்றினேன்.

கொச்சி புதிய அணி. புதிய தலைவர், புதிய இலக்குகளை கொண்டது. இதுவும் எனக்கு உற்சாகம் அளிக்கிறது. சொந்த ஊரில் ஆடுவது போன்ற சூழல் எனக்கு இருக்கும் என்று நம்புகிறேன். கொச்சி மக்கள் எனது தாய்மொழியை புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். கொச்சி அணி எனது மீது நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறது. அவர்களை நான் ஏமாற்றமாட்டேன். எனது முழுத் திறமையை வெளிப்படுத்த முயற்சிப்பேன். இன்னும் 2 அல்லது 3 ஆண்டுகள் ஐ.பி.எல். போட்டியில் நீடிக்க விரும்புகிறேன் - என்று முரளிதரன் கூறியுள்ளார். (த)

## வெற்றிக் களிப்பில்....



சுதுமலை வடக்கு இந்து இளைஞர் கழகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்டது. இதில் 'லெவின்' விளைாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய கழக வீரர்களுடன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கிக் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா காணப்படுகின்றார். (த-100)

# கிரிக்கெட் சூதாட்டச் சர்ச்சையால் எனது ஆட்டம் பாதிக்கப்பட்டது

**- சச்சின்**



1999 - 2000 ஆம் ஆண்டுகளில் வலுவாக எழுந்த கிரிக்கெட் சூதாட்ட சர்ச்சையால் தனது ஆட்டம் பாதிக்கப்பட்டதாக இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

99, 2000 ஆம் ஆண்டுகளில் எழுந்த சூதாட்டம் சர்ச்சை குறித்து தென்னாபிரிக்காவில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் சூதாட்ட சர்ச்சை தொடக்கத்தில் எனது ஆட்டத்தையும், இந்திய அணியின் ஆட்டத் திறனையும் பாதித்தது. அந்த காலகட்டத்தில் ரசிகர்கள் கிரிக்கெட் வீரர்களைச் சந்தேகத்துடன் பார்த்தது அணியினருக்கு கடினமானதாகவும், மனவலி நிறைந்ததாகவும் இருந்தது.

என்னாலும் அந்தக் காலகட்டத்தில் சரியான மனநிலையுடன் ஆடமுடியாத நிலை இருந்தது என்று கூறியுள்ள சச்சின் சூதாட்டம் தொடர்பாகத் தன்னை எந்தவொரு நபரும் அணுகியது கிடையாது என்றும் அணி வீரர்கள் கூட்டத்தில் நாங்கள் சூதாட்டம் குறித்து எந்தவித ஆலோசனையும் நடத்தியது கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

எல்லா ஆட்டத்திலும் மக்கள் தெரிவிக்கும் மோசமான விமர்சனம் எங்களது மனதைப் பாதிக்கிறது என்று கூறியுள்ள டெண்டுல்கர், கிரிக்கெட் ரசிகர்கள் பழைய சம்பவங்களை மறந்து ஆட்டத்தில் ஆர்வம் காட்டுவது மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்துள்ளார். (த)

## விளையாட்டு அரங்குகளில்



# சூதாட்ட வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

சல்மான் பட், ஆமிர், ஆசிப் மீதான சூதாட்ட விசாரணையின் தீர்ப்பை, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் 2 வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த ஆண்டு லோர்ட்சில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது, பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமது ஆமிர், முகமது ஆசிப் ஆகியோர் ''ஸ்பொட் பிக்சிங்' எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து இவர்கள் மூவரையும் கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.சி.சி. இடைநீக்கம் செய்தது. இவர்கள் மீதான

சூதாட்டப் புகார்களை விசாரிக்க, ஐ.சி.சி. சார்பில் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு கடந்த 6 ஆம் திகதி முதல், டோகாவில் விசாரணை நடத்தியது. இதில், சல்மான்பட், ஆமிர், ஆசிப் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த விசாரணை நேற்று முன்தினம் முடிந்தது. ஆனால் தீர்ப்பை ஒத்தி வைக்க வேண்டும் என முகமது ஆமிரின் வழக்கறிஞர் கரீம் வேண்டுகோள் விடுத்தார். இதனையடுத்து அடுத்த கட்ட விசாரணை வரும் 5ஆம் திகதி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். போட்டியில் விளையாட ஆர்வமாக இருந்தேன் - ஜயசூரிய



ஐ.பி.எல். போட்டியில் விளையாட ஆர்வமாக இருந்தேன், ஆனால்.......

அதைப் பற்றி பேச விரும்பவில்லை என இலங்கையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய தெரிவித்தார்.

சூப்பர் சிக்ஸ் கிரிக்கெட் போட்டி அறிமுக நிகழ்ச்சி சென்னை யில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இலங்கை அணியின் அதிரடி ஆட்டநாயகன் ஜய சூரிய கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஜயசூரிய, கடந்த 3 ஐ.பி.எல். போட்டியில் நான் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளை யாடிமை மகிழ்ச்சியானது. இந்த ஐ.பி.எல். போட்டியில் வாய்ப்பு இல்லை. இதுதொடர்பாக நான், உண்மையிலேயே பேச விரும்பவில்லை.

ஆனால் ஐ.பி.எல். போட்டியில் நான் விளையாட ஆர்வமாக இருந்தேன்.மேலும் டெண்டுல்கர் சமீபத்தில் தனது 50 ஆவது டெஸ்ட் சதத்தை பெற்றார். அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார். கிரிக்கெட்டின் தூதுவர் ஆவார். தற்போது உள்ள இலங்கை அணி சிறப்பாக உள்ளது. உலக கிண்ணத்தில் இலங்கை அணி சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன்.

இந்திய துணைக் கண்டத்தில் உள்ள நாடுகள்தான் உலக கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருக்கிறது. 1996ஆம் ஆண்டு நாங்கள் உலக கிண்ணத்தை வென்றது மறக்க இயலாதது. அந்த போட்டியில் நாங்கள் மிகவும் சிறப்பாக விளையாடினோம். என தெரிவித்தார். (த)

# ஆஸ்திரேலியா வீழ்ச்சிக்கு ஐ.பி.எல்.தான் காரணம்

உலக சம்பியனான ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக வீழ்ந்து வருவதற்கு இந்தியாவில் நடந்து வரும் ஐ..பி.எல். ருவென்ரி-20 போட்டிகள்தான் காரணம் என பாக்.முன்னாள் கிரிக்கெட் கப்டன் ஜாவிட் மியான்டாட் கூறியுள்ளார். சமீபத்தில் நடந்த ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து ஆஸ்திரேலியாவை 1-3 என வென்று தொடரைக் கைப்பற்றியது. இதனால் ஆஸ்திரேலியா தனது தரவரிசையினையும் இழந்து பரிதாபத்திற்கு ஆளானது.

இந்நிலையில் முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் கப்டன் ஜாவிட் மியான்டாட் கராச்சியில் செய்தியளார்களுக்கு கூறியதாவது:-




இந்தியாவில் ஆண்டு தோறும் நடந்து வரும் ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டிகளால் அங்குள்ள வீரர்கள் காட்டில் பணமழை பொழிகிறது. இதனால் ஆஸ்திரேலிய வீரர்களும் பணத்தாசையினால் ஐ.பி.எல். போட்டிகளில் ஆர்வம் காட்டுகின்றனர். நாட்டுக்காக விளையாடுவது என்ற எண்ணம் மறைந்து பணத்துககாக விளையாடுகின்றனர். இதுவே ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணிக்கு சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (த)

# சாதிக்க ஊனம் ஒரு தடையல்ல நிரூபிக்கும் அமெரிக்கச் சிறுவன்




வாழ்க்கையில் சாதிப்பதற்கு ஊனம் ஒருதடையல்ல என்பதை நிரூபிக்கும் பல விதமான மனிதர்களை பற்றி நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

அத்தகைய ஓர் சிறுவனைப் பற்றிய சுவாரஸ்யமான செய்தியே இது. அமெரிக்காவைச் சேர்ந்த 9 வயதான கோடி மெக்கஸ்லேண்ட் என்ற அச் சிறுவனிடம் சுமார் 20 செயற்கைக் கால்கள் உள்ளன.

இவை அனைத்தும் வெவ்வேறு விதமான போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அச் சிறுவன் தன்னிடம் வைத்துள்ளவையாகும்.

இதுவரை பல விளையாட்டுக்களில் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளான் கோடி. இவன் குழந்தையாக இருக்கும் போதே இவனது கால்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளன.

எனினும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்காத கோடி தனது முயற்சி மூலம் தன்னால் பல விளையாட்டுக்களில் சாதிக்கமுடியும் என்பதை நிரூபித்துள்ளான்.

இவனது வெற்றிகளுக்கான இன்னுமோர் முக்கிய காரணம் இவனது பெற்றோராகும். அவர்களது ஊக்குவிப்பே இத்தகைய ஓர் தன்னம்பிக்கை மிக்க ஒருவனாக மாற வழிவகுத்துள்ளது. கோடியின் தற்போதைய இலக்கு உலக ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு தங்கப்பதக்கத்தை வெல்வதே ஆகும். (த)

# சிறந்த வீரர் விருது மெஸ்சிக்கு



ஆண்டின் சிறந்த உதைபந்தாட்ட் வீரருக்கான விருதை, இரண்டாவது முறையாக தட்டிச் சென்றார் ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்சி.

சர்வதேச உதைபந்தாட்ட் கூட்டமைப்பு (பிபா) சார்பில், ஆண்டு தோறும் சிறந்த வீரர் விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் தேர்வுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில், ஆர்ஜென்ரீன அணி வீரர் லியோனல் மெஸ்சி 22.65 சதவீத வாக்குகள் பெற்று விருதை தட்டிச் சென்றார். இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்கள் முறையே ஸ்பெயினின் இனியஸ்டா (17.36 சதவீத வாக்குகள்) மற்றும் சேவி (16.48 சதவீத வாக்குகள்) ஆகியோர் தட்டிச் சென்றனர். இவர்கள் மூவருமே பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார்கள்.

''பிபா' வழங்கும் ஆண்டின் சிறந்த வீரர் விருதை லியோனல் மெஸ்சி, தொடர்ந்து இரண்டாவது முறையாகக் கைப்பற்றியுள்ளார். கடந்த ஆண்டு தென்னா பிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண தொடரில் ஆர்ஜென்ரீனா அணிக்காக சொதப்பினார் மெஸ்சி. இருப்பினும் பார்சிலோனோ கிளப் அணி சார்பில் அசத்திய இவர், 58 கோல்கள் அடித்துள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.ஆண்டின் சிறந்த வீராங்கனை விருதை பிரேசிலின் மார்தா, தொடர்ந்து 5ஆவது முறையாகத் தட்டிச் சென்றார். (த)

# கொல்கத்தா நைட் ரைடர்ஸில் கங்குலிக்கு இனி இடமில்லை



சௌரவ் கங்குலியை அணியில் சேர்க்கும் திட்டமே கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் இல்லை என்பது தெரிய வந்துள்ளது. இதை அணியின் முன்னுள் பந்து வீச்சு பயிற்சியாளர் வாசிம் அக்ரமின் பேட்டி வெளிப் படுத்துகிறது.

கங்குலியை எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை. இது குறித்து வாசிம் அக்ரம் கருத்து தெரிவித்துள்ளார். இவர் கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணி யின் முன்னாள் பந்து வீச்சுப் பயிற்சியாளர் ஆவார்.

இதுகுறித்து அக்ரம் கூறுகையில், கங்குலி எனது நெருங்கிய நண்பர். அவரை எந்த அணியாவது ஏலத்தில் எடுக்கும் என நினைத்திருந்தேன். அவரது அனுபவம், தலைமைத்துவ சிறப்பு ஆகியவற்றை எந்த அணியாவது பயன்படுத்தியிருக்கலாம் என்று கருதினேன். ஆனுல் யாரும் அவரை எடுக்காதது ஆச்சரியமாக உள்ளது. அவரை அனைத்து அணிகளும் முற்றிலும் புறக்கணித்துள்ளது வியப்பாக உள்ளது என்று கூறியுள்ளார் அக்ரம்.

'எந்த அணியாவது' என்று அக்ரம் கூறியிருப்பதன் மூலம் கங்குலியை தனது அணியில் சேர்க்கும் எண்ணமே கொல்கத்தா நைட் ரைடர்ஸிடம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. (த)

# 4.14 கோடி ரூபாவுக்கு விலை போனது ஆச்சரியம் என்கிறார் கிறிஸ்டியன்

நான்காவது ஐ.பி.எல்.ஏலத்தில் 4.14 கோடி ரூபாவுக்கு விலை போனது மிகவும் ஆச்சரியமாக உள்ளதாக அவுஸ்திரேலிய வீரர் டானியல் கிறிஸ் டியன் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

நான்காவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் ஆஸ்திரேலியாவின் அறி முகம் இல்லாத இளம் சகலதுறை வீரரான டானி யல் கிறிஸ்டியன் (27 வயது) டெக்கான் சார்ஜர்ஸ் அணியால் 4.14 கோடி ரூபா வுக்கு வாங்கப்பட்டார். அவுஸ்திரேலிய அணிக்காக 3 சர்வதேச ருவென்ரி-20 போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர் சிறப்பான களத்தடுப்பாளர்.

முதலில் கிறிஸ்ரியனுக்கு அடிப் படை விலையாக 23 இலட்சம் ரூபா மட்டுமே இருந்தது. இறுதியில் 18 மடங்கு அதிகமான தொகை கிடைத்தது.

இதுகுறித்து கிறிஸ்ரியன் கூறியதாவது;

ஐ.பி.எல்.ஏலத்தில் ஏதாவது ஒரு அணிஎன்னை எப்படியும் ஏலத்தில் எடுக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இதற்கேற்ப என்னை ஏலத்தில் எடுக்க கொச்சி, டில்லி, டெக்கான் அணிகள் கடுமையான போட்டியை வெளிப்படுத்தின. ஆனால், முடிவில் 4.14 கோடி ரூபா கொடுத்து என்னை டெக்கான் அணி வாங்கியது மிகவும் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

உண்மையில் நான் மிகவும் அதிர்ஷ்டக்காரன் என்றுதான் சொல்லவேண்டுமென்றார். (த)

# அதிர்ச்சியில் கிறிஸ் கெய்ல்



ஐபிஎல் வீரர்களுக்கான ஏலத்தில் தம்மை எந்த அணியும் தேர்வு செய்யாதது குறித்து மேற்கிந்திய வீரரும் கடந்த போட்டிகளில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வீரருமான கிறிஸ் கெய்ல் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளார்.

''எனது ஆட்டத்திறன் பற்றியும், என்னால் என்ன முடியும் என்பது பற்றியும் அனைத்து ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்களுக்கும் தெரியும். இனி எதையும் நான் நிரூபிக்க வேண்டியதில்லை.

அப்படியிருந்தும் ஐ.பி.எல் ஏலத்தில் நான் புறக்கணிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது'' என்று அவுஸ்திரேலிய இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருக்கிறார்.

கடந்த இரு ஐ.பி.எல் தொடர்களிலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ஆடிய கிறிஸ் கெய்ல், தனக்கு குறைந்தபட்ச விலை ரூ.2 கோடி என நிர்ணயித்திருந்தார். ஐ.பி.எல் போட்டிகளில் முதல் இரண்டு வாரங்கள் மட்டுமே அவரால் பங்கேற்க முடியும். அதன்பிறகு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக அவர் ஆடவேண்டியிருக்கிறது. இதன் காரணமாகவே அவரை எந்த அணியும் தேர்வு செய்யவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தக் கருத்தையும் ஒப்புக் கொண்டிருக்கும் கெய்ல், ''ஐ.பி.எல் தொடர் முழுவதும் ஆடும் நல்ல ஆட்டக்காரரை அணி உரிமையாளர்கள் தேடியதால் தாம் தேர்வு செய்யப்படாமல் 'விடப்பட்டிருக்கலாம்'' என்று கூறிருக்கிறார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம் 10.01.2011 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - தில்லையம்மா தம்பதிய ரின் புதல்வியும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவானந்தன், விவேகானந்தன் (LIC சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர்), தனுஷியா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிறேம்ராஜ்ஜின் (பிரான்ஸ்) பாசமிகு மாமியும், அபினாஷின் (பிரான்ஸ்) அன்புப் பேர்த்தியும், திருநாவுக்கரசு (இளைப்பாறிய அதிபர்,) காலஞ்சென்ற கணேசு, பஞ்சலிங்கம் (இளைப்பாறிய, மின்சாரசபை உத்தியோகத்தர்), சரஸ்வதி, தங்கலிங்கம், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வக்சலா, மனோன்மணி, மல்லிகாதேவி, காலஞ்சென்ற கந்தசாமி, தங்கரத்தினம் (குடும்ப நல உத்தியோகத்தர், கிளி. பொது வைத்தியசாலை), காலஞ்சென்ற துரைராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வட கிழக்கு, மானிப்பாய். தகவல்:
தொ.பே.இல: 0779970396, 0778025743. குடும்பத்தினர்.

## சின்னப்பு நாகரத்தினம்

(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தரும், சவுதி அரேபியாவில் பணிபுரிந்தவரும்)



கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு நாகரத்தினம் நேற்று (12.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், சுப்பிரமணியம் - இலட்சுமி தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், கங்காதரன் (நுணாவில்), ஸ்ரீகௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராசா, வனிதா (ஜேர்மனி) காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகநாயகி (யா/கைதடி, நுணாவில் அ.த.க. பாடசாலை), கௌரிபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பகீதரன் (ஜேர்மனி), கோவர்த்தனன், டிலக்ஷன், பிரவினன்,கௌதமன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*0777478390.* (108799)

தகவல்:
நா.கங்காதரன்
(கங்கை - மகன்)
(கேபிள் இணைப்பாளர்)

# இலங்கை வங்கி தேசிய சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

இலங்கை வங்கி மேற்தரக்கிளையின் தேசிய அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை வங்கி மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. இத் தகவலை மேற்தரக் கிளையின் வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# கலந்துரையாடல்

யாழ்பாணம், ஜன.13

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (204)

# வாகனம் மோதிக் காயம்

தென்மராட்சி, ஜன.13

வீதி செப்பனிடும் பணியில் ஈடுபட்ட நபரை அவ்வழியே வந்த வாகனம் மோதித் தள்ளிக் காயப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சங்கானை மேற்கைச் சேர்ந்த வி.விஸ்வலிங்கம் (வயது 66) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-207)


## விற்பனைக்கு

லான்மாஸ்ரர் K600 குவாட்டா (யப்பான்) அத்துடன் கலப்பை டிஸ் உடன்.
தொடர்பு:-0777750391


## தவறிவிட்டது

இல.151, பட்டகாடு, வவுனியாவைச் சேர்ந்த கிருஷ்ணதாசன் கமலவேணி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (676510800V) 10.01.2011 ஆம் திகதி உரும்பிராய் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உரும்பிராயில் இயங்கும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆரம்பக் கல்விப் பிரிவில் ஒப்படைக்கவும். அல்லது T.P 0776629822 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.


## வாடகைக்கு

இல.19, சிறாம்பியடி லேனில் உள்ள இரண்டு மாடிக் கட்டடமும், சகல வசதிகளும் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:-இல. 21, சிறாம்பியடி லேன்,யாழ்ப்பாணம்.

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

பிரபல்யமான கம்பனி ஒன்றில் உற்பத்திப் பொருள்களை விளம்பரப்படுத்துவதற்கான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பணியாற்றுவதற்கு
*விற்பனைப் பிரதிநிதிகள் (பெண்கள்) தேவை.
ஞாயிற்றுக்கிழமை (16.01.2011) மு.ப 10 மணிக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும்.
இடம்:- இல.30, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.
T.P:-0776124278,0772341119.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1259 நீலம்

கும்பம் 20 21 31 35 11-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,103,800/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,932 | 20/- | 4,478,640/- |
| 2 இலக்கங்கள் | 20,542 | 40/- | 821,680/- |
| 1 இல. + லக்கினம் | 20,436 | 60/- | 1,226,160/- |
| 2 இல. + லக்கினம் | 1,889 | 200/- | 377,800/- |
| 3 இலக்கங்கள் | 556 | 1000/- | 556,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 3,103,800/- | 3,103,800/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,424,080/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 608 | | 602,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 268,012 | | 12,026,580/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 10 30 41 55 ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 605 | 500/- | 302,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 608 | | 602,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 | | 14 |
| ★ | | ★ |
| 11 | | 12 |
| ★ | | ★ |
| 1937 | | 2010 |



## அமரர் சங்கரப்பிள்ளை நடராசா

(ஓய்வுநிதியர், புகையிரதத் திணைக்களம்)

கடந்த 14.12.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 13.01.2011 மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*கலாநிதி வீதி,* (108791) மனைவி, பிள்ளைகள்,
*ஏழாலை வடக்கு, ஏழாலை.* மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மஹஜன சம்பத

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

11.01.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2343

வெற்றி எழுத்து Z வெற்றி எண்கள் 3 6 9 4 3 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Z 3 6 9 4 3 5 | ரூபா.17,206,466/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | 3 6 9 4 3 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | 6 9 4 3 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 9 4 3 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 126 |
| 4 பரிசுகள் | 4 3 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1220 |
| 5 பரிசுகள் | 3 5 | ரூபா. 100/= | பரிசுகள் 12249 |
| 6 பரிசுகள் | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 120745 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 3 6 9 4 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 3 6 9 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 125 |
| 9 பரிசுகள் | 3 6 9 | ரூபா. 100/= | பரிசுகள் 1231 |
| 10 பரிசுகள் | 3 6 | ரூபா. 50/= | பரிசுகள் 12062 |
| 11 பரிசுகள் | Z | ரூபா. 20/= | பரிசுகள் 48225 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 26,471,966.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 10,000,000.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



சந்திரன் பான்சி பலஸ்
துரைஜயா மண்டபம்
... வீதி, ஆனைக்கோட்டை.

## அமரர் சொக்கலிங்கம் துரைஜயா

(கமலா ஸ்ரோஸ், சந்திரன் பான்சி பலஸ், துரைஜயா மண்டபம்)

**தோற்றம்: 30.04.1934**
**மறைவு : 20.12.2004**

**திதி: 13.01.2011**

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்தி
வையகத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து
வானுலகில் வாழ்வதற்காய் சென்றிட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைவதற்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பிரேதப்பெட்டியில் இரு சடலங்களை எரியூட்ட முயன்ற நபருக்கு மறியல்

கொழும்பு, ஜன.13

இரண்டு சடலங்களை ஒரே பிரேதப் பெட்டியில் வைத்து எரியூட்ட (தகனம்) செய்ய முயன்ற பணியாளரை கண்டி நீதிவான் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பிலிமத்தலாவ என்ற இடத்தில் இரண்டு சடலங்களை ஒரே சமயத்தில் தகனம் செய்யமுயன்ற அந்தநபர் செலவுகளை குறைப்பதற்காக அவ்வாறு செய்ய முயன்றதாக நீதிவானிடம் கூறினார்.

வவுனியாவைச் சேர்ந்த குழந்தையின் பெற்றோர் அதனை தம்மிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்று கூறிய பணியாளர் குழந்தையின் இறப்பு சான்றிதழையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார். கடுகண்ணாவ பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்த நபர் வயதான ஒரு பெண்ணின் சடலத்துடன் குழந்தையின் சடலத்தையும் ஒரே பெட்டியில் வைத்து தகனம் செய்ய எத்தனித்தார் என்று கைது செய்யப்பட்டிருந்தார். (ப)

## மாடியில் இருந்து விழுந்த மேசன் தொழிலாளி மரணம்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.நகரில் தனியார் நிறுவனம் ஒன்றின் மூன்றாவது மாடியில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை தவறி வீழ்ந்து காயமுற்ற தொழிலாளி நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த திங்கட்கிழமை மேசன் தொழிலாளியான நாவாந்துறையைச் சேர்ந்த அன்னராசா தபீபன் என்ற இந்த இளைஞர் மின்சாரக் கம்பியின் மீதும் வீழ்ந்தே நிலத்தில் சரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த பிரஸ்தாப இளைஞர் நேற்றுக் காலை மரணமானார்.

இச்சம்பவம் குறித்து யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

## சிலாபத்தில் விபத்து ஒருவர் பலி; 12 பேர் காயம்

கொழும்பு, ஜன. 13

பாடசாலை மாணவர்கள் பயணித்த வான், லொறி ஒன்றுடன் நேருக்நேர் மோதியதில் வானின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விபத்தில் 12 பாடசாலை மாணவர்கள் காயமடைந்த நிலையில், சிலாபம் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து சிலாபம் - ஆராச்சிகட்டு பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியவில் இடம்பெற்றுள்ளது என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

## 15வருடங்களின் பின் அரியாலை, பூம்புகாரில் இன்று மீள்குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.13

15 வருடங்களின் பின்னர் இன்று அரியாலை கிழக்கு, பூம்புகாரில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இன்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நல்லூர் பிரதேச செயலர் நா.செந்தில் நந்தனன், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் யோ.சாந்தசீலன், ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொள்வர்.

மீள்குடியேறவுள்ள அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ)

## வேட்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 16 பிரதேச சபைகளிலும் 3 நகர சபைகளிலும் நடைபெறவுள்ளன.

இதில் 6 லட்சத்து 96 ஆயி ரத்து 587 வாக்காளர்கள் வாக்க ளிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் 27ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் தேர்தல் நடைபெறும் திகதி, போட்டியிடும் கட்சிகள், நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் என்பன பற்றிய விவரங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)


### வேலையாள்கள் தேவை

பிரபல வியாபார நிறுவனமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

1. பொதி செய்வதற்கு
* 25 வயதிதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
* பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

2. காசாளர்
* ஆண், பெண், இருபாலாரும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்க முடியும்.

தொடர்பு: 601, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/574543)

### கோழிக் குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA No.1 புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★றாஜீவ். நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P.No: 0776090926, 0212222867

### வாகனம் விற்பனைக்கு

54 - XXXX செல் மொடல் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0776544707

### காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய இல: 0776146434

### விற்பனைக்கு

பெரிய ஜப்பான் லேத் (கற் கழற்றும் மொடல்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779182717

### வீடு வாடகைக்கு உண்டு

கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு, புலோலி மந்திகையில்

தொடர்புகளுக்கு: 0771549125, 0217911968


## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை ரத்தினகோபால்

(தெடுத்தனை ரத்தினம்)



தெடுத்தனை, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை ரத்தினகோபால் நேற்று முன்தினம் (11.01.2011) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் மார்க்கண்டு, அமரர் கணேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு, பொரளை மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (13.01.2011) நண்பகல் 12 மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சென்றல் சேவிஸ் ஸ்ரேசன், நெல்லியடி.*

தகவல்: க.செல்வராசா.

### மாணிக்கர் சுப்பிரமணியம்



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் சுப்பிரமணியம் நேற்று (12.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் சிதம்பரநாதர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதலீலா, மனோரதிதேவி, மனோகரகாந்தன் (லண்டன்), மனோபவானி (ஆசிரியர், யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்), மனோரஜனி (கனடா), ஜெகதீசன் (குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசதுரை, ஜெயகுமாரி (லண்டன்), திருநந்தகுமார், சரவணபவன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் சுதர்சன் (பொலிஸ் உத்தியோகத்தர்), தனீபன், கனிதா, கஜீபன், கெயின், கிரிதரன், சுகிர்தன், பிரதீபன், ஜீவனா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வரணி, இயற்றாலை, வரணி.*

தகவல்: குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பிரதேச செலயகத்தில் கடமையாற்றும் சக சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி ச.ஸ்ரீறஜனி அவர்களின் அன்புத் தந்தை

### சங்கரப்பிள்ளை நடராசா

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மன்றம், பிரதேச செலயகம், உடுவில்.

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 15.12.2010 புதன்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் வல்லிபுரம் தர்மரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.01.2011) வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரண நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"மோட்டஞ்சீமா",
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் வேலும்மயிலும் B.Sc.

(இளைப்பாறிய ஆசிரியர்)



வடமராட்சி, கொக்காம்பாளை, கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மருதனார்மடம், சுன்னாகம், கே.கே.எஸ். வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சண்முகம் வேலும்மயிலும் நேற்று (12.01.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் திருமதி பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் ராஜ்மோகனின் (கணக்காளர்) அன்புத் தந்தையும் திருமதி சுபத்திரா ராஜ்மோகனின் மாமனாரும் காலஞ்சென்ற திருமதி சரவணமுத்து நாகம்மாவின் தம்பியும் திருமதி துரைசிங்கம் அன்னம்மாவின் அண்ணனும் காலஞ்சென்ற திருமதி நல்லம்மா மற்றும் செல்வி தங்கம்மா, செல்வி முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிருஞ்சன், ஆரவி, பானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதனார் மடம், சுன்னாகம்.*

தகவல்: வே.ராஜ்மோகன் (மகன்).
T.P. 021 3007962

### திருமதி மாயா முருகையா (தொல்புரம்)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு அண்டர்சன் தொடர்மாடியை (R1/5) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாயா முருகையா இந்தியாவில் சென்னை T Nagar இல் 10.01.2011 திங்கட்கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும் தொல்புரம் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிப்பிள்ளை பகவதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பச்சி - வைத்திலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் வைத்திலிங்கம், ஸ்ரீ காந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ராதாகிருஷ்ணன், பாலக்கிருஷ்ணன், முத்துக் கிருஷ்ணன், மாயவக்கிருஷ்ணன், சாந்தினி ராஜேந்திரன், ரோகிணி விஜயகுமார், ராமகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேனகா, கன்னிகா, கோசலை, கலைவாணன், கலைவாணி ஆகியோரின் பாசமுள்ள அன்புத் தாயாரும் பாஸ்கரன், சிவசோதி, சதீஷ்குமார், விஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தாரகி, தாரணி, ஆதித்யன், சயன், ஆரதி, அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் வைதேகியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2011) வியாழக்கிழமை காலை சென்னை பெசண்ட் நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலைவாணன் முருகையா
0091 9841311526,
0091 9841311592.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாதிக்கப்பட்டோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்பது லட்சத்து 60ஆயிரத்து 757பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெரும் அனர்த்தத்தால் வடக்கு, கிழக்கில் 18பேர் மரணமடைந்துள்ளனர். 49பேர் காயமடைந்துள்ளனர். மட்டக்களப்பில் இரண்டு பேர் காணாமற் போயுள்ளனர்.

நாடு முழுவதும் 502 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 52ஆயிரத்து 392பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்புதான் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவுள்ளது.

5லட்சத்து 33ஆயிரம் பேர் அங்கு பாதிக்கப்பட்டுள்ளனர். 225 முகாம்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு லட்சத்து 22ஆயிரம் பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 7பேர் மரண மடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 88ஆயிரத்து 376பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டுபேர் மரணமடைந்துள்ளனர். 49முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 28ஆயிரத்து 744 பேர் அவற்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் 31ஆயிரத்து 374 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எவரும் மரணிக்கவில்லை. 98 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 30ஆயிரத்து 965 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவையில் 10ஆயிரத்து 862பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 77முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வீதிகள் பாதிக்கப்பட்டு போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் பொலிஸாரும் முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர். படகுகளும் ஹெலிக்கொப்டர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வது மிகவும் சிரமமாகவுள்ளது. இதற்காக நாம் அங்கு படகுகளை அனுப்பியுள்ளோம் - என்றார். (ஒ-சி)

A/L 2012

வர்த்தகப் பிரிவு

தரர இ. மாணவர்களின்நலன் கருதி அமைதியான சூழலில், கற்றலுக்கேற்ற கால நேரத்தில் தொடர்ச்சியான வகுப்புகள்

| பாடம் | நேரம் |
|---|---|
| பொருளியல் | 8-9am |
| வணிகக் கல்வி | 9-10am |
| கணக்கீடு | 10-12am |

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.

Jaffna College Undergraduate Dept.

464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை

*Pharmasist (EXTERNAL) Examination course*

*(Ceylon Medical College Council, University of Colombo)*

கல்வித் தகைமைகள்:- GCE O/L ஆங்கில பாடம் சித்தி
GCE A/L இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சித்தி.

விரிவுரைகள்:- சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.30-பி.ப1.00 மணிவரை.

புதிய பிரிவுகள் ஆரம்பம்:-16.01.2011 ஞாயிறு (சி/574544)

பொது அறிவித்தல்
(PUBLIC NOTICE)

For Cable TV Operators

SUN TV KTV SUN MUSIC

ஆகிய செனல்களின் கேபிள் டிவியில் ஒளிபரப்புவதற்கான அனுமதி பெற்ற ஒரே நிறுவனம்

LBN
Lanka Broadband Networks Ltd.
மட்டுமே.

எங்களின் அனுமதியின்றி அல்லது வேறு வகையில் கேபிள் டிவியில் ஒளிபரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதை மீறுபவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

LBN Lanka Broadband Networks Ltd.
#241/32, Kirula Road, Narahenpita, Colombo – 05.
Tel: 5 300 300 | Fax : 4 517 220 | Jaffna Tel: 021 320 2000.
E-mail: indika@lbn.lk

### மோசமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஜனாதிபதி அங்கு வேண்டுகோள் விடுத்தார்.

அரசு தனது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைத் தனிமைப்படுத்தாமல் முழு நாடும் அவர்கள் மீது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஜனாதிபதியை வரவேற்க மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் மழையையும் பொருட்படுத்தாது காத்திருந்தனர். சில நிமிடங்களுக்குப் பின்னர் காலநிலை மோசமாக இருப்பதால் ஜனாதிபதியின் மட்டு. விஜயம் ரத்துச் செய்யப்பட்ட செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (ஒ-சி)

### கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாட்டு மத அனுஷ்டானத்துடன் அம்மக்களுக்கான உடனடி உரிய நிவாரணங்கள் கிடைக்கச் செய்வதே இன்றைய தேவையாகும்.

கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தொடர்ந்து அடைமழை பெய்து வரும் இன்றைய நிலையில், சில கிரா மங்களுடனான தொடர்புகள்கூட இல்லாது அவர்களுக்கான அனர்த்த நிவா ரணங்களைக்கூட முழுவீச்சில் செய்ய முடியாது அரச, தனியார் நிறுவனங்கள் தவிர்த்துக்கொண்டிருக்கும் நிலையில் அரச மட்ட பொங்கல் விழாக் கொண் டாட்டங்கள், இசை நிகழ்ச்சிகள் உண்மையான பொங்கல் பண்டிகைக்கான அர்த்தத்தை இழந்துவிடுவதாகிவிடும்.

விவசாயிகளின்மீது மிகுந்த அன்பும், அக்கறையும் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஜனாதிபதி என்ற வகையில் யதார்த்த சூழ்நிலைக்கேற்ப அம்மக்களுக்கு முழுவீச்சில் நிவாரணங் கள் வழங்கப்படுமானால், அதுவே அம் மக்களுக்கு பெரும் பொங்கலாக அமையும் என்பதில் ஐயமில்லை. மக்களோடு அனைத்து சூழ் நிலையிலும் மக்களுக்காக செயற்படும் ஓர் இந்துமத குரு என்ற அடிப்படையில் இக்கருத்தை தங்களுக்குத் தெரியப்படுத்துவதே எனது உண்மையான கடமையாகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலரை அணுகி அவர்களை வேட்பாளர்களாக நியமிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றன.

அதேசமயம், ஒரு கட்சி தமது கட்சியில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள சில கட்சிகளின் வேட்பாளர்களும் சுயேச்சை வேட்பாளர்களும் யாழ். தேர்தல் திணைக்களத்துக்குச் சென்று உதவி ஆணையாளரைச் சந்தித்து ஆர்வத்துடன் தேர்தல் விதிமுறைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-9-86)

A/L Day Class

LOGIC

(மீள் பரீட்சார்த்திகளுக்கானது)
(Mon, Wed, Thu, Fri 7-8 am)

BY:- P.கமல்தாசன்

NEC ஆனைப்பந்தி யாழ்.நகர்.

### வீதியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாங்க வந்தவர்களான கு.தில்லையம்பலம் (வயது 75) கை முறிந்த நிலையிலும் சு.சுரேஷ்கரன் (வயது 24) தலையில் காயத்துடனும் வாகனச் சாரதியான புங்குடுதீவைச் சேர்ந்த எஸ்.குகதாஸ் (வயது 26) சிறு காயத்துடனும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டாட்டா நிறுவனத்தின் 'படி' வாகனமே விபத்துக்குள்ளானது. வீதி மோசமான நிலையில் இருந்ததால் குண்டு, குழிகளைத் தவிர்க்க வெட்டி ஓடிய போது கட்டுப்பாட்டை இழந்து வாகனம் கவிழ்ந்ததாகக் காயமடைந்தவர்கள் கூறினர். (உ-3-86)

### பாழடைந்த... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணியில் காணப்பட்ட கிணற்றினுள்ளேயே சடலம் காணப்பட்டது. அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சடலம் அழுகி உருக்குலைந்திருந்தது என்று பொலிஸார் கூறினர். பொதி செய்யப்பட்ட சடலம் நேற்று மாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

உரும்பிராயில் காணாமற்போன நபரின் சடலம் அது என்றும் வேறு நபரின் சடலம் என்றும் பல்வேறு விதமான வதந்திகள் நேற்று உலாவியபோதும் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

''விசாரணைகள் தொடர்கின்றன. சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை'' என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (உ-3-86)

CHEMISTRY

S.Vasu A/L 2013

இரசாயனவியல் ஓர் அறிமுகம்
ஆரம்பம்:-15.01.2011 (4.00pm)

வகுப்பு நேரங்கள்
Batch - I சனி, ஞாயிறு (6.30-7.30am)
Batch - II திங்கள், புதன் (4.00-5.00pm)
Batch - III சனி, ஞாயிறு (2.00-3.00pm)

NEC பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி. யாழ்நகர்.

A/L வரலாறு M.Pathman M.A

2010 இல் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் என்னிடம் கற்று உயர் பெறுபேறு பெற்ற மாணவர்களை வாழ்த்துகிறேன்.

மாவட்ட நிலை 50 இனுள் பெற்றோர்

★ கெ.நிரேகா 9 ★ ரா.சிவாஜினி 8 (முஸ்லை) ★ கா.தர்மசுதி 17 ★ ஆ.சுபனா 23
★ பா.கஜநேசன் 26 ★ க.கஜேந்தினி 32 ★ ம.நிலானி 34 ★ சி.நிரோஜா 44

மேலும் A தரச் சித்தி பெற்றோர்

★ சி.சுகன்யா A ★ செ.நிசாந்தினி A ★ சு.சுகன்யா A ★ நி.வரதீஸ்வரி A
★ ச.ஜெனனிதா A ★ பு.கஜிந்தன் A ★ வி.டியூக்சினி A ★ ச.சிவானுஜா A
★ பு.நிரோசிகா A ★ ச.சிகலா A ★ சே.தர்சனா A ★ க.காயத்திரி A
★ த.தக்சனா A ★ கா.கஜரூபன் A ★ ச.ரேணுகா A ★ நா.திலுபா A

பாடம் மாறி 6 மாதங்கள் கற்று A சித்திபெற்றோர்
★ க.துஷ்யந்தினி A ★ அ.மதனகுமார் A

மேலும் B தரச் சித்தி பெற்ற 56 மாணவர்களையும் வாழ்த்துகின்றேன் 100% சித்தி

ஆசிரியர்: M.Pathman Dip.in Psy (Firstclass), B.A. (Hons) His. Spl, M.A.

Jaffna College Undergraduate Dept.

464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

AAT (Srilanka)

*Foundation, intermediate & Final*
*Medium:- English & தமிழ்*

க. பொ. த. (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்:-16.01.2011 ஞாயிறு (சி/574544)

நோயாளர் பராமரிப்பாளர் தேவை

எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்படி சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை.

* சம்பளம் (இரவு, பகல்)/ மாதாந்தம்-17000/=
* சம்பளம் (பகல் மட்டும்)-8500/=

தொடர்பு:-
சுகவாழ்வுக்கான பயணம்,
3ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம். T.P:- 0775148691. (108795)

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் - 2011

பாடசாலைக்குரிய வெளியீடு

ஆசிரியர் திரு. வே. அன்பழகன் அவர்களின் தரம் - 5 மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் வெளிவருகின்றன.

- 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை பாடசாலைக்குரிய முதலாவது பரீட்சை வினாத்தாள் வெளி வருகின்றது.
- தரம் - 4 மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்தும் மாதிரிப் பரீட்சை - 2011 வெளிவருகின்றது.
- பாடசாலைகளின் நன்மை கருதி விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்த வினாத்தாள்களைப் பெற்றுப் பயனடையவும்.

நேரடித் தொடர்புகளுக்கு, 0776569660

அன்பொளி கல்வியகம் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பொளி கல்வி நிலையம் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org